கிராம் பஞ்சாயத்து டெவலப்மெண்ட் பிளான் (ஜிபிடிபி) ஸ்பெஷல்

ஜூன்-ஆகஸ்ட், 2018

# கிராமோதய் சங்கல்ப்

மலர் 2, இதழ் 4

பஞ்சாயத்தி ராஜ்,
ஊரக மேம்பாடு
மற்றும் குடிநீர்
மற்றும்
சுகாதாரத்துறை
அமைச்சகங்களால்
வெளியிடப்படும்
ஒரு காலாண்டு
செய்தி இதழ்

## காந்திஜியின் கிராம சுயராஜ்யம் நிர்வாகத்திற்கும் அப்பால்

## கிராம பஞ்சாயத்து மூலமாக கிராமப்புற மகளிரின் முன்னேற்றம்

## ஜிபிடிபி வாழ்க்கையை எளிதாக்கி விட்டது, வளம் கொழிக்கும் கிராமங்களின் கனவு

## மக்களின் முன்னேற்றம் : மொபைல் ஏபிபி



“ மகாத்மா காந்தி எப்போதும் கிராமங்களின் முக்கித்துவத்தை வலியுறுத்திதோடு கிராம சுயராஜ்யத்தைப் பற்றியும் பேசினார்.
கிராமங்களின் மாற்றமானது, இந்தியாவின் மாற்றத்தை உறுதி படுத்தும்-பிரதமர் மோடி. ”



# பிரதமர்-

## கிராம சுயராஜ்யம் மூலமாக தேசத்தின் முன்னேற்றம்

> தேசம் இன்று தன்னம்பிக்கையில் நிரம்பி வழிகிறது. அது புதிய உயரங்களை தொடுகிறது - பிரதமர் மோடி
>
> **15 ஆகஸ்ட் 2018**

> கிராமங்களின் மாற்றமும், முன்னேற்றமும் இந்தியாவின் மாற்றத்தை உறுதிபடுத்தும், ஜன்தன், வன் தன், கோபர் தன் ஆகிய மூன்றும் பழங்குடியினர் மற்றும் வேளாண் சமூகத்தினரின் முன்னேற்றத்தை இலக்காக கொண்டிருக்கிறது.
>
> **24 ஏப்ரல் 2018**

> மகாத்மா காந்தி எப்போதுமே கிராமங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வந்ததோடு 'கிராம சுயராஜ்யம்' குறித்தும் பேசினார்: பிரதமர் மோடி
>
> **24 ஆகஸ்ட் 2018**

> ஓர் வலுவான, சுய சார்புள்ள நாடாக திகழ வேண்டும் என்பதே நம் விருப்பமாகும். முன்னேற்றப் பாதையில் தடைகளின்றி முன்னேறிச் செல்லும் தேசம், இந்தியர் என்றாலே உலகில் ஓர் நல்லெண்ணம் நிலவுகிறது. இது மட்டுமல்லை, இந்தியாவின் புகழ் உலகெங்கும் ஒளிர வேண்டும்- அத்தகைய இந்தியாவையே நாம் உருவாக்க விரும்புகிறோம்.
>
> **15 ஆகஸ்ட் 2018**

> ஒவ்வொரு இந்தியனுக்கும் தனக்கென சொந்தமாக ஓர் இல்லம் இருக்க வேண்டும்-அதுதான் அனைவருக்கும் இல்லம். அந்த இல்லங்கள் ஒவ்வொன்றும் மின் இணைப்பு வசதியை கொண்டிருக்க வேண்டும். அனைவருக்கும் மின்சாரம். ஒவ்வொரு இந்தியனுக்கும் புகையில்லாத சமையல் அறை இருக்க வேண்டும். அதனால்தான் அனைவருக்கும் சமையல் கியாஸ் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒவ்வொரு இந்தியனுக்கும் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் அளவிற்கு போதுமான தண்ணீர் கிடைக்க வேண்டும், அதனால்தான் அனைவருக்கும் தண்ணீர் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இந்தியனுடைய வீட்டிலும் கழிவறை வசதி இருக்க வேண்டும், அதனால்தான் அனைவருக்கும் சுத்தம்-சுகாதாரம் திட்டம் நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு இந்தியனுக்கும் தன் வசதிக்கேற்ப நல்ல சுகாதார வசதிகளை கிடைக்கச் செய்ய வேண்டும், அதற்காகத்தான் எல்லோருக்கும் ஆரோக்கிய திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இந்தியனுக்கும் தான் பாதுகாப்பாக இருக்கும் உணர்வை பெற வேண்டும். அவனுக்கு காப்பீடு இருக்க வேண்டும், அதனால்தான், அனைவருக்கும் காப்பீடு திட்டம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இந்த தாரக மந்திரங்களை முன் வைத்து நாம் இந்தியாவை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும்.
>
> **15 ஆகஸ்ட் 2018**

# பொருளடக்கம்



06 காந்திஜியின் கிராம சுயராஜ் யம் நிர்வகிப் பிற்கும் அப்பால்




15 கிராம அரசு தீர்மான சுய அதிகாரம்




32 மக்களுக்கு அதிகாரம் வழங்கல் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தில் மொபைல் செயலிகள்

**பஞ்சாயத்துத் துறை அமைச்சகம்**

| | |
|---|---|
| கிராம சுயராஜ் திட்டம் | 09-11 |
| ஜிபிடிபி வாழ்க்கையை சுலபமாக்கி விட்டது. வளம் கொழிக்கும் கிராமங்களின் கனவு நிஜமாகிறது | 12-14 |
| கிராம பஞ்சாயத்துகள் வாயிலாக கிராமப் புற பெண்களுக்கு சுயஅதிகாரம் | 16-18 |
| வெற்றிக் கதைகள் | 1920 |
| மக்கள் பங்கேற்பின் மூலமாக கிராம வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்துதல் | 21-22 |
| கிராம பஞ்சாயத்து மேம்ப்பாடு திட்டம் | 24-25 |

**ஊரக மேம்பாடு, அமைச்சகம்**

| | |
|---|---|
| சப்கா கிராம பஞ்சாயத்து | 23 |
| ஸீட் மதர் | 26-27 |
| தென்னாவா ஆக்ரோ | |
| பார்மர்ஸ் புரொட்யூஸர் கம்பெனி லிமிடெட் | 28 |
| சிறப்பான வாழ்க்கைக்கு கிராமத்தை பிங்க் ஜொராண்டாவாக மாற்றம் | 31 |

**குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம்**

| | |
|---|---|
| வெற்றிக் கதைகள் | 35 |
| உங்களுக்குத் தெரியுமா? | 41 |
| இந்தூர் ஊரக மாவட்டத்தின் துப்புரவுத் தூதுவர்கள்: சதுர்சிங்: மேடம் பட்டுனி | 45 |
| அண்மைக்கால நடவடிக்கைகளின் சுருக்கம் | 46 |


**ஆலோசனை போர்டு**

செயலர், பஞ்சாயத்துத் துறை அமைச்சகம்

செயலர், கிராம மேம்பாட்டுத் துறை அமைச்சகம்

செயலர், குடி நீர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகம்

**தலைமை ஆசிரியர்**

அமர்ஜீத் சின்ஹா

செயலர், பஞ்சாயத்து ராஜ் மற்றும் கிராம மேம்பாட்டுத் துறை அமைச்சகம்

**ஆசிரியர் குழு**

நிதி ஆலோசகர், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

இணை செயலாளர், கிராம மேம்பாட்டுத் துறை அமைச்சகம்

டைரக்டர் ஜெனரல், கிராமிய குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகம்

டைரக்டர் (I.E.C.), கிராம மேம்பாட்டுத் துறை அமைச்சகம்

டைரக்டர் (I.E.C.), குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகம்

டைரக்டர் (மீடியா), பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சகம்

**திரட்டி மொழியாக்கம் செய்தவர்**

ஜாக்ரன் பிரகாஷன் லிட்.



08 அசாதரணமான தலைவர் அடல் பிகாரி வாஜ்பாய்



36 வெற்றிக் கதைகள் குடிநீர் மற்றும் துப்புரவு



**நரேந்திர சிங் தோமர்**
**கிராமப்புற மேம்பாடு,**
**பஞ்சாயத்துராஜ் மற்றும்**
**சுரங்கத் துறை அமைச்சகம்**
**இந்திய அரசாங்கம்**
**க்ருஷி பவன், நியூ டில்லி**

# செய்தி

பஞ்சாயத்துகள் நமது அரசியல் சாஸனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற அமைப்புகளாகும். உள்ளாட்சி நிர்வாகத்தின் நோக்கம் பொது மக்களின் நலனை பேணிக் காப்பதாகும். பஞ்சாயத்துகளின் அரசியல் சட்ட பொறுப்பு, உள்ளூர் மக்களின் தீவிர ஆதரவுடன் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதிக்காக திட்டங்களை தீட்டி அவற்றை நடைமுறை படுத்துவதாகும். கடைக்கோடியில் இருக்கும் கடைசி மனிதனின் பங்கேற்பு மூலமாகத்தான் உள்ளாட்சி நிர்வாகத்தின் வெற்றியானது கணிக்கப் படுகிறது. இந்த கண்ணோட்டத்தில்தான் கிராம் பஞ்சாயத் டெவலப்மென்ட் ப்ராஜக்ட்டை (ஜிபிடிபி) சிறப்பானதாக்கி ஒவ்வொரு குடிமகனையும் அதில் பங்கேற்கச் செய்வதை உறுதி செய்யும் நோக்கில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு அக்டோபர் 2, 2018 முதல் இந்திய அரசாங்கம் மக்களிடையே தீவிரமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் திட்டத்தை தொடங்கியுள்ளது. இந்த மகத்தான திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டிற்கான ஜிபிடிபி-யை விரிவாக தயாரிப்பதற்காக பல்வேறு அமைச்சகங்களுக்கிடையே ஓர் ஒருங்கிணைப்பை உருவாக்கவும் ஓர் செயல் திட்டம் தயாரிக்கப்பட விருக்கிறது. இத் திட்டம் டிசம்பர் 31, 2018 வரை தொடர்ந்து செயல்படும். பஞ்சாயத்துகள் அனைத்தும் தங்கள் உள் மற்றும் வெளிப்புற ஆதார வசதிகளை முறையாக நிர்வகித்து, கிராம மக்களின் ஒப்புதல் மற்றும் முழு ஒத்துழைப்புடன் திட்டத்தை தீட்டும்படி நாங்கள் எதிர்பார்ப்பதோடு, அதை நடத்தி முடிக்குமாறும் அவற்றை கேட்டுக் கொள்கிறோம். ஜிபிடிபி-யின் கீழ் தயாரிக்கப்படும் திட்டங்களால் கிராமங்கள் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வளம் பெறும் என்று நான் நம்புகிறேன். நாம் இந்த புதுமையான பழக்கங்களை விவசாயம், மாற்று எனர்ஜி, தண்ணீர் நிர்வாகம், சுத்தம்-சுகாதாரம் திறன் வளர்ச்சி மற்றும் தொலை தூர கிராமங்கள் தொடர்பான விஷயங்களில் ஜிபிடிபி அமைப்பின் வாயிலாக புகுத்த வேண்டியுள்ளது. இதைப் பொறுத்தவரை, சிறப்பாக தீட்டிய திட்டம் மற்றும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட நிர்வாகம் ஆற்றல் மிகு இந்தியாவை உருவாக்குவதில் நாம் எடுத்து வைக்கும் முக்கியமான காலடியாகும். அடிப்படை மந்திரமான-"அனைவருடன் சேர்ந்து அனைவருக்கும் வளர்ச்சியின் கீழ்" வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் முக்கிய அம்சத்தில் எல்லா கிராமத்தினரையும் இணைக்கச் செய்வது நமது இலட்சியமாகும். கிராம சபைகள் மற்றும் கிராம பஞ்சாயத்துகளின் செயல்களில் தங்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தின் விழிப்புணர்ச்சியை சாமான்ய மக்களிடையே ஏற்படுத்தும்போதுதான் உள்ளாட்சி நிர்வாகம் ஆற்றல் மிக்கதாகவும், வலுப்பெற்றதாகவும் அமையும் என்பதை நாம் தெளிவாக நம்புகிறோம். பஞ்சாயத்து பிரதிநிதிகள் ஆகிய நீங்கள் ஒவ்வொருவரும் தேசத்தின் வளர்ச்சிக்காக உங்கள் விலை மதிப்பற்ற பங்களிப்பையும், தீவிரமான ஒத்துழைப்பு மற்றும் உற்சாகமான பங்களிப்பை- அனைவரின் திட்டம், அனைவரின் வளர்ச்சியின் அடிப்படையைக் கொண்டிருக்கும் விஸ்தீரணமான ஜிபிடிபி-யை நிர்மாணிக்க வழங்க வேண்டும் என்பதே என் ஆவலாகும், மற்றும் அதுவே எனது வேண்டுகோளாகும்.

ஜெய் ஹிந்த்

(நரேந்திர சிங் தோமர்)



**விவசாயம், விவசாயிகளின் நலன் துறை அமைச்சகம், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் இணை அமைச்சர்**
**இந்திய அரசாங்கம்**

# செய்தி

எந்த பாகுபாடும் இல்லாமல் சமத்துவத்தின் அடிப்படையில் சமுதாயத்தை நிர்மாணிக்கும் கருத்தானது நமது அரசியல் சாஸனத்தின் இதயமாக திகழ்கிறது. இந்த மையக் கருத்தை செயல்படுத்த, அரசியல் சட்டத்தின் 72வது சட்ட திருத்தம் பஞ்சாயத்தி ராஜ் அமைப்புகளுக்கு மறுவலுவூட்டம் தர வேண்டும். சிறப்பான நிர்வாகம் என்பதோடு மட்டுமின்றி, பொதுமக்களின் நலனுக்காக அவர்களின் தேவைகள் மற்றும் ஆசைகளை நிறைவு செய்யும் நோக்கில் வளர்ச்சித் திட்டங்களை தீட்டி, அவற்றை செயல்படுத்தி கண்காணிக்கும் பொறுப்புகளையும் அளித்துள்ளது. கிராம் பஞ்சாயத்து விகாஸ் யோஜனா (ஜிபிடிபி), ஓர் பங்கேற்பு புராஜக்டாகவும் கணிக்கப் படுகிறது. இதன் வாயிலாக, கிராம பஞ்சாயத்து, கிராத்தின் அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்காக திட்டங்களை தீட்ட முடியும் என்பதோடு மட்டுமின்றி அதோடு கிராம சபாக்களின் மூலமாக சிறிய அல்லது பெரிய வளர்ச்சி திட்டங்களையும் தீட்ட முடியும்.

தற்போதுள்ள மத்திய அரசாங்கம் 1-வது பைனான்ஸ் கமிஷனின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்காக, தங்கள் விருப்பம்போல் செயல்படுவதற்கான அசல் அதிகாரத்தை வழங்கியுள்ளது. முன்பெல்லாம் இந்த தொகையானது மாவட்ட, வட்டார மற்றும் கிராம பஞ்சாயத்துகளின் ஒப்புதலால் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 14-வது ஃபைனான்ஸ் கமிஷனின் பரிந்துரைகளுக்கு ஏற்ப, இந்த ஒதுக்கீடானது கிராம பஞ்சாயத்துகளுக்கு மட்டுமையானதாகும். 14-வது ஃபைனான்ஸ் கமிஷனின் பரிந்துரைகளின்படி, கிராம பஞ்சாயத்து வளர்ச்சி திட்டங்களை தயாரிப்பது நிதியை பெறுவதற்கு தவிர்க்க முடியாததாக்கப்பட்டது.

நீண்ட கால அடிப்படையில் அளவீடுகள் மற்றும் சவால்களை பார்க்கும்போது நாம் ஜிபிடிபி-யில் தரமான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் மற்றும் சுய உதவிக் குழுக்களையும் உடன் சேர்த்து மகளிர் முன்னேற்றம் மற்றும் நீடித்த வளர்ச்சி, முன்னேற்றம் ஆகிவற்றை கருத்தில் கொண்டு ஜிபிடிபி-யை தயாரிப்பது அவசியமாகும். ஜிபிடிபி-யை பயனுள்ள வகையில் செயல்படுத்தும்போது, கிராமத்தின் முன்னேற்றத்தோடு சேர்ந்து வேலை வாய்ப்பு வசதிகளும் உருவாகும். புராஜக்டுகளின் மேற்பார்வை மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதில் ஒளிவு மறைவற்ற தன்மையால் ஏழ்மை குறையும். மற்றும் கல்வி, ஆரோக்கியம், சுத்தம்-சுகாதாரம், குடிநீர், போஷாக்கு, உணவு பாதுகாப்பு, நீடித்து நிலைக்கும் வாழ்வாதாரம், குடியிருப்பு, மின்சாரம், ஆண்-பெண் சம அந்தஸ்து மற்றும் சமூக நீதியில் நாம் கொண்டுள்ள இலக்குகளை சாதிக்க முடியும்.

14-வது ஃபைனான்ஸ் கமிஷனின் நிதி ஒதுக்கீடானது கிராமப் புற இந்தியாவின் வளர்ச்சியின் இயல்பில் ஒரு முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அதேபோல், விஸ்தீரணமான மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட கிராம பஞ்சாயத்துக்கும் வழி வகுக்கப்பட்டது. பஞ்சாயத்தி ராஜ் அமைச்சகத்தின் ஈடிணையற்ற தொடர்ச்சியான முயற்சியின் விளைவால் இன்று நது கிராம பஞ்சாயத்துக்கள் அந்தந்த மாநிலங்களின் ஒத்துழைப்புடன் எடஈட-க்கான தயாரிப்புகளை பெருமளவு எண்ணிக்கையில் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளன. அனைவருடன், அனைவருக்கும் வளர்ச்சி, மற்றும் நேர்மையான நோக்கம், அனைவருக்கும் வளர்ச்சி போன்ற விஸ்தீரணமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி போன்றவற்றின் மந்திரங்களின் மேல் நாம் கடந்த ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தை நோக்கும்போது ஜிபிடிபி-யை நாம் இன்னும் ஆற்றல் மிக்கதாகவும், வெளிப்படையானதாகவும் மற்றும் துல்லிய நோக்கங்களைக் கொண்டதாகவும் ஆக்கும் நேரம் இதுவேயாகும். சிறப்பான தரமுள்ள கிராம பஞ்சாயத்து டெவலப்மன்ட் புராஜக்டை உருவாக்கவும், நமது மக்களின் பங்கேற்பு அதிகரிப்பதை உறுதி செய்து கொள்ளவும் இந்திய அரசாங்கம் அக்டோபர் 2, 2018 அன்று தொடங்கி, டிசம்பர் 31, 2018 வரை ஒரு கேம்பெய்னை உருவாக்க திட்டமிட்டிருக்கிறது. இந்த மகத்தான மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் கேம்பெய்னில் பதினெட்டு அமைச்சகங்கள் மற்றும் அரசு துறைகளின் திட்டங்களை செல்படுத்துவதற்காக, ஓர் ஒருங்கிணைந்த செல் திட்டம் தயாரிக்கப்பட உள்ளது. எனவே நீங்கள் அனைவரும் பஞ்சாயத்து அமைப்பு பிரதிநிதிகளா பங்கேற்று புதிய இந்தியாவை உருவாக்க இந்த திட்டங்களை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நல்வாழ்த்துக்கள்

(புருஷோத்தம் ருபாலா)

# காந்திஜியின் கிராம சுயராஜ்யம் நிர்வகிப் பிற்கும் அப்பால்



**சுயராஜ்யம் என்ற சொல், இந்திய சுதந்திர போராட்டத்தின் இரண்டற கலந்த வார்த்தையாகும் மற்றும் இது பல்வேறு அர்த்தங்களில் உருமாற்றம் பெற்றுள்ளது. ஹோம்-ரூல் மற்றும் சுய நிர்வாகம் அரசியல் தலைவர்களால் வலியுறுத்தி பேசப்படும் பொதுவான அர்த்தம் தரக் கூடிய வார்த்தைகளாகும். ஆனால் மகாத்மா காந்தி அவர்களுக்கு சுயராஜ்யம் என்ற சொல்லானது அரசியல் விஷயத்துக்கும் மேலான ஓர் முக்கியமான விஷயமாகும்.**



1909-ம் ஆண்டு கப்பலில் பயணித் தவாறு ஹிந்து ஸ்வராஜை பற்றி அவர் எழுதும்போதும் கூட, இந்தியாவுக்கு முற்றிலும் வித்தியாசமான சுயராஜ்யம் தேவை என்றே எழுதினார்-தன்னைத் தானே சுயமாக அரசாள்வது, அதாவது சுயாட்சியை எட்டுவதற்கு முன்பாகவே அதை பெறுவது. இந்த கருத்து, அது கிராம ஸ்ராஜ்யமாகவே இருந்தாலும் சரி, ஸ்வராஜ் பற்றிய அவரது கண்ணோட்டம் ஒருபோதும் அகன்றதே யில்லை. மகாத்மா காந்தியின் தீர்க்கதரிசனம் சமூகத்தில் சமுத்துவம், மத நல்லிணக்கம் மற்றும் செய்யும் தொழிலில் கண்ணியம் ஆகியவற்றை வலியுறுத் தியதோடு, அது ஒன்று மட்டுமே இந்த அகன்ற, பல்வேறு தரப்பினரை உள்ளடக் கிய நாட்டு மக்கள் தொகையிடையே ஏற்படும் இடைவெளி- யை நிரந்தரமாக இணைக்கும் இணைப்பு பாலமாகும். இதன் மூலம் நமது நிலைப்புத் தன்மைக்கு படைப்பாற்றல் மூலமாக பங்களிப்பை வழங்க முடியும்.

காந்தி இந்தியாவுக்கான ஓர் வலுவான கட்டமைப்பை பற்றி சிந்தித்தார். அது தன் சொந்த அதிகாரத்தில் சுயமாக செயல் படும் கிராமங்களை ஒன்று சேர்த்ததாக இருக்கும், ஆனாலும் இதர கிராமங் களுடன் வர்த்தகம் மற்றும் பண மாற்று, பண்ட மாற்றில் ஒன்றையொன்று சார்புடையதாக இருக்கும். நம் இந்திய தேசம் ஆரோக் கியமாக இருக்க வேண்டுமானால் அதன் ஒவ்வொரு பாகமும் ஆரோக்கியமாக இருப்பது மிகவும் அவசிம். கிராமங்கள் நவீனமயமாக்கப்பட வேண்டும். அதோடு அவைகள் வலுவான தேசத்தை உருவாக்கிட தனது தேவைகளுக்கு போதுமானதாக இருப்பதோடு, கிராம மக்கள் ஒழுக்கமாகவும், கண்ணியமாகவும் வாழ அனுமதிப்பதாக இருக்க வேண்டும். இதையேதான் பிரதமர் நரேந்திர மோடி பார்லியமெட்டில் தான் ஆற்றி முதல் உரையில் குறிப்பிட்டு பேசினார். அவரது ஒவ்வொரு வார்த்தையும் ஹிந்த் ஸ்வராஜைப் பற்றியதாகவே இருந்தது. காந்தி எதை தனக்குத்தானே சுய நிர்வாகம் என்று குறிப்பிட்டாரோ அதையே மோடி ஒருவர் எந்த வேலையை செய்தாலும் சரி, அதில் ஒழுக்கமும் தேசத்தின் மீது பற்றுதலும் இருக்க வேண்டும் என்றார்.

இந்த தனக்குத்தானே சுயாட்சி என்பது, தனி நபரிடமிருந்து தேசம் முழுவதிலும் திரண்டோடுகிறது. ஒவ்வொன்றும் தனது திறமையை எட்டுவதோடு கண்ணியமான வாழ்க்கையை ஒவ்வொருவரும் வாழ வேண்டும். மிகச்சிறிய யூனிட் ஓர் நபராக இருக்கையில், மிகச்சிறிய அரசியல் மற்றும் பொருளாதார யூனிட் கிராமமாக இருத்தல் வேண்டும். வர்த்தகம், கல்வி மற்றும் தன்னிறைவு ஆகியவை உள்பலத்தை அதிகரிப்பதின் மூலமாக நிச்சயப் படுத்தப் பட வேண்டும்.

மக்களின் திறமைகள் ஊக்குவிப் பதாகவும் மற்றும் கல்வியானது அவர் களை மையமாக கொண்டிருப்பதாகவும் இருந்திடல் வேண்டும். இவ்வாறாக ஒரு கைவினைஞனின் மகன், தன் வாழ்க் கைக்கு தேவையானதை ஈட்டும் திறனாளி யாக இருப்பான் அதோடு கூடுதலாக ஏதாவது கல்வியறிவும் அவனுக்கு கிடைக் கும். தொழில்நுட்பம் வேலைவாய்ப்பை அதிகரிப்பதாக இருந் திருக்க வேண்டும் மற்றும் ஒருவரின் வாய்ப்பை மற்றவர் தட்டிப் பறிக்க கூடாதவாறு இருந்திருக்க வேண்டும். இதுவே பரவலாக்கி பன்முகப் படுத்தலின் மாடலாகும். இந்த பாதையை சுதந்திரம் கிடைத்த பிறகு நாம் உடனே தவற விட்டு விட்டோம். காந்தி தேன்கூடு போன்ற கட்டுமானத்தைக் கண்டார் அதில் ஒவ்வொரு கிராமமும் ஏராளமான வற்றுடன் தொடர்புடைதாக இருந்தது. ஒருசில நகரங்கள் மட்டுமே நவீன வளர்ச்சியின் முனைகளாக இருந்தன.

நாம் வித்தியாசமான பாதையில் நடக்க ஆரம்பித்தோம். நகரங்களுக்கு முக்கியத் துவம் அளிக்கப்பட்டதால் கிராமங்கள் அலட் சியப் படுத்தப் பட்டன. நகரங்களின் வளர்ச்சி கிராமங் களின் வளர்ச்சியை சீர்குலைத்து விட்டது. நகரங்களை நோக்கி கிராம



மக்களின் குடிபெயர்ச்சி அவர்களை திறன்களை குன்றச் செய்ததோடு, தொழில் ரீதியாக அவர்களுக்கு இருந்த அறிவாற்றலை குறைத்ததோடு பட்டங்கள் அவர்களின் திறமைகளை உறையாடி விட்டன. விவசாயியின் மகன், பிஏ படிப்பை முடித்து விட்டு நகரத்தில் கூலி வேலை கிடைத்தாலும் பரவாயில்லை அந்த வாழ்க்கையே போதும் என்று நினைத்து நகரத்துக்கு இடம் பெயர்ந்தான். நகரத்தின் இழிவான வாழ்க்கை கூலி வேலையாக இருந்தாலும் கிராமத்தில் கண்ணிய மான வாழ்க்கையை விட அவனுக்கு இனித்தது. இந்த விளைவின் குழப்பமே இப்போதும் இந்தியாவை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இதன் மூல காரணம் கடினமாக வேலை செய்வதில் கண்ணியம் குறைந்ததால் ஏற்பட் டதாகும்.

குடிசைத் தொழில், பாரம்பரிய கைவினைஞர்கள் மற்றும் ஊரகத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் கள் காந்தியின் கிராம சுயராஜ்யத் திலிருந்து பெறப்பட்டவையாக இருந்த போதிலும் உண்மையில் அது பேப்பரில் எழுதப்பட்டதோடு அப்படியே நின்று விட்டது. கிராமத்தின் படிப்படியான வீழ்ச்சி இந்தியாவில் சுய மரியாதை மேலும் குன்றி வீழ்ச்சியுற்றது. இது 1946-ல் மகாத்மா காந்தி தான் கண்ட கண்ணோட்டத்திற்கு எதிர்மாறாகி விட்டது.

'சுதந்திரம் அடிமட்டத்திலிருந்து தொடங்குகிறது. ஒரு சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். அதில் ஒவ்வொரு கிராமமும் சுயமாக நிலைத்து தாக்குப்பிடித்து நிற்க கூடியதாகவும், தனது விஷயங்களை தானே நிர்வகிக்கும் திறன் கொண்டதாக இருக்க வேண்டும். அதன் மீது தாக்குதல் முயற்சிகள் எதுவாக இருந்தாலும் சரி அதை எதிர்த்து தாக்குப் பிடிப்பதற்காகவும் தன்னை தற்காத்துக் கொள்ளவும் கிராமங்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு தயார் படுத்தப்பட வேண்டும். அதில் சார்பு நிலை மற்றும் அக்கம் பக்கத்திலிருந்தும் வெளி உலகத்திவி ருந்தும் உதவி பெறுவதை சேர்க்க கூடாது. பரஸ்பர ஃபோர்ஸ்களிடையே சுதந்திரமான மற்றும் தன்னிச்சை யானதாக இருக்க வேண்டும். கணக்கற்ற கிராமங்களை ஒன்றாக கொண்ட கட்டமைப்பில். எப்போதும் விஸ்தீரணமாகிக் கொண்டிருக்கும், ஒருபோதும் ஏறுமுக சுற்றாக வளர்ச்சியானது அடிமட்டத்தின் தாக்குப் பிடிக்கும் தன்மையால் சிகரமாக திகழும் பிரமிடாக இருக்கக் கூடாது. ஆனால் இது கடலளவிலான ஓர் வட்டமாகும் மற்றும் அதன் மையம் தனி நபராகும். ஆகவே எல்லாவற்றின் வெளிப்புறமான சுற்று வட்டம் உள் வட்டத்தை அடக்கும் சக்தியைக் கொண்டிருக்கக் கூடாது, மாறாகது அதற்குள் இருக்கும் அனைத்திற்கும் பலத்தை அளித்து தன் சுய பலத்தை அதிலிருந்து பெற வேண்டும்.

மகாத்மா காந்தி கண்ட இந்திய கிராமத்தை புனரமைப்பது என்பது மிகவும் கடினமான செயலாகும் காரணம் நிலைமை மாற்றியமைக்க முடியாத அளவுக்கு மாறி விட்டது. கிராம-நகர இந்தியாவின் கம்பீரம் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டு விட்டது. இருந்தும் கிராமங்கள் வளர்ச்சியில் மேலோங்கிக் கொண்டுதான் இருக் கின்றன. கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில் துறை, கல்வி வசதிகள் மற்றும் திறன் அடிப்படையிலான வேலைகளுக்கு உக்குவிப்பு ஆகியவை இப்போதும் கூட செயல்படுத்தப் படுமானால், கிராமங்கள் காப்பாற்றப் படும். ஆனால் கிராமத்தினரும், அதிலும் குறிப்பாக இளைஞர்களும் இந்த பண்பாட்டு சித்தாந்தத்தில் தங்களுக்கு சுய மரியாதை கிடைக்கிறது என்று உணர்ந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். கிராமத்தை நோக்கி பயணம், அங்குள்ள மக்களுக்கு ஓர் கண்ணியமான வாழ்க்கையை அளித்தால் மட்டுமே மீண்டும் தொடங்கும். அது பொருளாதார ரீதியாக வளமை யாகும். அங்கே நவீனத்துவத்துக்கும் பாரம்பரியத்துக்கும் இடையிலான இடைமுகம் மரியாதைக்குரியதாக இருக்க வேண்டும். கிராமப்புற மக்களின் உற்பத்தி நாட்டின் வாழ்க்கில் கிரகித்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த இடைமுகத்தில் மகாத்மா காந்தியை நாம் மீண்டும் காண்பது கட்டாயமாகும். ஏனென்றால் அவர் செய்யும் வேலையின் கண்ணியத்தைக் குறித்து பேசினார். சுதந்திரமாக இருக்கும் அதே வேளையில், ஒருவரையொருவர் சார்புடையவராக இருப்பத் அவசியம். மற்றவர்களிடம் மரியாதை காட்டும் அதே வேளையில் சுயம் தனக்கும் மரியாதை செலுத்த வேண்டும். அப்போதுதான் நம் ஒவ்வொருவருக்கும் சுயராஜ்யம் என்பது சாத்தியமாகும்.

**கிராமிய நகர்ப்புற இந்தியாவின் கம்பீரம் அடையாளம் காண முடியாத அளவுக்கு மாற்றப்பட்டு விட்டது என்ற போதிலும், கிராமங்கள் இன்னும் செழித்தோங்கிக் கொண்டு தானிருக்கின்றன. கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், கல்வி வசிதிகள் மற்றும் திறனை ஆதாரமாகக் கொண்ட வேலைகளுக்கு ஊக்கமளிக்க முடியுமென்றால் இப்போதும் கூட நமது கிராமங்களை நம்மால் காப்பாற்றி விட முடியும். ஆனால் கிராமவாசியும் அதிலும் குறிப்பாக இளைய சமூகமும் தங்களது பண்பாட்டில் சுமரியாதையை பெறுவதாக உணர்ந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.** ♦



**டா. அலோக் பாஜ்பாய்**
சைக்கியாட்ரிஸ்ட் மற்றும்
மேற்பார்வையாளர்-மகாத்மா
உடன் ஒரு மணி நேரம்
alokbajp@gmail.com



# அசாதரணமான தலைவர் அடல் பிகாரி வாஜ்பாய்

மகத்தான தலைவரை சரித்திரம் திடீரென்று உருவாக்கி விடுவதில்லை. தங்கம் போல் ஜொலிக்க வேண்டுமென்றால் அதற்கு ஏராளமான சவால்களையெல்லாம் தாண்டி, சிரமங்களையெல்லாம் கடந்து மீண்டு வர வேண்டும். முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் இன்னல்கள், இடையூறுகளையும் தாங்கிக் கொண்டு நாட்டின் நலனுக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்ட மாபெரும் தலைவர் ஆவார். ஆகவே அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் மிகவும் விசித்திரமான மனிதர் ஆவார். அவர் ஓர் ஒப்புயர்வற்ற தலைவராக இருந்ததோடு மட்டுமின்றி வெளி விவகாரத்துறையில் நிபுணராகவும் திறமைமிக்க நிர்வாகியாகவும் அவர் சிறந்த கவிஞராகவும், சிறந்த பத்திரிகையாளராகவும் திகழ்ந்தார். வாஜ்பாய் தொடர்ந்து ராஷ்டிரிய ஸ்வயம் சேவக் அமைப்போடு (ஆர்எஸ்எஸ்) தொடர்பில் இருந்தார். ஆர்எஸ்எஸ் ஜனசங்கத்தின் அரசியல் அமைப்பாக திகழ்ந்தது.மேலும் அவர் அந்த இயக்கத்தின் முதல் சேர்மேன் ஷியாமா பிரசாத் முகர்ஜியுடன் சேர்ந்து பணியாற்றிய வாய்ப்பையும் பெற்றிருந்தார். அதன்பின் அவருக்கு என்றும் இறங்கு முகம் ஏற்பட்டதேயில்லை. தன் சுய பலத்தில் அவர் தொடர்ந்து முன்னேறி சென்று கொண்டேயிருந்தார். சிறந்த எழுத்தாளராகவும் பத்திரிகையாளராகவும் திகழ்ந்ததால், லக்னோவிலிருந்து பிரசுரிக்கப்பட்ட ராஷ்டிரதரம் என்ற மாத இதழுக்கு ஆசிரியராகவும் விளங்கினார்.அவர் எப்போதுமே நாட்டின் பொருளாதார முன்னேற்றம், பின்தங்கிய குழந்தைகள் மற்றும் பெண்கள் நலனில் அக்கறை கொண்டவராக விளங்கினார். ஒரு சமூக சேவகர், சிந்தனையாளர், தலைவர், கவிஞர், பத்திரிகையாளர், பிரதமர் அதோடு பொதுஜனத்தைச் சேர்ந்த ஓர் தனிமனிதராக தன்னைப் பற்றி தன் சொந்த வார்த்தைகளில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் "எனது வாழ்க்கையை நான் முழுமையாக அனுபவித்தேன். என் விருப்பம்போலவே என் இறப்பும் இருக்கும், நான் மீண்டும் வருவேன். அதனால் இந்த மறைவு குறித்து நான் ஏன் கவலைப்பட வேண்டும்?" அடல் அவர்கள் எப்போதும் சமான்ய மனிதனின் இதயத்தில் வீற்றிருப்பார். அதற்குக் காரணம், கவரும் அவரது புன்னகை, மந்திரமாக கவர்ந்திழுக்கும் அவரின் வார்த்தைகள், அவர் எல்லோர் மீதும் செலுத்திய அளவு கடந்த பாசம். அவருக்கு எதிரிகள் யாரும் இருந்ததில்லை அவரின் அரசியல் எதிரிகள் கூட அவரது மேன்மைத்தனத்தை பெரிதும் மெச்சினார்கள். அதனால்தான் பாராளுமன்றத்தின் எதிர்கட்சி தலைவராக இருந்த போதிலும் அவர் இந்தியாவின் அயல்நாட்டு தூதுவர் குழுவின் தலைவராக இந்திரா அவர்களால் அனுப்பி வைக்கப் பட்டார். நாட்டின் பிரதமராக அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் சீனாவுடன் நட்பையும் நல்லுறவையும் பேணிக் காத்தார். அயல் நாட்டின் அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல்கள் இருந்தாலும் அதையெல்லாம் அலட்சியப்படுத்தி விட்டு தனது ராஜ தந்திரத்தையும் மன உறுதியையும் கையாண்டு பொக்ரானில் நியுக்ளியர் பரிசோதனை மற்றும் அணுகுண்டு பரிசோதனை செய்து சாதனைகள் புரிந்தார். கார்கில் போரில் பாகிஸ்தானை தோல்வியுறச் செய்தார். ♦



## சாதனைகள்

### பிரதமரின் கிராம சாலைகள் திட்டம்

அடல் அவர்கள் ஆகஸ்ட் 15, 2000-ம் ஆண்டிலிருந்து சாலைகள் மூலம் கிராமங்களை இணைக்க ஆரம்பித்தார். இவரது திட்டத்தின் மூலமாக லட்சக்கணக்கான கிராமங்கள் சாலை இணைப்பு வசதியைப் பெற்றன. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் 500-க்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட (மலைப் பகுதிகள் மற்றும் பாலைவன பகுதிகளைப் பொறுத்தவரை 250 மக்கள் தொகை கொண்டவை) மற்றும் சாலை இணைப்பு வசதியற்ற கிராமங்களை முக்கிய சாலைகளுடன் இணைப்பதாக இருந்தது.

### தங்க நாற்கர சாலைகள்

நாட்டின் மாநகரங்களை இணைக்கும் பொருட்டு, சாலைகளை அமைக்கும் பணி அடல் பிகாரி வாஜ்பாயின் ஆட்சி காலத்தில் ஆரம்பிக்கப் பட்டது. 5848 கிமீ நீண்ட தங்க நாற்கர சாலையானது அப்போது உலகின் மிகப் பெரிய நெடுஞ்சாலை திட்டமாக கருதப்பட்டது. டில்லி, கொல்கத்தா, சென்னை மற்றும் மும்பை மாநகரங்கள் நெடுஞ்சாலைகளுடன் இணைக்கப் பட்டன.

### அனைவருக்கும் கல்வி திட்டம்

அனைவருக்கும் கல்வி திட்டமானது, இந்திய அரசாங்கத்தின் மிகப் பெரிய திட்டமாகும். இத்திட்டம் குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் அனைவருக்கும் ஆரம்ப கல்வி வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 2001-2002ம் ஆண்டு அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களால் தொடங்கப் பட்டது.

### அந்த்யோதய் உணவுத் திட்டம்

2001-ம் ஆண்டு, இலக்கிடப்பட்ட பொது விநியோக திட்டத்தின் கீழ் வறுமை கோட்டுக்கும் கீழே வசிக்கும் ஏழை-எளியவர்களுக்காக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

# கிராம சுயராஜ் திட்டம்



**நரேந்திர சிங் தோமர்**
கிராம முன்னேற்றம், பஞ்சாயத்தி ராஜ் மற்றும் சுரங்க துறை அமைச்சர்,
இந்திய அரசாங்கம்

கிராம சுயராஜ்ய திட்டம், அரசின் நலத்திட்டங்கள் நமது நாட்டின் மிகவும் பின்தங்கிய ஏழை குடும்பங்களைச் சென்றடைய வேண்டும் என்பதை உறுதி செய்யும் நோக்கத்துடன், ஏப்ரல் 14, 2018 அன்று பாரத ரத்னா டா. பீம்ராவ் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளையொட்டி மாண்புமிகு பாரத பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கப் பட்டது. சமூக ஒற்றுமை மற்றும் நல்லுறவை பேணி பாதுகாக்க வேண்டும் மற்றும் பின்தங்கிய மற்றும் ஏழை எளியவர்களுக்காக கொண்டு வரப்பட்டிருக்கும் வளர்ச்சி திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இவற்றை பெறுவதற்கு தகுதியான பனாளிகளை இத்திட்டத்தின் கீழ் கொண்டு வந்து அவர்களை பயனடையச் செய்வது என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கிராம சுயராஜ்ய திட்டத்தின்போது, இந்த திட்டம் நூறு சதவிகிதம் பயனாளிகளை சென்றடைந்து அவர்களுக்கு பயனளிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் சிறப்பு முயற்சிகள் நாட்டின் 16.850 கிராமங்களில் மேற்கொள்ளப் பட்டன. கர்நாடகா மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களில் மாநில சட்டசபை தேர்தல்கள் நடைபெற்ற காரணத்தால் இம்மாநில கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இந்த திட்டத்தின் நோக்கம், இந்த ஏழு நலத்திட்டங்களும், குறிப்பிடப்பட்டிருக்கும் கிராமங்களிலுள்ள எல்லா பயனாளிகளுக்கும் நூறு சதவிகிதம் சென்றடைய வேண்டும் என்பதேயாகும். ஆகவே இத்திட்டத்தை வெற்றியடைச் செய்வதற்காக பயனாளிகளிடமிருந்து கணிசமான அளவுக்கு ஒத்துழைப்பும் முழுமையான ஒத்துழைப்பும் கிடைப்பது முக்கியமாகும். இந்த திட்டங்களை போர்க்கால அடிப்படையில் செயல்படுத் துவதற்காகவும் இதை வெற்றியடைச் செய்யவும், குறிப்பிடப்பட்டிருக்கும் பஞ்சாயத்தி ராஜ் அமைப்புகளைச் சேர்ந்த 33 லட்சம் பிரதிநிதிகள், மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த (எஸ்எச்ஜி) 5 மெம்பர்கள், சட்டசபை மற்றும் பார்லியமெண்ட் உறுப்பினர்கள் மாநில அரசாங்கம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் செயற்குழு உறுப்பினர்கள் ஒன்றிணைந்து நடைபெறக் கூடிய அனைத்தையும் மேற்கொண்டன. கிராம ஸ்வராஜ்ய திட்டத்தின் முக்கியத் துவம் மற்றும் அதன் வெற்றியைப் பற்றி குறிப்பிடுகையில் மாண்புமிகு பாரத பிரதமர் இவ்வாறு கூறினார்- "கிராம ஸ்வராஜ்ய திட்டத்தின் ஓர் பாகமாக. கிராமங்களில் பல்வேறு குழுக்கள் ஏற்படுத்தப் பட்டன, அவை மத்திய அரசாங்கத்தின் இந்த ஏழு திட்டங் களும் பயனாளிகளைச் சென்றடைய வேண்டும் என்பதை நிச்சயப் படுத்தின. இந்த இயக்கம் கிராமத்தில் வசிக்கும் மக்களின் வாழ்க்கையில் அவர்கள் வீட்டிலேயே அரசின் சேவைகள் பயனுள்ள வகையில் சென்றடைய வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் மிகப் பெரிய திட்டமாகும்" கிராம ஸ்வராஜ்ய திட்டத்தில் 1000க்கும் அதிகமான மக்கள் தொகையை




ஏப்ரல் 14, 2018 முதல் மே 5, 2018 வரை "கிராம் ஸ்வராஜ் அபியான் – எல்லோருடன், எல்லா கிராமத்துக்கும் எல்லோருக்கும் முன்னேற்றம்– எனும் திட்டமாக கொண்டாடப் பட்டது". மத்திய அரசின் கீழ்க்கண்டவை அந்த 7 முக்கிய திட்டங்களாகும். 1. பிரதமரின் உஜ்வலா யோஜனா, 2. உஜாலா யோஜனா 3. பிரதம மந்திரி ஜன் தன் யோஜனா, 4. பிரதம மந்திரி ஸஹஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா, 5. பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா 6. பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் 7. மிஷன் இந்திரதனுஷ்



கொண்டிருக்கும் கிராமங்கள் மற்றும் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட ஷெட்யூல்டு வகுப்பினரைக் கொண்டிருக்கும் கிராமங்கள் சேர்க்கப் பட்டன. வடகிழக்கு மாநிலங்களின் கிராமங்களைப் பொறுத்தவரை, 500க்கும் அதிகமான மக்கள் தொகையுடன் 50% க்கு அதிகமான ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் ஷெட்யூல்டு பழங்குடியைச் சேர்ந்த கிராமங்கள் இந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டன. கிராம ஸ்வராஜ்ய திட்டத்தின் முதல் கட்டமாக 16,850 கிராமங்கள் இதில் சேர்த்துக் கொள்ளப் பட்டன.

தேசிய தகவல் மையம் & டிஆர்டிஓ தேவைக்கேற்ப பயனளிக்க வல்ல தலைமை மற்றும் பயனளிக்கும் தலையீட்டுக்காக ரியல் டைம் புள்ளி விவரங்களை தயாரிக்கப் படுவதை உறுதி படுத்தியது. அதோடு கூடவே ஒரு மொபைல் ஹல்ல் கூட உருவாக்கப் பட்டது.

கிராம சுயராஜ்ய கேம்பெய்னின் முதல் கட்ட வெற்றியால் ஊக்குவிக்கப்பட்டு அரசாங்கம் ஜூன் 1, 2018 முதல் ஆகஸ்ட் 15, 2018 வரை கிராம சுயராஜ்ய கேம்பெய்னை நீட்டிக்கப் பட்ட கிராம சுயராஜ்ய திட்டமாக செயல்படுத்தியது. இந்த நீட்டிக்கப்பட்ட கிராம சுயராஜ்ய கேம்பெய்னில் தேவை வழங்கப்பட வேண்டிய 117 மாவட்டங் களிலுள்ள 1000 க்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட கிராமங்கள், கர்நாடகா மற்றும் மேற்கு வங்காளத்தில் 50%-க்கும் அதிகமான ஷெட்யூல்டு வகுப்பினரைக் கொண்ட 1000க்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் கிராமங்கள் சேர்க்கப்பட்டன. இவ்வாறு, மொத்தம் 48,929 கிராமங்கள் கிராம சுயராஜ்ய கேம்பெய்னின் இந்த கட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டன.

கேம்பெய்னின் இரு கட்டங்களிலும், மத்திய அரசின் 7 முக்கிய ஸ்கீம்கள் மற்றும் இலட்சிய திட்டங்களில் விடுபட்டுப்போன தகுதியுள்ள மக்களை கொண்டு வருவது சாதிக்கப்பட்டு இதில் வெற்றியானது எதிர்பார்ப்புக்கும் அதிகமானதாக அமைந்து விட்டது. இரண்டு கிராம சுயராஜ்ய திட்டங்களிலும், நீட்டிக்கப்பட்ட கிராம சுராஜ்ய கேம்பெய்னிலும் இந்த 7 முக்கிய ஸ்கீம்களுக்குள் முக்கியத்துவம் தரப்பட வேண்டிய 5 பகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. நீட்டிக்கப்பட்ட புராஜக்டின் கீழ் சிறப்பான பலன்களை எட்டிட விவசாயத்தில் பைலட் புராஜக்டுகள் அடையாளம் காணப் பட்டன. (உதாரணமாக, ஸாயில் ஹெல்த் கார்டு விநியோகம், பருப்புகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் அடங்கிய மினி கிட்டுகளை வழங்குதல் தோட்டக்கலை அல்லது மூங்கில் நாற்றுகளை நடுதல் போன்றவை சேர்க்கப்பட்டன). நீட்டிக்கப்பட்ட கிராம சுயராஜ்ய கேம்பெய்னின்போது, ஏராளமான முக்கிய புராஜக்டுகள் நூறு சதவிகித வெற்றியை எட்டின.

• பிரதம மந்திரி உஜ்வலா யோஜனாவின் கீழ், 48.28 லட்சம் புதிய கியாஸ் கனெக்ஷன்கள் கேம்பெய்னின் இரண்டு கட்டங்களிலும் நிறைவு பெற்றன மற்றும் 100 சதவிகித இலக்கும் எட்டப் பட்டது. இத்திட்டம் பயனுள்ள வகையில் செயல்படுத்தப்பட்டதால், மகளிருக்கு சுத்தமான ப்யூல் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நீண்ட கால காத்திருப்பு பூர்த்தியானது. இது பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனை பராமரிக்க உதவியது. இப்போது சமையலறை புகையின் உபாதைகளிலிருந்து விடுபட்டதோடு அவர்கள் அடுப்பு எரிக்க விறகை சேகரிக்க பாதுகாப்பற்ற பகுதிகளில் அலைந்து திரிய வேண்டிய அவசியமுமில்லை.

• பிரதான் மந்திரி ஸஹஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா-சௌபாக்யா, இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களைச் சேர்ந்த ஏழை-எளிய குடும்பங்களுக்கும், நகர்ப்புற ஏழை குடும்பங்களுக்கும் இலவச மின் இணைப்பு வசதி அளிக்கப் பட்டது. இந்த திட்டத்தின் கீழ், தங்கள் இல்லங்களில் இன்னமும் கூட மின் இணைப்பு இல்லாத தேசத்தின் கிட்டத்தட்ட 4 கோடி குடும்பங்களுக்கு இலவசமாக மின் இணைப்பு வசதியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டது. கேம்பய்னின்போது 31.26 லட்சம் வீடுகளுக்கு புதிய மின் இணைப்பு வசதி வழங்கப்பட்டது.

• பருவ மாற்றங்கள் மற்றும் சுற்றுச் சூழலை பராமரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ள நிலையில், இந்நாட்களில் எனர்ஜி சிக்கனத் திறன் மிக முக்கிய விஷயமாகி விட்டது. பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உஜாலா யோஜனாவை தொடங்கி வைத்தார். இத்திட்டம், ஜனவரி 5, 2015ல் சிக்கனமான எல்ஈடி பல்புகளின் உபயோகத்துடன் பிரகாசமான வெளிச்சத்தை அளித்தது. நாட்டில் உபயோகப்படுத்தப் பட்டு வந்த 770 மில்லியன் சாதாரண பல்புகளுக்கு பதிலாக எல்ஈடி பல்புகளின் உபயோகத்தை நிச்சயப் படுத்தும் நோக்கமாகும். அதிக மின் உற்பத்தியை பெருக்கும் நோக்கத்தால் மின் கட்டண பில் குறைந்தது. எனர்ஜி சேமிக்கப்பட்டது. எனர்ஜி சிக்கனத் திறன் கொண்ட எல்ஈடி பல்புகள் நாட்டின் கிராமப்புறங்களில் விநியோகிக்கப் பட்டன.

• தேசிய அளவில் ஃபைனான்ஷியல் இன்க்ளூஷனுக்கான வழியாக, பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா ஆகஸ்ட், 2014ல் தொடங்கப் பட்டது. குறைந்தபட்சம் ஒரு ஆரம்ப பேங்க் அக்கவுன்ட்டுடன் ஒவ்வொரு குடும்பமும் பேங்கிங் வசிதியை பெற வேண்டும் என்பதை உறுதி செய்யும் நோக்கத்தைக் கொண்டதாகும். இந்த ஸ்கீமின் கீழ், யார் வேண்டுமானாலும், ஏதாகிலும் ஒரு பேங்கின் பிரான்ச் அல்லது பேங்க் மித்ராவில் தங்களின் நோ யுவர் கஸ்டமர் அல்லது கெவைஸி விவங்களை அளிப்பதின் மூலம் ஒரு பிரைமரி சேவிங்ஸ் பேங்க் அக்கவுன்ட்டை தொடங்கலாம். ஜன் தன் அக்கவுன்ட்டை தொடங்குவதற்கு குறைந்தபட்ச பேலன்ஸை டெபாஸிட் செய்ய வேண்டியதில்லை அல்லது அக்கவுன்ட்டில் குறைந்தபட்ச பேலன்ஸை வைத்துக் கொள்ள வேண்டிய தேவையுமில்லை. ஜன்தன்

அக்கவுன்ட்தாரர்களுக்கு இலவச டெபிட் கார்டுகள் வழங்கப் பட்டதோடு அவர்களுக்கு ரூ.1 லட்சத்துக்கு விபத்து இன்ஷ்யூரன்ஸ் காப்பீடும் வழங்கப் பட்டது. கிராம சுயராஜ்ய கேம்பெய் னின் இரு கட்டங்களிலும் 71.53 லட்சம் புதிய ஜன் தன் அக்கவு-ன்ட்டுகள் தொடங்கப்பட்டன.

• மிகவும் குறைவான பிரீமியத்தை செலுத்துவதன் மூலம் ஆயுள் காப்பீட்டை வழங்குவதற்காக, நேஷனல் டெமாக்ரடிக் அலையன்ஸ் அரசாங்கம், பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம் தொடங்கப்பட்டது. 18 முதல் 50 வயதுக் குட்பட்ட அக்கவுன்ட் வைத்திருக்கும் அனைவரும் பிரதி ஆண்டுக்கு ரூ.2 லட்சம் காப்பீட்டுக்கு சேர்க்கப்பட் டனர். ஸப்ஸ்க்ரைபர் வருடந்தோறும் இதற்காக ரூ.330 பிரீமியமாக செலுத்த வேண்டும். இதில் ஏதாவது காரணத் தால் மரணம் சம்பவித்தால் காப்பீடு வழங்கப்படும். இதற்கான பிரீமியம் தொகையானது பயனாளியின் பேங்க் அக்கவுன் டிலிருந்து ஆட்டோமேடிக் காக டெபிட் செய்யப்பட்டு விடும். இதை ஆண்டு தோறும் புதுப்பித்துக் கொள்ள முடியும். கிராம சுயராஜ்ய கேம்பெய்னின் இரு கட்டங்களிலும் 50.43 லட்சம் மக்கள் பிரதம மந்திரி ஜீவன்ஜோதி பீமா யோஜனாவில் தங்களை இன்ஷ்யூர் செய்து கொண்டனர்.

• 18 முதல் 70 வயதிற்குட்பட்ட பேங்க் அக்கவுன்ட்தாரர்கள் அனைவருக்கும் விபத்தின் காரணமாக மரணம் அல்லது உடல் ஊனம் சம்பவித்தால் விபத்து இன்ஷ்யூரன்ஸ் காப்பீடாக ரூ. 2 லட்சம் வழங்கப் படுகிறது. இதற்கான வருடாந்திர பிரீமியம் ரூ.12 ட்டுமேயாகும். இந்த கேம்பெய் னின்போது 84.99 லட்சம் புதிய பயனாளிகள் தங்களை இந்த ஸ்கீமில் பதிவு செய்து கொண்டார்கள்.

• இலட்சிய திட்டமான மிஷன் இந்திர தனுஷ் இலக்கிடப்பட்டிருக்கும் கர்ப்பிணி பெண்களுக்கு டிசம்பர், 2018க்குள் 90% தடுப்பூசி போடும் நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. இந்த ஸ்கீமின் நோக்கம், இதுவரை தடுப்பூசி போட்டுக் கொள்ளாத அல்லது பகுதியளவு தடுப்பூசி போட்டுக்கொண்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தடுக்கக் கூடிய 12 நோய்களிலிருந்து நோய் எதிர்ப்புத் திறனை வழங்குவேதாகும். மிஷன் இந்திர தனுஷின் கீழ் தேவைப் படும் கிராமங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்து தரப்பட்டன. கேம்பெய்னின் போது வாரத்தின் எல்லா ஏழு நாட்களிலும் தடுப்பூசி போடப் பட்டது. கேம்பெய்னின் இரண்டு கட்டங் களிலும் 6.29 லட்சம் குழந்தைகள் மற்றும் 1.80 லட்சம் பெண்களுக்கு நோய் வராமல் தடுக்கும் தடுப்பூசிகள் தரப்பட்டன.




**வஞ்சிக்கப்பட்ட 63974 கிராமங்கள் புனரமைக்கப் பட்டன.**

பிரதமர் நரேந்திர மோடியின் சீரிய தலைமையின் கீழ், மத்திய அரசாங்கம் சாமான்ய மனிதனின் வாழ்க்கையின் பல்வேறு பரிணாமங்களில் முக்கிய மாக கவனம் செலுத்தி அவனை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கில் திட்பமான உறுதி மற்றும் மன உறுதியுடன் வேலை செய்கிறது. மேற்குறிப்பிட்ட எல்லா ஏழு நலத் திட்டங்களின் கீழ், நமது எதிர்பார்ப் புக்கு ஏற்ப, பலன்களை எட்டிட முடியும் மற்றும் சிலவற்றில் வெற்றியானது நமது எதிர்பார்ப்புக்கும் அதிகமாக இருந்தது. கிராம சுயராஜ்ய கேம்பெய்ன் மற்றும் நீட்டிக்கப்பட்ட கிராம சுயராஜ்ய கேம்பெய்ன் ஆகிய இரண்டுமே நலத்திட்டங்கள் சாமான்ய மனிதனை சென்றடைவதில் மகத்தான மற்றும் சரித்திர புகழ் பெற்ற திசையில் வெற்றி பெற்றுள்ளது நிரூபணமாகி உள்ளது. இந்த கேம்பெய்ன்கள் கிராமப்புற வாசிகள், ஏழை-எளியவர்கள், உதவி வேண்டுவோர், விவசாயிகள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினர் அனைவருக்கும் சலுகைகளையும் அவர்களுக்கான உரிமைகளையும் வழங்கியதோடு மட்டுமின்றி, முன்னேற்றத்தின் பாதையில் அவர்களை இணைத்து அவர்களும் சேர்ந்து பயணிக்க உதவியது. அரசாங்கம் லட்சோப லட்சம் ஏழை எளிய மக்கள் மற்றும் பின்தங்கிய மக்கள் வளமுடன் பாதுகாப்புடன் செழிப்புடன் வாழ வேண்டும் என்பதற்கு பாடுபடுவதற்கு உறுதி பூண்டுள்ளது. மேலும் இந்த இணைப்பு சங்கிலி இனி ஒருபோதும் நிற்கப் போவதில்லை ♦



## கிராமப்புற இந்தியாவின் புதிய உதயம்

# ஜிபிடிபி வாழ்க்கையை சுலபமாக்கி விட்டது, வளம் கொழிக்கும் கிராமங்களின் கனவு நிஜமாகிறது





**அமர்ஜீத் சின்ஹா**
செயலர், பஞ்சாயத்தி ராஜ் மற்றும் ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சகம், இந்திய அரசாங்கம்

கிராம பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டம் (ஜிபிடிபி) உண்மை- யான உணர்வில் கிராமிய இந்தியாவின் நலனுக்காக அடிமட்ட அளவில் முன்னேற் பெறுவதை உறுதி செய்து கொள்வதற்காக தொடங்கப் பட்டது. இம்முயற் சியானது, வறுமை ஒழிப்பு, மனித வள மேம்பாடு, சமூக முன்னேற்றம் பொருளாதார முன்னேற்றம் சுற்றுச்சூழல் மேம்பாடு, பொது விநியோக சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வது மற்றும் சிறப்பான நிர்வாகம் போன்று பல்வேறு நோக்கங்களைக் கொண் டுள்ளது.

தேசிய அளவில், கிராம பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டத்தை (ஜிபிடிபி) கொண்டு வருவதற்கான கருத்து 14-வது ஃபைனான்ஸ் கமிஷன் 2015-2020 க்கான கால கட்டத்தில் ரூ.2,00,292.20 கோடி நிதி ஒதுக்கீட் டுக்கு பரிந்துரைத்தபோது பிப்ரவரி 2015ல் நடைமுறைக்கு வந்தது. (13-வது ஃபைனான்ஸ் கமிஷனுடன் ஒப்பிடும்போது இது மும்மடங்கு அதிக மானதாகும்). பொருளாதார ரீதியிலான அதிகாரங்கள் கிராம பஞ்சாயத்துகளுக்கு வழங்கப் படுவதை நிச்சயப் படுத்திக் கொள்ளவும் கிராம அளவில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவற்றின் உபயோகத்தை உறுதிபடுத்திக் கொள்ளவும் வேண்டி தொடங்கப் பட்டது.

திட்டமிடும் செயலாக்கமானது, பொதுவாக தொழில்நுட்ப ரீதியிலா னதாக இருந்தது. இதற்கு இக்குறிக் கோளுக்காக ஒப்படைக்கப்பட்ட மக்க ளின் ஆதரவும். உதவியும் போதுமான அளவுக்கு தேவைப் பட்டது. எனவே, பஞ்சாயத்தி ராஜ் அமைச்சகம் இதில் பங்கேற்கும் அனைவருக்கும் பயிற்சி மற்றும் ஓரியண்டேஷன் சார்ந்த பயிற்சி முகாம்களை ஏற்படுத்தி நடத்துவதை உறுதி செய்து கொள்வதற்கு மிகவும் முக்கியமான மற்றும் கூட்டமைப்பு முயற்சிகளை மேற்கொண்டது. ஜிபிடிபி-யின் வழிகாட் டுதல்களை வடிவமைக்க உதவுவதற் காக மாநில அளவிலான முக்கிய குழுக்களை அமைக்குமாறு மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப் பட்டன. இந்த அமைச்சகம், ஜூலை 2015-ல் எல்லா மாநிலங்களுக்கும் 5-நாள் விஸ்தீரண ஓர்க்ஷாப்புகளை நடத்தியது. இதன் விளைவால், கடந்த மூன்று ஆண்டுகளாக நாடு முழுவதும், கிராம மேம்பாடு மற்றும் பஞ்சாயத்தி ராஜின் மாநில அமைப்புகள் மூலமாக விஸ்தீர ணமான பயிற்சி முகாம்கள் பஞ்சாயத்தி ராஜ் அமைச்சகத்தால் நடந்தேறியது.

கிராமங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துகளுக்கு அதிகாரங் கள் வழங்குவதில் நேரடியாகவோ அல்லது மறமுகமான தாக்கத்தைக் கொண்டிருக்கும் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் எல்லா நலத் திட்டங்களையும் ஒருங்கிணைப்பதில் முழு முயற்சி வலியுறுத்துவதற்காக பல்வேறு ஓர்க்ஷாப்புகள் ஏற்பாடு செய்து நடத்தப் பட்டன. 14-வது ஃபைனான்ஸ் கமிஷனின் விருது (எஃப்எஃப்ஸி) பஞ்சாயத்து அளவிலும் அதன் தலைமை பொறுப் புக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளையும் சேவைகளையும் வழங்கு வதற்காக ஒருங்கிணைப்பு திட்டத்தை உருவாக் குவதில் நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத் தியது. அமைச்சகம், பஞ்சாயத் துகளுக்கு கிடைக்கும் எல்லா ஆதார வளங்களையும் ஒருங்கிணைக்கும் நோக்கில் கிராம பஞ்சாயத்து மேம்பா- ட்டு திட்டத்திற்காக (ஜிபிடிபி), வழிகாட் டுதல்களை உருவாக்க (குறிப்பிட்ட மாநிலங்களுக்கு) மாநில அரசுகளுக்கு ஆதரவு அளித்தது. இதில் 14-வது ஃபைனான்ஸ் கமிஷனின் நிதி, எஸ்ஜிஎன்ஆர்- இஜிஎஸ் நிதி, ஸ்வச்

பாரத் நிதி போன்றவை சேர்க்கப் பட்டன. இந்த கிராம பஞ்சாயத்து மேம்பாட்டு திட்டம் உள்ளூர் வளர்ச்சி திட்டங் களை நிர்ணயித்து அவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதில் மற்றும் வளர்ச்சி விஷயமாக உள்ளூர் அளவில் தீர்வுகளை கண்டறி வதற்கும் ஓர் வாய்யப்பை ஏற்படுத்திக் கொடுத்த்து.

14-வது ஃபைனான்ஸ் கமிஷனின் நிதி ஒதுக்கீடானது கிராம பஞ்சாயத் துகளுக்கு மறு உயிர் கொடுத்து கிராம பஞ்சாயத்துகள் செயல் படுவதற்கு புத்துயிரை அளித்திருக்கிறது என்று சொன்னால் அது சற்றும் மிகையா காது. தற்போதை அரசாங்கம் 14-வது ஃபைனான்ஸ் கமிஷனின் பரிந்து ரையை ஏற்றுக் கொண்டவாறு, அரசியல் சட்டம் பாகம் எஃப்ஸி-ல் உருவாக்கப்பட்டு ஜம்மு அண்ட் காஷ்மீர் உள்ளிட்ட கிராம பஞ்சாயத் துகளுக்கு 2015-20ன் போது ரூ.2,00,292.20 கோடி நேரடியாக கிராம பஞ்சாயத்துகளுக்கு அளிக்கப் பட்டு வருகிறது. அது மொத்த வருமான அளவில் பிரதி ஆண்டுக்கு தனி நபர் வருவாயாக ரூ.488 க்கு சமமான நிதியாகும். இதிலிருந்து ரூ.1,80,262.98 கோடி (90%) ஆரம்ப நிதியாகவும் ரூ. 20,029.22 கோடி (10%) செயல்பாட்டு நிதியாகவும் 26 மாநிலங்களுக்கு வழங்கப் படுகிறது. 13-வது ஃபைனான்ஸ் கமிஷனின் ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது 14-2வது ஃபைனான்ஸ் கமிஷனின் நிதி ஒதுக்கீடானது மும்மடங்கு அதிகமாகும். இந்த நிதியானது கிராம பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்கப்பட் டிருக்கும் பணிகளுக்குள் அடிப் படை வசதிகளை வழங்குவதை மேம்படுத் துவதற்காக செலவு செய்யப் படும். ஃபண்டுகளின் ரிலீஸ் அல்லது உபயோகம் குறித்து நிதியமைச்சகம் வெளியிட்டிருக்கும் வழிகாட்டுதல் களின்படி 14 வது ஃபைனான்ஸ் கமிஷனின் நிதி ஒதுக்கீட்டில் ஏதாவது செலவுகளுக்கு நிதியை செலுத்து வதற்கு முன்பதாகவே கிராம பஞ்சா யத்து மேம்பாட்டு திட்டம் (ஜிபிடிபி) தீட்டப்பட வேண்டும். எனவே, அடிமட்ட அளவில் நிதி ஸ்திரத் தன்மை மற்றும் பயனுள்ள வகையில் திட்டங்கள் தீட்டப்படுவதை உறுதி செய்வது வலியுறுத்தும் வகையில் எடஈட களுக்கு முக்கியத்துவம் அளித் துள்ளது.

தங்களுக்கென்று ஒட்டுமொத்த முன்னே ற்றத்திற்காக கிராம பஞ்சாயத்துகள் ஐந்தாண்டு மற்றும் வருடாந்திர திட்டங்களை வகுக்க வேண்டும் என்று காணப்படு கிறது.கிராம பஞ்சாயத் துகளால் தயாரிக்கப்படும் ஜிபிடிபி, பல்வேறு ஆதார வளங்களை பங்கேற்பு திட்டம் மற்றும் ஒருங்கிணைப்பை அடிப்படையாக கொண்டிருக்கும். ஜிபிடிபி-யின் கீழ், கிராம பஞ்சாயத் துகளின் ஸ்வச் பாரத் மிஷன் (ரூரல்), பஞ்சாயத் பவன், மயான பூமியை மேம்படுத்தல், சுயமாக உருவாக்கும் வருவாய் மூலம் வருவாயை ஒன்று திரட்டி 14வது ஃபைனான்ஸ கமிஷன், ஃபைனான்ஸ் கமிஷன், எஸ்ஜிஎன்-ஆர்ஈஜிஏ, என்ஆர்எல்எம், ஃபனான் ஷியல் மற்றும் மனித வள ஆதாரங் களை ஒன்று கூட்டுவதின் பேரில் நடைபறும். ஜிபிடிபி-யின் அடிப்படை நோக்கம் கீழ்க்கலண்டவாறு விவரிக்கப் பட்டிருக்கிறது.

(ஏ) கிராம பஞ்சாயத்துகளின் ஒட்டு மொத்த மற்றும் ஒருங்கிணைக் கப்பட்ட வளர்ச்சியில் அடிப்படை வசதியில் மேம்பாடு மட்டுமல்ல, சமூக, பொருளா தார மற்றும் சமுதாய முன்னேற்றமும் உள்ளடங்கும்.

(பி) முடிவு எடுக்கும் செயல் முறையில் பன்முகப் படுத்தலுடன், சமுதாயத்தை நிர்ணயங்களை எடுக்க வழி செய்வது

(ஸி) கிராம பஞ்சாயத்து அளவில் தேவைகளை அடையாளம் காண் பதை மேம்படுத்துவது, கூட்டு திட்டங் களுக்கு முன்னுரிமை அளிப்பது மற்றும் ஆதார வளங்களை ஒன்றிணைப்பது.

(டி) ஜிபிடிபி-யை உருவாக்கும் போதும் அதை செயல்படுத்தும் போதும் அடிப்படை வசதித் தேவைகளுக்குள் ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் ஷெட்யூல்டு பழங்குடி மக்களின் நலனுக்கு முன்னுரிமை அளிப்பதோடு ஏழை மக்களின் வாழ்வாதாரம், வறுமை ஒழிப்பு மற்றும் அவர்களின் பாதுகாப் புக்கு போன்ற விஷயங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

எஃப்எஃப்ஸி விருது, மக்களுக்கு அடிப் படை வசதிகளையும் சேவைகளையும் வழங்குவதற்காக கிராம பஞ்சாயத்து அளவில் திட்டங்களை ஒன்றிணைத்து, தலைமைப் பண்புகளை உருவாக்கும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது. இது சமுதாயத்தை உள்ளூர் வளர்ச்சி திட்டத்திலும், வளர்ச்சிக்கான விவகார ங்களில் ஈடுபட வைக்கும் ஓர் அரிய வாய்ப்பாகும்.

திறன் வளர்ப்பில் பஞ்சாயத்தி ராஜ் அமைச்சகம் எல்லா ஆதார வளங் களையும் ஒன்று சேர்ப்பதற்காக உழைக் கிறது. இதன் மூலம், எஃப்எஃப்ஸி ஃபண்டுகள், மாநில நிதி ஒதுக்கீடு, ஓன் ஸோர்ஸ் ஆஃப் ரெவின்யூ (ஓஎஸ்ஆர்), எம்ஜிஎன்- ஆர்இஜிஎஸ் ஃபண்டுகள் போன்ற வற்றின் மீது பஞ்சாயத் துகளுக்கு அதிகாரம் இருக்கும் மற்றும் குறிப்பிட்ட மாநிலத்துக்கான கிராம பஞ்சாயத்து மேம்பாட்டு திட்டங் களை (ஜிபிடிபி) வடிவமைக்கவும் உதவும். ஜிபிடிபி பயிற்சியின் மீது மாநிலங்கள் முழு கவனம் செலுத் துவது குறித்து அமைச்சகம் பெருமிதம் கொண்டு ள்ளது. இதற்காக இந்த அமைச்சகம் வட்டம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் மக்களை மையமாக வைத்த சுற்றுச் சூழல் ஸிஸ்டத்த உருவாக்க முயற்சி களை மேற்கொண்டது. இதன் மூலம் ஒவ்வொருவரும் திட்டங்களில் பங்கேற்க முடியும். பங்கேற்கும் எல்ல மாநிலங்களும் ஜிபிடிபி-க்காக முறையே தங்களின் வழிகாட்டு தல்களை முடிவு செய்து விட்டன. இதில் குறிப்பிடும்படியாக மகத்தான செயல் களை செய்த மாநிலங்கள் இவையே- அஸ்ஸாம், ஜார்கண்ட், உத்தராகண்ட், தெலுங்கானா, ஆந்திர பிரதேசம், திரிபுரா, சிக்கிம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, கோவா, குஜராத் போன்றவையாகும். திறன் வளர்ப்புக்காக இமாநிலங்கள்



எடுத்துக் கொண்ட முயற்சிகள் பரிதும் பாராட்டுக்குரியதாகும். மேலும் அடிமட்ட அளவில் கிராமங்கள் தாங்களே வலிய முன் வந்து உள்ளூர் சார்ந்த விஷயங் களைப் பற்றி யோசித்து காலம்- காலமாக நீடித்து வந்த பிரச்சனை களயும் தீர்த்தன.

ஏராளமான கிராம பஞ்சாயத்துகள் ஜிபிடிபி-க்காக கருத்துருவாக்கம் செய்து வடிவமைக்கும்போது பல புதுமையான கருத்துகளை கொண்டு வந்தன.

2015-16 ஆண்டின்போது சுமார் 1.32 லட்சம் ஜிபிடிபி திட்டங்கள் தயாரிக்கப் பட்டன. ஆனால் 2016-17-ல் சுமார் 2.44 லட்சம் ஜிபிடிபி மற்றும் 2017-18-ல் 2.42 லட்சம் ஜிபிடிபி-கள் ஏற்கனவே நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கிராம பஞ்சாயத்துகளால் தயாரிக்கப் பட்டன

கிராம பஞ்சாயத்துகளை ஊக்குவி க்கும் வகையில் கிராம பஞ்சாயத்து டெவலப்மென்ட் (ஜிபிடிபி) என்ற பெயரில்



விருது உருவாக்கப்பட்டது. பஞ்சாயத்தி ராஜ் அமைச்சகத்தின் மாதிரி வழிகாட்டுதல் களுக்கேற்ப மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் தங்களின் குறிப்பிட்ட ஜிபிடிபி-யை உருவாக்கின. மூன்று மிகச் சிறந்த கிராம பஞ்சாயத்துகள் இந்த ஆண்டு தேசிய பஞ்சாயத்தி ராஜ் தினத்தை முன்னிட்டு ஜிபிடிபி விருது வழங்கப் பட்டு கௌரவிக்கப் பட்டன.

ஜிபிடிபி க்கு அடிமட்ட அளவில் பங்கேற்பு திட்டத்திற்கும் ஜனநாய கத்தை மையப் படுத்துவதில் பங்களிப் புக்கு உரிய திறன் உள்ளது. நீடித்து நிலைக்கும் வளர்ச்சி இலக்குகளை உள்மயப் படுத்தி கிராம பஞ்சாயத் துகள் உள்ளாட்சியின் அசல் அமைப் புகளாக்க உதவுவதற்கும் ஜிபிடிபி உகந்த திறன்மிக்க சாதனமாக்க அதை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதில் நாம் ஒருமித்த கருத்திற்கு வருவதற்கான உரிய தருணம் இதுவே. அதோடு அவை திட்டங்களுக்கும் அப்பால் சிந்தித்து கிடைக்க வேண்டியவை மற்றும் வெளிப்புற ஒதுக்கீடுகள் அதிலும் குறிப்பாக தற்போதைய டிஸைன் மற்றும் திறன் வளர்ப்பில் கவனம் செலுத்துவதும் முக்கிய மாகும். சமூக மற்று பொருளாதார முன்னேற்றத் துக்கும் கூடுதலாக உள்ளூர் பங்குதா ரர்கள் முக்கிய கலாச்சார மதிப்புகளை மேம்படுத் துவதில் முக்கிய பங்கேற்பை அளிக்கிறார்கள். (பாரம் பரியம். பன்முக ப்படுத்தல், படைப்பாற்றல் அறிவை பரப்புதல்) மேலும் இவர் களே நீடித்து நிலைக்கும் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வழி வகுப்பவர்களாகவும் அதற்கு வழிய மைத்து தருபவர்களா கவும் இருக்கி றார்கள். எல்லாவற் றையும் உள்ளடக் கிய உள்ளூர் வளர்ச்சி திட்டங்களை தீட்டுவது இந்த இலக்குகளை எடுவதற்கான வழிமுறை களாகும். மற்றும் பங்கேற்பை மேம்ப டுத்தல், பொறுப்பேற்பு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சிவில் சொஸ ட்டி நிறுவனங்களுக்கிடையே கூட்ட மைப்பு (ஸிஎஸ்ஓஎஸ்). தனியார் துறை மற்றும் இதற்குரிய பங்குதாரர் களை பங்கேற்கச் செய்வதும் முக்கி யமாகும்.

கிராம பஞ்சாயத்துகளால் விஸ்தீரணமான மற்றும் பயனளிக்க வல்ல ஜிபிடிபி வடிவமைப்பின் விளைவாக ஒவ்வொரு பஞ்சாயத்தின் சட்ட வரம்புக்குள் செலவிடுவதற்காக ஒதுக்கீடு செய்யப் பட்ட ஃபண்டுகள் மற்றும் அதன் கீழ் மேற்கொள் ளப்பட்ட செயல்களைப் பொறுத்தவ ரையிலான தகவல்கள் பொது வெளிப்பாட்டின் ஓர் பாகமாக ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தெரிவி ப்பது மிகவும் அவசியமாகும். ஆகவே. அந்தந்த மாநில துறைகள் முறையே தகவல் தெரிவிக் கப்பட்ட அந்தந்த கிராம பஞ்சாயத் துகளுடன் கலந்தா லோசித்து செயல்படும் ஸ்கீம்களின் கீழ் மாநிலங் களுக்காக ஒதுக்கப்பட்ட ஃபண்டுகள் பஞ்சா யத்து வாரியாக பிரித்து கொடுக் கப்பட வேண்டும் என்று பரிந்துரை க்கப் படுகிறது. பஞ்சாயத்தி ராஜ் ஸிஸ்டத்தின் மூன்று அடுக்குகளின் உள்ளூர் ரீதியாக தேர்ந்தெடுக் கப்பட்ட 31 லட்சம் பிரதிநிதிகள் மக்களை மையமாக கொண்ட முன்னேற்றத்துடன் உலகின் உள்ளா- ட்சி அமைப்பில், இந்தியா மிக

அதிக அளவில் 14 லட்சத்துக்கும் அதிகமான பெண் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கிறது. ஆண்-பெண் முக்கியமாக ஜிபிடிபி-யின் இந்த சுற்றிலும், செயலாக்கங்களிலும் சிறப்பான நிர்வாகத்தையும் வழங்கு வதோடு, ஒளிவு மறைவற்ற தன்மை, பொறுப் பேற்பு ஆகியவற்றை மேம்படுத்தி சரிநிகர் குடிமக்களாக பெண்களுக்கான உரிமை களை பாதுகாத்து, பொது சேவைகள் பலனளிக்கும் வகையில் பயனுள் ளதா க்குவதை மிகுதிப்படுத்தி 2023-க்குள் குளோபல் எஸ்டிஜிஎஸ் திட்டத்தை எட்டுவதற்காக அமைப் புகள் மற்றும் தனிநபர் இயக்க திறன்களை வளர்க்க பாடுபடுகி ன்றன. எனவே பின்தள்ளப் பட்ட சமுதாயத்தினர் மற்றும் மகளிருக்கு ஜிபிடிபி உருவாக்கம், அரசாங்க நலத்திட்டங்கள் மற்றும் தலைமை திட்டங்கள் ஆதார வளங்கள் ஆகியவை பஞ்சாயத்து களால் வழங்கப்படுகின்றன மற்றும் அவற்றுக்கான பொறுப்பு நடவடிக் கைகள் அவற்றால் மேற்கொள்ளப் படுகின்றன என்பது குறித்து அவர் களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்து வது மிக முக்கியமாகும்.

விஸ்தீரணமான எடாஈட-யின் திறன பாராட்டும் விதமாக இந்திய அரசாங் கத்தின் பஞ்சாத்தி ராஜ் அமைச்சகம் மக்கள் பிளான் கேம்பெய்னை- ஸப்கி யோஜனா ஸப்கா விகாஸ்- தொடங்கப் போகிறது. கிராமப்புற இந்தாவில் புரட்சிகரமான மாற்றத்தை கொண்டு வருவதற்காக அக்டோபர் 2, 2018 முதல் டிசம்பர் 31,2018 வரை இது நடைபெறும். இந்த திட்டத்தின்போது, விஸ்தீரணமான எடாஈட-யை ஒவ்வொரு பஞ்சாயத்தும் தயார் செய்யும். ஆறாவது ஷெட்யூல்டு பகுதிகளில் எடாஈட-யானது முறையே கிராம கவுன்ஸில்கள் அல்லது அதாரிடியால் தயாரிக்கப்படும். இந்த பிளான், தங்கள் ஆதார வளங்களை ஒன்று திரட்டுவதின் மூலம்,இதை சார்ந்த அமைச்சகங்கள் மற்றும் துறைகள் அளிக்கும் ஆதரவோடு பஞ்சாயத் துகளின் வளர்ச்சி தேவைகளை ஒன்றிணைக்கும். வளர்ச்சிக்கான எடாஈட கேம்பெய்ன் கிராம சபைகளில் முன்னிலை வகிக்கும் 31 லட்சம் தேர்ந்தடுக் கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அக்கறை காட்டுவது மட்டுமின்றி, ஏப்ரல் 24,2018 அன்று கொண்டாடப் பட்ட பஞ்சாயத்தி ராஜ் தினத்தின் கீழ் 5.25 கோடி மகளிர் சுய உதவிக் குழுவின் மகளிர் நெட்வொர்க்கிற்கும் ஆதரவ ளிக்கும். இந்த நிகழ்வையொட்டி பிரதமர் ராஷ்டிரிய கிராம் ஸ்வராஜ்ய அபியான் திட்டத்தையும் தொடங்கி வைத்து நாட்டின் சுமார் 2..5 லட்சம் பஞ்சாயத் துகளுக்கு தன் வணக்கத்தையும் நல்வாழ்த் துக்களும் தெரிவித்துக் கொண்டார். இது நமது மதிப்பிக்கும் மரியாதைக்குமுரிய மகாத்மா காந்தியின் கனவுகளை நிஜமாக்கும் ஓர் முக்கியமான நிகழ்வாகும் என அவர் குறிப்பிட்டார். ஏனென்றால், மகாத்மா காந்தி கிராமங் களை வைத்தே இந்திய தேசத்தை அடையாளம் கண்டார். ராஷ்ட்ரிய ங்-பஞ்சாயத்து விருது, ஸர்வஷ்ரேஷ்ட் பஞ்சாயத்து புரஸ்கார் யோஜனாவின் கீழ் கிராம் பஞ்சாயத் விகாஸ் புரஸ்கார் யோஜனா விருது வென்றவர்கள் இந்நி கழ்ச்சியில் கௌரவிக்கப் பட்டனர்.♦

# கிராம அரசு தீர்மான சுயஅதிகாரம் - பிரதமரின் தேசிய

## பஞ்சாயத்தி ராஜ் தினம், 24 ஏப்ரல், 2018






இந்த ஆண்டு தேசிய பஞ்சாயத்தி ராஜ் தினத்தின் மகத்தான விழாவை யொட்டி, மாண்புமிகு பிரதமர் ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் அபியானின் (ஆர்ஜிஎஸ்ஏ) மறு வடிவமைக்கப்பட்ட திட்டத்தையும், அதோடு லோக்கல் கவர்ன்மென்ட் டைரக்டரியையும் (எல்ஜிடி) தொடங்கி வைத்தார். பிரதமர் சிறப்பாக செயல்படும் மாநிலங் களுக்கு ஈ-பஞ்சாயத்து விருதையும் கிராம பஞ்சாயத்துகளுக்கு ஜிபிடிபி விருதையும் வழங்கி சிறப்பித்தார். மாண்புமிகு பிரதமர், கூட்டத் தினரையேயும், நாட்டின் எல்லா கிராம சபைகளைச் சார்ந்தவர் களிடையேயும் உரையாற்றினார்.

மேற்கு வங்காளம், கர்நாடகா மற்றும் சிக்கீமைச் சேர்ந்த தலா ஒரு கிராமத்துக்கு ஜிபிடிபி விருதுகள் வழங்கப் பட்டன. இணையற்ற வகையில் செயலாற்றும் கிராம பஞ்சாயத்துகளுக்கு நானாஜி தேஷ்முக் ராஷ்ட்ரிய கௌரவ் கிராம் சபா புரஸ்கார் (என்டிஆர்-ஜிஜிஎஸ்) ஊக்குவிக்கும் நோக் கிலும், பாராட்டி உற்சாகப்படுத்தும் நோக்கிலும் 21 கிராம பஞ்சாயத் துகளுக்கு விருதுகள் வழங்கப் பட்டன.

தீன்தயாள் உபாத்யாயா பஞ்சாயத்து சஷக்திகரன் புரஸ்கார் (டிடியுபி-எஸ்பி) விருதும் மிகச் சிறப்பாக செயல் புரியும் 191 பஞ்சாயத் துகளுக்கு பொது மற்றும் ஒன்பது தீமேடிக் கேட்டகிரியின் கீழ் சேவைகள் மற்றும் பொது பொருட்கள் விநியோகத்தை மேம்படுத் தியதில் மிகச் சிறப்பான விதத்தில் பணியாற்றியதற்காக வழங்கப் பட்டது.

பஞ்சாயத்தி ராஜ் தினத்தின்று அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் கீழ்க்கண்டவையாகும்

- மகாத்மா காந்தி கிராமோதயாவில் இருந்து ராஷ்ட்ரோதயா கனவை நிஜமாக்குமாறு நம்மை ஊக்கு வித்தார். எனவே இதிய அரசாங்கம் அந்த கிராமங்களை மேம்படுத்த ஆதரவு அளிக்கும். அதோடு உங்கள் கிராம மக்களின் முன்னேற் றத்துக்கும் தீர்மானங்களை நிறைவு செய்யவும் உதவி செய்ம்.
- இந்த பஞ்சாயத்தி ராஜ் தினம் நாம் உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் தினமாக இருக்க வேண்டும்.

**மகாத்மா காந்தி கிராமோதயாவில் இருந்து ராஷ்ட்ரோதயா கனவை நிஜமாக்குமாறு நம்மை ஊக்குவித்தார். எனவே இதிய அரசாங்கம் அந்த கிராமங்களை மேம்படுத்த ஆதரவு அளிக்கும். அதோடு உங்கள் கிராம மக்களின் முன்னேற்றத்துக்கும் தீர்மானங்களை நிறைவு செய்யவும் உதவி செய்ம்.**

- மக்களுக்கு பணி செய்யவே நாம் அரசு அமக்க தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறோம். ஆகவே, இதே பணிக்காக நமது ஆற்றலும் நேரமும் இதில் செலவிடப்பட்டால் நமது கிராமங்களின் தோற்றத்தை நம்மால் மாற்றி விட முடியும்.
- இன்று நிஜ பயனாளிகளுக்காக குறிப்பிட்ட கால வரம்புக்குள் நிதியை பயன்படுத்துவது குறித்த விஷயத்தில் அக்கறை காட்டு கிறோம்.
- கிராமப் புறங்களில் ஜன் தன் பேங்க் அக்கவுன்ட் வைத்துக் கொள்ளாத மற்றும் குறைந்த பட்சமாக 99 பைசாவுடன் காப்பீடு பெறாத எந்த கிராமமும் இருக்க முடியாது. அத்தகைய ஏதாகிலும் ஒரு குடும்பம் துர்அதிர்ஷ்டவசமாக விபத்தால் பாதிக்கப்பட்டால் அக்குடும்பத்திற்கு ரூ.2 லட்சம் ஃபைனான்ஷியல் ரீதியாக நிதி உதவி வழங்கப்படும்.
- நாம் நமது நாட்டை மாற்ற வேண்டுமாயின் நமது கிராமங் களையும் மாற்ற நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் அனைவருமே கிராமங்களின் நிதி வளத்தை முறாக பயன்படுத்த வேண்டும்.ஜெ ஜவான், ஜெய் கிஸான், ஜெய் விக்யான் என்ற தாரக மந்திரத்தோடு வாழ்க்கைப் பாதையில் பீடு நடை பொட்டு முன்னேறிச் செல்ல வேண்டும்.♦



# கிராம பஞ்சாயத்துகள் வாயிலாக கிராமப் புற பெண்களுக்கு சுயஅதிகாரம்

## கண்ணோட்டம்: கிராமிய பெண்களின் நிலவரம்

ஐக்கிய நாடுகளின் மகளிர் அறிக்கையாக தலைப்பிடப் பட்டிருக் கும் என்டேன்ஜரிங் ரூரல் லைவ்லிஹுட்- ஸப்போர்டிங் ஜெண்டர் ரெஸ்பான் ஸிவ் இம்ப்ளமென்டஷ் ஆஃப் த நேஷனல் ரூரல் லிவ்லிஹுட்ஸே மிஷன் அறிக்கையில், இந்தியாவில் 79% மகளிர் ஓர்க்ஃபோர்ஸ் விவசாய வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் மற்றும் அவர்கள் ஆண்கள் ஈட்டுவதில் 50-75% கூலியை மட்டுமே பெறுகிறார்கள். 9% கிராமப்புற பெண் கள் மட்டுமே சொத்து வைத்திருக் கிறார்கள் இதன் விளைவாக நிலங்கள் மீது சொத்துரிமை இல்லாத அல்லது உற்பத்தி உடைமைகள் இல்லாத பட்சத்தில் ஒருசில பெண்கள் மட்டுமே இன்ஸ்டிடியூஷனல் கிரடிட் வசதியைப் பெறுகிறார்கள்.

இந்திய அரசாங்கம், பல்லாண்டுகளாக கிராமிய மகளிரிடே நிலவி வரும் அதிகாரமின்மை, வறுமை



மற்றும் அவர்களுக்கு இழைக்கப்படும் சமூக அநீதியை களைய முயற்சிகளை மேற்கொண்டு கிராமப்புற பெண்களின் முன்னேற்றத்துக்கும் அவர்களின் வளர்ச்சிக்கும் உதவும் நோக்கில் ஏராளான முக்கிய திட்டங்களையும் மத்திய அரசா சார்பாக நடத்தப்படும் ஸ்கீம்களையும் தொடங்கியிருக்கிறது. இவற்றில் பேட்டி பச்சாவ், பேட்டி படாவ்-பெண் குழந்தகளை காப் போம், பெண் குழந்தைகளுக்கு கல்வியறிவை அளிப்போம், பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா, மஹிளா சக்தி கேந்திரா, உஜ்வலா, எம்ஜிஎன் ஆர்ஈஜிஏ, ஐடிஎஸ் மற்ற இதர திட்டங்களும் உள்ளடங்கும். 73-வது சட்ட திருத்தம் (பிரிவு 243டி) பஞ்சாயத்தி ராஜ் அமைப்புகளில் (பிஆர்எல்எஸ்) தேர்தல் மூலமாக குறந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு ஸீட்டுகள் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ப்பட வேண்டும் என்பதை கட்டாய மாக்கியுள்ளது. (எஸி/எஸ்டி பெண்களு க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் ஸீட்டுகள் உட்பட). தற்போது 20 மாநில ங்கள் பஞ்சாயத்தி ராஜ் அமைப்புகளில் 50% - பெண்களுக்காக ஒதுக்கீடு செய்துள்ளது. பஞ்சாயத்தி ராஜ் அமைப்புகளி வெவ்வேறு கட்டமைப்புகளில் 1.5 மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் அலுவலகங்களுக்கு தேர்வு செய்து பட்டுள்ளனர். இது உள்ளாட்சி நிர்வாகத்தில் உலகிலேயே மிகப் பெரு பிரதிநிதித்துவம் ஆகும். பஞ்சாயத்தி ராஜ் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, 2018-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த பிரதிநிதி களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள் (உரதள்) 1,426,000 உள்ளனர் (46%) மற்றும் 1,05,676 பெண் பஞ்சாயத்து தலைவிகள் (ஸர்பன்ச்) இப்போது நாட்டில் உள்ளனர். இத்தனை சதனைகளுக்குப் பிறகும், அரசியல் பிரதிநிதித்துவம், மற்றும் பங்கேற்பு மூலம் பெண்களுக்கு சுய அதிகாரம் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றில் கிராமிய பெண்கள் இன்றும் ஏராளமான சவால்களை எதிர் கொண்டு வருகின்றனர். பஞ்சாயத்தி ராஜ் அமைப்புகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதுமான அளவில் இருந்தபோதிலும் (எல்லா மாநிலங்களிலும் மூன்றில்-ஒன்று என்ற முறைப்படி), உள்ளாட்சி நிர்வாகத்தில் கிராமப்புற பெண்களின் பிரதிநிதித்துவம் போதுமான அளவுக்கு இல்லை.

## கிராம பஞ்சாயத்துகள் கிராமிய மகளிருக்கு சுய அதிகாரம் அளிக்கும் அமைப்பாகும்.

பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதி கிடைப்பதை நிறைவு செய்யும் பொறுப்பு பஞ்சாயத்தி ராஜ் அமைப்புகளுக்கு உள்ளது. உள்ளாட்சி நிர்வாகத்தை செம்மையாக நடத்தும் ஓர் அமைப்பாக செயல்படுவதற்காக பஞ்சாயத்துகளுக்கு மாநிலங்கள் சுயாட்சி, பவர் மற்றும் அதிகாரத்தை

பிரித்து கொடுக்க வேண்டும் என்பதை அரசியல் சாசனத்தின் பிரிவு 243 ஜி, பாகம் ஐஎக்ஸ்-ன் படி கட்டாய மாக்கியுள்ளது. அரசியல் சாசனத்தில் இது கட்டாயமாக்கப் பட்டுள்ளதோடு, ஸ்டேட் ஃபைனான்ஸ் கிராண்ட், பிதினான்காவது ஃபைனான்ஸ் கமிஷன், அரசின் தலையாய நலத் திட்டங்கள் மற்றும் புரோகிராம்கள் மற்றும் அவற்றன் சுய வருவாய்களின் கீழ் கிடைக்கும் நிதிகளை கிராம முன்னேற்றத்துக்கு செலவிடுவதற்காக இந்தியாவிலுள்ள பஞ்சாயத்துகளுக்கு கணிசமான ஃபண்டுகளும் கிடைக்கச் செய்யப் படுகின்றன. பங்கேற்பு திட்டம், வருவாய் ஓதுக்கீடு, மத்தி மற்றும் மாநில அரசு நலத் திட்டங்களை செயல் படுத்தி, அவற்றை கண்காணிக்கும் அமைப்பு பொறுப்பும் பஞ்சாயத்தி ராஜ் அமைப்புகளுக்கு உள்ளது.இவையே ஆண்-பெண் பாலாருக்கும் பொறுப் பேற்கும் நிர்வகிப்பின் செலாக்கம் மற்றும் நடைமுறைப் படுத்துவதில் பஞ்சாயத்துகள் முக்கியமான பொறுப்புணர்வைக் கொண்டிருக்கிறது. முக்கிய மாக கிராம பஞ்சாயத்துகள் தலையாய பணியாற்றும் அமைப்புகளாகும். அதில் எஸ்டிஜிஎஸ் உள்மயமாக்கம் மற்றும் நிஜத்தன்மையானது சமுதாய உறுப் பினர்களின் சாதகமான பங்கேற்புடன் நடந்தேறுகிறது.

திட்டங்களை வடிவமைத்து அவற்றை செல்படுத்துவதற்கு பொருளாதார ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளுக்கு நில உடைமை மற்றும் திறன் வளர்ப்பு மூலம் ஆதரவு, கிராம சபைகளில் மகளிரின் பங்கேற்பை வலுப்படுத்தும் நோக்கில் தேர்தலில் போட்டியிட விரும்பும் பெண்களுக்கு வாய்ப்பை வழங்கி அவர்களின் செயலாக்க திறமைகளை மேம்படுத் துவது, அடிமட்ட அளவில் பெண்களை ஒன்றிணைத்து அவர்களின் திறன் களை சேர்ப்பது முக்கியமாகும். (எஸ்எச்ஜிஎஸ்), ஃபெடரேஷன்கள் மற்றும் கண்காணிப்பு குழுக்கள்). ஆண்-பெண் சமநிலை மற்றும் சுயஅதிகாரம் வழங்குதல் நோக்கி கிராம பஞ்சாத்துகளால் செயல்படுத்தப்படும் ஸ்கீம்களையும், திட்டங்களையும் ஒன்றிணைக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. பஞ்சாயத்துகளின் எல்லா நடவடிக்கைகள் மற்றும் புரோகிராம்கள் ஆண்-பெண் ரீதியில் பரிசீலிக்கப்பட்டு அவற்றில் நிலவும் சமநிலையற்ற தன்மையை குறைக்க வேண்டியது அவசியமாகும். பஞசாத்து அளவிலான நடவடிக்கைகள் மற்றும் புரோகிராம்களில் புள்ளி விவரங்களை சேகரிப்பது தொடர்ந்து நடைபெறும் செயலாக இருக்க வேண்டும்.

திட்ட ரீதியாக பயன்படுத்த வேண்டிய மற்றுமொரு திட்டம் கிராம பஞ்சாயத்து மேம்பாட்டு திட்டமாகும் ((ஜிபிடிபி), இது பஞ்சாயத்துகளால் ஒருங்கிணைக் கப்பட்ட பரவலாக்க திட்டத்திற்கான ஒரு அணுகுமுறையாகும். ஆண்- பெண் சமநிகர் பொறுப்புடன் ஜிபிடிபி-யை அணுகுவது என்பது உள்ளாட்சி நிர்வாகம், முடிவுகள் எடுத்தல் மற்றும் அவர்களின் ஏஜன்ஸி மற்றும் அவை சுயமாக செயல்படு வதற்காக வழி செய்வது ஆகியவை கிராமிய பெண்கள் இவற்றில் அர்த்த முள்ள





பங்கேற்பு நடைபெறுவதை உறுதி செய்யும். ஜிபிடிபி-யில் ஆண்- பெண் ஒன்றிணைப்பை ஏற்படுத்துவது ஒரு தணியான அல்லது இணையாக நடைபெறும் செயல்முறையல்லமாறாக, தொடர்ந்து நடைபெறும் ஜிபிடிபி செயலாக்கங்களில் பெண்களை ஈடுபடுத்தும் செயல்முறையாகும். ஆண்-பெண் உணர்வுகளால் தூண்டப்படும் ஜிபிடிபி-யில் ஆண்-பெண் சமநிகராக பங்கேற்பதை எடுத்துக் கொள்ளும்போது ஹ)சமூக, மத மற்றும் கலாச்சார வேறுபாடுகள் காரணமாக வள ஆதாரங்களை வித்தியாசமாக எட்டுவது,) கிராம மக்களின் வெவ்வேறு சமுதாயங்களின் வெவ்வேறு தேவைகளை நிறைவு செய்து

ஆண்-பெண் சரிநிகர் சமநிலையை பூர்த்தி செய்யும் விதமாக குறிப்பிட்ட நடவடிக்கைகளை சேர்ப்பதில் அதற்கேற்ப ஜிபிடிபி-யின் திட்டங்கள், பட்ஜெடிங், கண்காணிப்பு மற்றும் நலத்திட்டங்கள் மற்றும் ஸ்கீம்களை கண்காணிப்பது அவசியமாகிறது. ஆண்-பெண் சமநிலையில் பிரச்சனை உள்ள ஜிபிடிபி-களில் ஆண்-பெண் இரு சாராரையும் பட்ஜெட் மற்றும் பங்கேற்க வைக்கும் கிராமிய யுக்திகளில் ஒன்றிணைப்பதற்காக ஆண்-பெண் செயல் திட்டம் சீராக வறையறுக்கப்பட்ட செக்லிஸ்ட்டுகள் ஜிபிடிபி-யில் சீராக விவரிக்கப்பட் டுள்ளன. இது கிராம பஞ்சாயத்துகளில் கிராமிய பெண்கள் பங்கேற்பதற்கு உகந்த இடத்தை ஏற்படுத்தித் தர உதவிகரமாக இருக்கும். அங்கே அவர்கள் முக்கியமான கேள்விகளை எழுப்பி தங்கள் உரிமைகளை செயல்படுத்திக் காட்ட முடியும் மற்றும் பஞ்சாயத்

துகளின் நடவடிக்க மற்றும் செல் திட்டங்களில் அர்த்தமுள்ள பங்கேற்பை அளிக்க முடியும்.

## கிராமிய பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் கிராம பஞ்சாயத் துகளுக்கு ஆதரவு அளிப்பது

கிராம பெண்களின் அதிகார வஞ்சிப்பு மற்றும் அவர்களை ஒதுக்கி வைக்கும் பிரச்சனையானது மிகவும் சிக்கலான விஷயமாகும். எனவே அதற்கு பரவலான மற்றும் மல்டி செக்டரல் ஆண்-பெண் அணுகு முறை தேவையாகும். கிராமிய பெண்களுக்கு சுய அதிகாரம் வழங்கு வதில் தீவிரமாக செயல்படுவதற்கு பாலிஸி மற்றும் ஆராய்ச்சிக்கு மகத்தான ஆதரவு தேவை என்பதை கருத்துகளும் மற்றும் சாதகமான தீர்வுகளும் பரிந்துரைக் கின்றன. காலங்காலமாக இவ்வாறு பெண்கள் ஒதுக்கி வைக்கப்படுகிற நிலைமை மற்றும் பெண்கள் குடும்ப வேலைகளை செய்வது, இல்லத்தை கவனித்து நடத்தும் பொறுப்பு, வீட்டில் எல்லா சேவைகளையும் ஊதியம் இல்லாமல் பணியாற்றும் வேலை யாள் என்று பாரம்பரிய ரீதியாக சமுதாய த்தில் நிலவி வரும் அவல நிலை என்ற சங்கிலிலியை உடைத் தெறிவதில் கிராம பஞ்சாத்துகள் திறன் மிகு அமைப்பாக செயல்பட முடியும். எனவே பிஆர்ஐ செயல்பாட் டாளர்களில் கிராம பஞ்சாயத் துகளின் முயற்சிகளுக்கு ஆராய்ச்சி, கொள்கை திட்டங்கள் மற்றும் அரசு நிறுவனங்களின் ஆதரவும் உதவியும் அவசியம் தேவை.

பாலிஸி அளவில், திறன் வளர்ப்புக் காக அதிக நிதி ஒதுக்குவது,



உரதகளின் எக்ஸ்போஷர் விஸிட் டுகள் மற்றும் பயிற்சி, அரசாங்க நிறுவனங்களில் ஆண்- பெண் பட்ஜெட்டிங் மற்றும் பொது நிறுவன ங்களில் ஆண்-பெண் ஆடிட்டிங் ஆகியவற்றுக்காக எல்லா மாநில ங்கள் மற்றும் யூனியன் பிரதேச ங்களின் பஞ்சாயத்தி ராஜ் அமைப் புகளில் பெண்களுக்கு 50% ஒதுக் கீட்டிற்கு வழிசெய்யும் விதமாக முயற்சிகளில் முழு கவனம் செலுத் துவது கவும் அவசியமாகும், அரசா ங்கம் ஆண்-பெண் சமநிலைக்கு வழி செய்யும் நடவடிக்கைகளை திட்டங் களின் பிளானிங், பட்ஜெட்டிங் மற்றும் நடைமுறைபடுத்துவது, அதற் கான பொறுப்பை ஏற்கும் விவரங் களை அளிக்கும் முறைகளை மேற்கொள்ள முடியும். குறுக்கீட்டு முயற்சியில் ஆராய்ச்சி என்பது மற்றொரு முக்கியமான விஷய மாகும். வளர்ச்சி மற்றும் சமூக நீதியில் பெண்களின் அர்த்தபூர் வமான பங்கேற்பிற்கு அனுமதி தரமால் தடுக்கப் படுவதற் கான ஆதாரங்களை திரட்டுவது முக்கிய மாகும். தங்கள் நடவடிக்கைகள் மற்றும் குறுக்கீடுகளில் ஆண்-பெண் கண்ணோட்டத்தை ஒன்றிணைப் பதற்காக அரசாங்க துறைகள் மற்றும் பிஆர்ஐ களை பலப்படுத்தும் திறன்களுக்கு வழி செய்வதற்காக அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். பெண்களின் பங்கேற்பை கண்காணி ப்பை உறுதி செய்து கொள்வதற் காகவும், பரவலாக்கம் மற்றும் ஆண்-பெண் விவகார நிர்வகிப்பில் முக்கியத்துவத்தை ஏற்படுத்து வதற்காகவும் பிஆர்ஐ மட்டத்தில் கணக்கு வழக்கு மற்றும் பொறுப் புணர்வு விஷயமாக நிறுவனமா யமாக்கம் அவசியம் தேவை.

முன்னேற்றமடைந்த, சமூக ரீதியாக நீதியுடன் செயல்படும் சமுதாயம் மட்டுமே பெண்களின் தீவிர பங்கேற்பு மற்றும் பங்களிப்பை உருவாக்க முடியும், அதிகுறிப்பாக கிராம மக்கள் தொகையில் பெண்கள் தொகை 48%-க்கும் அதிகமாக இருக்கும் போது இந்தியாவுக்கு இது உண்மையில் பொருந்தும். கிராம பஞ்சாயத்துகள் பெண்களின் பங்கேற் பினால் மட்டுமே சமூக நீதி மற்றும் பொருளாதார மேம்பாட் டுக்கான அரசியல் சாசனத் தில் அவசிய மாக்கப் பட்டுள்ளதை எட்ட முடியும். ♦



**சாஷ்வதி மிஷ்ரா**
புரோகிராம் அனலிஸ்ட் (எங்ய்க்ங்ழ்)
MoPR-UN Women

Reference: Aajeevika & UN Women. (2014). Engendering Rural Livelihoods: Supporting Gender Responsive Implementation of the National Rural livelihoods Mission. Accessed on 5 April 2018. Retrieved from http://aajeevika.gov.in/sites/default/files/nrlp_repository/Engendering-Rural-Livelihoods-Final.pdf
Bhattacharyya, A. (undated). Rural Women in India: The Invisible Lifeline of RuralCommunity.

# தனது சுய ஆதார வளங்களின் வாயிலாக சுயசார்பு- கோவாய் கிராம பஞ்சாயத்து

## சுயமாக திரட்டப்பட்ட வருவாய் இந்த பஞ்சாயத்து சமிதியை வளம் கொழிக்கும் மற்றும் வலுவானதாகவும் ஆக்கியுள்ளது.



பொருளாதார ரீதியாக சுய-சார்பு கோவாய் பஞ்சாயத்து சமிதியின் (இன்டர்மீடியேட் பிளாக்) வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் நீடித்து நிலைக்கும் திறனின் நிஜ காரணியாக திகழ்கின்றன. இது திரிபுராவின் கோவாய் மாவட்டத் தின் கீழ் வருகிறது. இந்த கோவாய் பஞ்சாயத்து சமிதி, நிதி பற்றாக்குறையை சமாளிப்பதற்காக சுயமாக திரட்டிய நீடித்து நிலைக்கும் வருவாய் ஆதார த்தை உறுதி செய்வதின் மூலம் நீடித்து நிலைக்கும் நிர்வாகம் என்பதற்காக மிகச் சிறந்த உதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பஞ்சாயத்து சமிதி, பார்க், மார்க்கெட் ஸ்டால், கம்யூனிடி ஹால், மீன் வளர்ப்பு, மாந்தோட்டம் பன்ற உடைமை களை வைத்துள்ள பெருமையை போற்றுகிறது. பனாபீதி இகோ பாரக் என்று பெயரிடப் பட்டிருக்கும் பார்க் இம்மாநிலத் திலுள்ள மக்களின் கவனத் தை ஈர்க்கக் கூடியதாக திகழ்கிறது. தொலை தூரத்து மக்களையெல்லாம் கூட கவர்ந்தி ழுக்கும் இந்த பார்க்கிற்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கூட்டம் கூட்டமாக வருகின்றனர். இந்த பார்க் சமுதாய மக்கள் ஒன்று கூடுதல், ஓய்வு, அம்யூஸ்மென்ட் மற்றும் பிக்னிக் போன்ற வற்றுக்கு சிறந்த பொழுது போக்கு ஸ்தலமாக திகழ்கிறது. இந்த பப்ளிக் பார்க் பஞ்சாயத்தால் நிர்வகிக்கப்பட்டு நடத்தப் படுகிறது. இந்த பார்க்கில் பிரவேசிப் பதற்காக பஞ்சாயத்து ஒரு சிறிய தொகையையும் விதிக்கிறது. பார்க்கின் இரண்டு இடங்களையும் சுற்றிப் பார்த்து பிக்னிக்னில் நேரத்தை மகிழ்ச்சியாக செலவிடுவதற்கு பிரதி நபர் ரூ.10 கட்டணம் செலுத்த வேண்டும். இந்த பார்க்கில் பெரிய நிகழ்ச்சிகளும் நடத்த அனுமதிக்கப் படுகிறது. இதற்கு பார்ட்டியை நடத்த ரூ.500 கட்டணமாக விதிக்கப் படுகிறது.

இந்த இன்டர்மீடியேட் பிளாக் எனும் இடைநிலை வட்டாரத்தின் சுய வருவாய் ஈட்டும் திட்டம் மீன் வளர்ப்பு திட்டமாகும். மீன் வளர்ப்பானது பஞ்சாயத்து நல்ல வருமானத்தை தொடர்ச்சியாக ஈட்டு வதற்கு வழி செய்கிறது. பஞ்சாயத்து சமிதி சுயமாக மூன்று மீன் பண்ணைகளை நடத்தி வருகிறது, இவற்றை வருவாய் ஈட்டுவதற்காக பஞ்சாயத்து தனியாட் களுக்கு குத்தகைக்கு விடுகிறது. இந்த மூன்று மீன் பண்ணைகள் மூலமாக 3 பண்ணைகளில் இருந்தும் முறையே ரூ.55,000, ரூ.52,000 மற்றும் ரூ.30,000 வருவாய் கிடைக்கிறது.

சமுதாயத்தினர் ஒன்று கூடவும், மகிழ்ச் சியான சூழலை உருவக்கவும் இந்த பஞ்சாயத்து பல்வேறு நிகழ்வுகளையும், திருவிழாக்களையும் கொண்டாடு வதற்காக சமுதாய கூடத்தை கட்டியு ள்ளது. ஒவ்வொரு நிகழ்வையும் நடத்து வதற்கு இங்கு வசிக்கும் ஒவ்வொரு வரும் தங்கள் பங்காக ரூ.500 செலுத்து கிறார்கள். சுயமாக வருவாய் ஈட்டுவதற் கான மற்றொரு வாய்ப்பு மார்க்கெட் ஸ்டால்கள் மற்றும் பேங்க்குகளில் இருந்து கிடைக்கிறது. பஞ்சாயத்துக்கு சொந்தமாக 12 மார்க்கெட் ஸ்டால்கள் உள்ளன மற்றும் ஒவ்வொரு ஸ்டாலுக்கும் மாத வாடகையாக முறையே ரூ.1000 கிடைக்கிறது அதே சமயம் பேங்க் மாத வாடகையாக ரூ.2000 வசூலிக்கப் படுகிறது. பஞ்சாயத்து சமிதிக்கு ஏராளமான இதர குறுகிய வருவாய் மாந்தோப்பு மற்றும் பிரமாண்டமான மரம் நடுதல் திட்டத்தின் வடிவில் கிடைக்கிறது.

2015-16-ம் நிதியாண்டில் வருவாய் ஈட்டுவதற்கான சுய வருவாயாக பஞ்சாயத்து ரூ.1,00,000 ஈட்டியது. இந்த வட்டாரம் தன் சுய வருவாயை திரட்டுவதற்காக மேற்கொண்டு வரும் முயற்சியானது குறிப்பிடத்தக்கதாகும். இது பஞ்சாயத்து சமிதியை பொருளாதார ரீதியில் அதிகாரம் கொண்டதாக மாற்றியதோடு மட்டுமில் லாமல், உள்ளூர் வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை உருவாக்கிக் கொள் வதற்கு உகந்த வாய்ப்பையும் ஏற்படுத் திக் கொடுத் திருக்கிறது.

ஒருசில ஆண்டுகளுக்குள்ளேயே, கோவாய் பஞ்சாயத்து சமிதி பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் உதவியுடன் தனக் கென சுய வருவாயை உருவாக்கிக் கொள்ள முடிந்தது. தன் சொந்த காலில் இப்போது நிற்கும் இந்த கோவாய் பஞ்சாயத்து சமிதி வளர்ச்சி மற்றும் நீடித்து நிலைக்கும் வருவாய் பாதையில் பயணிக்கிறது. இது தன் சுய வருவாய் மூலம் எல்லாரும் முன்னேற வேண்டும் என்பதை விரிவுபடுத்தும் நோக்கில் சீராக பயணிக்கிறது. ♦

# வரிகளை உரிய காலத்தில் செலுத்துவதின் முக்கியத்துவத்தை உணர்வது

## உள்ளூர் வருவாய் திரட்டும் ஆதாரம் சுயமாக உருவாகும் வருவாய் திரட்டுதலால் வளமைக்கும் செழிப்பிற்கும் வழி செய்கிறது.

எந்த ஒரு முறை சார்ந்த சமுதாயத்தை எடுத்துக் கொண்டாலும் சரி. முன்னேற்றத்தை உருவாக்குவதிலும். அதை உடைப்பதிலும் வருவாயே முக்கிய காரண கர்த்தாவாக திகழ்கிறது. இந்த காரணியே எல்கெபி வண்டலஊரு கிராம பஞ்சாயத்தின் மத்திய அம்சமாக திகழ்கிறது. வெளியிலிருந்து நிதி உதவி கிடைக்கும் என்பதற்காக காத்திருக்காமல், அரசு அல்லது இதர நிறுவனங்கள் தரும் நிதி வசதிகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் இந்த எல்கெபி வண்டல ஊரு கிராம பஞ்சாயத்து தன் சொந்த காலில் நடக்கவும் கிராம பஞ்சாயத்துக்குள் மேலும் சுயமாக வருவாயை ஈட்ட முடிவு செய்தது.

**விளைவு:** கிராமம், தானே சுயமாக வருவாய் ஈட்டும் மாடலாகி விட்டது. உள்ளூர் தார வளங்கள் அங்கு வசிக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவது கிராமத்தின் வளர்ச்சிக்கும் உதவியாக இருந்தது.

**இது எவ்வாறு சாத்தியமானது:** பஞ்சாயத்தின் வருவாய் ஆதாரத்தில் சுய ஆதாரம், பொது நோக்கத்திற்கான ஃபண்டு, குடிநீர், சுத்தம்-சுகாதாரம், தெரு விளக்குகள் மற்றும் இதர ஐட்டங்களுக்கான குறிப்பிட்ட நோக்கத்திற்கான ஃபண்டுகள் . மத்திய-மாநில ஃபைனான்ஸ் கிரான்ட்டுகள் . மத்திய மாநில அரசுகள் நடத்தும் திட்டங்கள் மூலமாக வருவய் மற்றும் வங்கி வட்டி ஆகியவையும் உள்ளடங்கும்.

பஞ்சாயத்தின் உள்ளூர் ஆதார வளங்களில் வீட்டு வரி, தொழில் வரி, பில்டிங் பர்மிஷன் கட்டணம், தனியார் குழாய் கட்டணம், லைட்டிங் வரி, டிரெய்னேஜ் வரி, லைஸன்ஸ் கட்டணம் போன்றவையும் உள்ளடங்கும்.

வரி செலுத்தோர் வரிகளை உரிய காலத்தில் செலுத்த அறிவுறுத்தப் பட்டார்கள். பஞ்சாயத்து வரி செலுத்துபவர்களுக்காக டிஜிட்டல் ஸ்டாட் அப்ளிகேஷனையும் பயன் படுத்தியது. இவ்வாறாக உள்ளூர் வரிகளை திரட்டிதில் வருமா சீராக அதிகரித்துக் கொண்டே போனது. கடந்த மூன்று நிதியாண்டுகளாக பஞ்சாயத்து 100% வரி வசூல் செய்து சாதனை படைத்திருக்கிறது.

இதற்கும் கூடுதலாக, கிராம பஞ்சாயத்து சமூகங்களுக்குள் சிறந்த சுத்தம்-சுகாதாரத்தை சீராக பராமரிப்பதற்கும் மற்றும் கழிவு நீரை வெளிப்படுத்த முறையான நெட்வொர்க்கை மேற்கொள்ளவும் உறுதி பூண்டது. ஜிபிடிபி (கிராம பஞ்சாயத்து மேம்பாட்டு திட்டம்) தெரு விளக்குகள்,



சாலை பராமரிப்பு, மற்றும் பொது உபயோக பன்பாட்டு வசதி போன்ற சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகளிலும் பயன்படுத்திக் கொள்ளப் பட்டன.

கிராம பஞ்சாயத்து சுயமாக தாக்குப் பிடித்து நிலைக்கும் முறை நோக்கி முன் சென்று கொண்டிருக்கிறது. கிராம பஞ்சாயத்துக்குள் இருக்கும் மகளிருக்கு உள்ளூர் ஆதார வளங்களை திரட்டுவதின் பயன்கள் குறித்து அறிவூட்டப் பட்டது. எனவே அனைத்தையும் உள்ளடக்கிய சமுதாயம் கிராம பஞ்சாயத்தில் உருவெடுக்க தொடங்கியது. ஆதார வளங்களை பகிர்ந்து கொள்வது மூலம் மேம்பாடு மற்றும் மக்களின் வளம் மீது கவனம் செலுத்தப் பட்டது. ♦

# ஈ- நிர்வாகம் வாயிலாக எனது கிராமத்தை உலகுடன் இணப்பது

உத்தரகாண்ட் மாநிலத்தின் கேதார்வாலா கிராமத்தின் முயற்சியானது. உத்தராகண்ட் மாநிலத்தின் கேதார்வாலா கிராம பஞ்சாயத்து, வெளி உலகினருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக தொழில்நுட்ப நுண்ணறிவு கொண்ட கிராமமாக உருமாற்றம் பெற்றிருக்கிறது. ங்-சேவைகளை தொடங்கியபோது பஞ்சாயத்து முதலில் தன் சுய நிர்வகிப்பை மேம்படுத்தியதோடு சேவைகள் துரிதமாக வழங்கப்படுவதையும் உறுதி செய்து கொண்டது. இந்த கிராம பஞ்சாயத்து தனது சொந்த வெப்ஸைட்- www.kedarwala.grampanchayat.orgயை அறிமுகப் படுத்தியது. கிராம பஞ்சாயத்தின் பிரதிநிதிகள் கிராமத்தில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள், திட்டங்களை பற்றிய தங்கள் அபிப்பிராங்களை ஃபேஸ்புக் மற்றும் வெப்ஸட்டில் பதிவு செய்யுமாறு ஊக்குவிக்கப் பட்டனர். இதை நோக்கி கிராம பஞ்சாயத்தின் முயற்சிகளில் ஒன்றாக. தன் குடிமக்கள் அனைவருக்கும் ஆதார் கார்டை பெறுவதற்கு ஊக்குவித்தது. அதே போன்று, வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு மற்றும் ஆலோசனை வழங்கும் முயற்சிகள் அவ்வப்போது மேற்கொள்ளப் பட்டன.

ஸ்வச் பாரத் மிஷனின் கீழ். கிராம பஞ்சாயத்து டாய்லெட் கட்டுமானம் பற்றி விழிப்புணர்வு திட்டம் தொடங்கி திட, திரவ கழிவு வெளியேற்ற நிர்வாகம் பற்றி விளக்கப் பட்டது. முறையான சுத்தம் சுகாதார பழக்கத்தை மேற்கொள்ளாமல் இருப்பது மற்றும் தனி நபர் சுகாதாரத்தில் அக்கறை காட்டாமல் இருப்பதால் ஏற்படக் கூடிய மோசமான பக்க விளைவுகள் பற்றி மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஓர் வாக்கு வாத போட்டியும் ஏற்பாடு செய்து நடத்தப் பட்டது. இதனால் கிராம பஞ்சாயத்து வெகு விரைவிலேயே திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அற்ற கிராமம் என்ற அந்தஸ்த்தை பெற்றது. குடிநீர் கிடைக்காமை அந்த கிராம மக்களின் பெரிய பிரச்சனையாக இருந்தது. குடிநீரை சேகரிப்பதற்காக பெண்கள் நிரைய நேரம் செலவழித்து இதற்காக மிகவும் கஷ்டப்பட நேரிட்டது.

இந்த பிரச்சனையிலிருந்து மீள்வதற்காக கிராம பஞ்சாயத்து பொருளாதார மற்றும் டெக்னிக்கல் ஸப்போர்ட் துறையின் உதவியை நாடியது. ஒவ்வொரு வீட்டிற்கும் குழாய் நீர் கிடைப்பதை உறுதி செய்து கொள்ள கிராம பஞ்சாயத்து குடிநீர் மேல்-நிலைத் தொட்டிகளை கட்டி அதை தொடர்ந்து பராமரித்தது.

கிராம பஞ்சாயத்தை குடி பழக்கம் அற்ற கிராமமாக மாற்றுவதற்காக, மற்றொரு முக்கிமான சமுதாய இயக்கம் மேற்கொள்ளப் பட்டது. இதுபற்றி அங்கிருக்கும் மக்கள் கலந்து ஆலோசனை செய்வதற்காக விவாதம் மற்றும் ஒழுங்கு முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. கிராம பஞ்சாயத்து ஆங்கன்வாடி செயல்பாடுகளை மேற்பார்வையிட்டதோடு சுகாதார ஊழியர்கள் வாயிலாக தடுப்பூசி மற்றும் ஆரோக்கிய நலன் சார்ந்த ஆலோசனைகள் உள்ளிட்ட ஆரோக்கிய சேவைகள் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப் படுவதையும் மேற்பார்வையிட்டது.

கிராம பஞ்சாயத்தின் ஆண்-பெண் சமநிகர் மேம்பாடு சமுதாயத் துறை முயற்சி ஓர் மகத்தான முயற்சியாகும். 6 முதல் 14 வயதுள்ள எல்லா பெண்பிள்ளைகளும் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து கல்வியறிவை பெறுவதை கிராம பஞ்சாயத்து நிச்சயப் படுத்தியது. முதியோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் அரசாங்க நலத் திட்டங்களின் பயன்களை பெறுவதை உறுதி செய்யும் நடவடிக்கைகள் கிராம பஞ்சாயத்து மேற்கொண்டது. அதேபோன்று. உணவுப் பாதுகாப்புத் துறையுடன் ஒன்றிணைந்து தகுதியான் எல்லா குடும்பங்களுக்கும் ரேஷன் கார்டு கிடைப்பதை கிராம பஞ்சாயத்து உறுதி படுத்தியது. இவ்வாறு அயராத முயற்சிகளை மேற்கொண்டதை அங்கீகரிக்கும் விதமாக ம்நில அரசு இந்த கிராம பஞ்சாயத்தை மாதிரி பஞ்சாயத்தாக அறிவித்து கௌரவித்தது. ♦




3 குளங்கள் முறை கிராமத்தை தூய்மையானதாக்கி மற்ற கிராமங்களும் இதை ஏற்க ஊக்குவித்தது.

# மக்கள் பங்கேற்பின் மூலமாக கிராம வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்துதல்

கர்நால் மாவட்டத்திலுள்ள சந்த்சாமண்ட் கிராம பஞ்சாயத்து எவ்வாறு ஒரு மனிதரின் தீர்க்கமான கண்ணோட்டத்தால், மக்கள் பங்கேற்புடன் தரம் குறைந்த கிராமத்தை ஆதார வளங்கள் நிரம்பிய கிராமமாக மாற்றி சுய அதிகாரம் மற்றும் தூண்டுவிப்பினால் அந்த கிராம மக்களின் எதிர்காலத்தை மாற்ற முடியும் என்பதற்கு ஓர் இணையற்ற உதாரணமாக திகழ்கிறது.

சந்த்சமண்ட் என்பது ஹரியானாவின் கர்நால் மாவட்டத்தின் இந்த்ரி வட்டத்தின் அமைந்துள்ள ஓர் கிராமமாகும். இந்த கிராமத்தில் 2248 மக்கள் வசிக்கும் 415 குடும்பங்கள் உள்ளன. கிராமம் மற்றும் அங்கு வாழும் மக்களின் நலன் மற்றும் வளர்ச்சியானது கிராமத்தின் பஞ்சாயத்து மேற்கொண்ட முயற்சிகளால்தன் சாத்தியமானது.

கழிவுநீர் நிர்வாகம் என்பது மிகப் பெரும் பிரச்சனையாக இருந்தது. ஏனென்றால் பொது இடங்களில் மலாக குவிந்து கிடந்த குப்பையை எதிர்த்து மக்கள் போராட்டத்தில் இறங்கினர். கழிவு நீர் முறையாக அகற்றப் படாத காரணத்தால் அழுக்கால் நிரம்பி வழியும் குளங்கள். கழிவு நீர் தேங்கி நிற்கும் தெருக்கள் என மொத்த கிராமுமே ஓர் அருவசையான அறுவறுப்பான காட்சியை ஏற்படுத்தியது. இந்த சந்தர்ப்பத்தில், கிராம பஞ்சாயத்து இதற்கான தீர்வை மும்முரமாக தேடத் தொடங்கியது. ஸேனிடேஷன் துறையில் எம்ஜிஎன்ஆர்ஈஜிஏ -வின் கீழ் திரீ பாண்ட் ஸிஸ்டம் என்ற பெயரில் ஒரு புராஜக்ட் கிராம பஞ்சாயத்துக்குள் பிரவேசித்தது. இது கழிவு நீரை சுத்தம் செய்து அதை தோட்டம், கிச்சன் கார்டன் மற்றும் பாசனத்திற்காக மேற்கொண்டு உபயோகிப்பது இந்த புராஜக்டின் நோக்கமாகும்.

ஆகவே, இப்படி விரயமாகும் கழிவு நீரை முறையாக வெளியேற்றி தற்சமயம் இருக்கும் அழுக்கடைந்த நிலையில் இருக்கும் குளங்களை நல்ல ஆதார வளமாக்குவதற்காக மற்றும் நோய் நொடிகள் பரவாமல் தடுப்பதற்காக ஸ்வச் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கும் (ஜிபி) ஸாலிட் அண்ட் லிக்விட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் (எஸ்எல்டபிள்யுஎம்) புராஜக்டும் ஒன்றாகும். மேலும் ஏராளமான குடும்பங்களுக்கு ஜிபி ஆதாரத்தில் நிதி உதவி தரவும் திட்டமிடப் பட்டது. அதனால், இது பஞ்சாயத்துகளுக்கான ஸ்வச் பாரத் மிஷனின் கீழ் ஓர் பாகமாக தேசத்தின் முக்கியத்துவம் வாய்ந்த அத்தியாவசியமான திட்டமாகும். கிராமத்தில் கழிவு நீர் வெளியேற்றம் பிரச்சனைக்கு தீர்வு கண்டதற்கும் கூடுதலாக இந்த புராஜக்ட் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்தரவாத திட்டத்தில் (எம்ஜிஎன்ஆர்ஈஜிஏஎஸ்) கிராமவாசிகளுக்கு வேலை வாய்ப்பையும் வழங்கியது.

வேஸ்ட் ஸ்டெபிலைஸேஷன் பாண்ட்ஸ் (டபிள்யுஎஸ்) கிராமங்களின் வீடுகளில் கழிவு நீரை சுத்திகரிப்பதற்கான மிகவும் பொருத்தமான உபாயமாகும். அதற்கு நிலங்கள் நியாயமான வாய்ப்பு விலையில் கிடைத்தன, திறன் வாய்ந்த கூலி தொழிலாளிகள் கிடைப்பது மிகவும் குறைவாகவே இருந்தது. இது பன்முக பயன்களையுந் கொண்டிருந்தது. (பொதுவாக மிகவும் குறைவான செலவில்) குறைவான பராமரிப்பு, உயர் திறன், முற்றிலும் இயற்க மற்றும் உயரிய தாக்குப் பிடிக்கும் திறன்.

இந்த புராஜக்டில் நேரடி சோலார் எனர்ஜி உபயோகமாகியது. ஆகவே அவற்றுக்கு எலக்ட்ரோமெக்கானிகல் சாதனமும் தேவைப்படவில்லை. அதன் மூலம், மின்சாரம் மற்றும் ஸ்கில்டு செயல்பாட்டின் செலவினங்களில் கணிசமாக சேமிக்க முடிந்தது. சாந்த்ஸமண்ட் கிராமத்தில் இந்த மூன்று குளங்களையும் அமைப்பதற்கு மொத்தம் 3 ஏக்கர் பரப்பில் கட்டப்பட்டன (முதல் குளம் 1 ஏக்கர், 2-வது குளம் 0.5 ஏக்கர் மற்றும் 3-வது குளம் 1.5 ஏக்கர்). இதற்கும் கூடுதலாக, மேற்கண்ட ஸிஸ்டத்தை அமைக்க சுமார் 15-20 லட்சம் செலவானது.

### இந்த மூன்று குளங்களின் ஸிஸ்டம் எவ்வாறு வேலை செய்கின்றன

இந்த மூன்று குளம் ஸிஸ்டம், இம்மூன்று குளங்களின் பெயரைப் போலவே அனேரோபிக், ஃபாகுல்டேடிவ் மற்றும் மச்சுரேஷன் குளங்களாகும். இந்த ஸிஸ்டம், ஸீரீஸில்

மூன்று கட்டங்கள் வரை, இன்புட் தண்ணீரின் ஆர்கானிக் ஸ்ட்ரெங்க்த் மற்றும் மூலப்பொருட்களின் வழிந்தோடும் கழிவுகளின் தரத்தைப் பொறுத்து வெவ்வேறு வகையான சுத்திகரிப்பை பெறும் விதமாக டிஸைன் செய்யப் பட்டிரு ந்தன. முதல் கட்ட ஏனோரோபிக் குளத்திலிருந்து வழியும் கழிவு நீர் இரண்டாவது ஃபாகுல்டேடிவ் குளத்தை நிரப்பி வழியச் செய்யும்.அது இரண்டாவது கட்டத்தின் பயாலாஜிக்கல் டிரீட்மென்ட் ஆகு. ஃபாகுல்டேடிவ் குளத்தைத் தொடர்ந்து டெரியேட்டரி டிரீட்மென்ட்டை வழங்குவதற்காக மேச்சுரேஷன் குளங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. டபிள்யுபி-யில் நடைபெறும் ஆக்டிவிடி பாக்டீரியா. பாசி ஆகியவற்றின் காம்ப்ளெக்ஸ் கூட்டு ஆகும். அது கழிவை ஸ்திரப் படுத்தி பெதொஜென்களை குறைக்கிறது.

## 70% குடும்பங்கள் பயனடையப் போகின்றன

டிரீட்மென்ட் குளங்கள் டாய்லெட்டுகள், கிச்சன்கள் மற்றும் பாத்ரூம்களிலிருந்து வெளியேறும் கழிவு நீருக்கான குளங்களாகும். மேலும் பெரும்பாலானவற்றில் ஃபேக்கல் மேட்டர் அடங்கியிருக்கும். இந்த நீரை ஸ்வாம்ப்ஸ் போன்ற சுற்றுப்புறத்திலிருக்கும் நேச்சுரல் ஃபில்ட்டர் ஸிஸ்டத்தை இணைப்பதற்கு முன்பாக டிரீட் செய்யப்பட வேண்டும். இதன் மூலம் சுற்றுப்புறசூழலுக்கு பாதகம் விளைவிக்காமல் மற்றும மாசு ஏற்படுவதை தடுக்கும் விதமாக கழிவு நீரை வெளியேற்ற முடியும். இதன் உதவியுடன், சாக்கடை நீர் டிரீட்மென்ட் கழிவு நீர் மற்றும் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரில் இருந்து அசுத்தங்களை அகற்றும் செயல்முறையாகும். இந்த அசுத்தங்களை அகற்றுவதில் பிஸிக்கல், கெமிக்கல் மற்றும் பயாலாஜிக்கல் பிராஸஸ்களும் உள்ளடங்கும். இது இக்கிராமத்தின் சுமார் 70% குடும்பங்கள் வெளியேற்றும் கழிவு நீரை வெளியேற்ற உதவுகிறது.

இந்த குளங்களை அழகு படுத்துவதற்காக குளங்களைச் சுற்றிலும் பசுமைப் படுகை உருவாக்கப் பட்டது. கிராமவாசிகளுக்கு ஓர் தூய்மையான சுற்றுச் சூழலை இது ஏற்படுத்திக் கொடுத்ததோடு இந்த மூன்று குளம் ஸிஸ்டம் நிலத்தடி நீரையும் ரீசார்ஜ் செய்து விடுகிறது.

## எதிர்கொள்ளப்பட்ட சவால்கள்

தங்கள் கிராமத்தில் இந்த மூன்று குளங்களையும் கட்டுவதில் சாந்த்ஸமண்ட் பஞ்சாயத்தும் ஏராளமான எதிர்ப்புகளை எதிர் கொள்ள நேரிட்டது. கூலியாட்கள் மற்றும் மெஷினரி பற்றாக்குறை இந்த மூன்று குளங்களின் ஸிஸ்டத்தை கட்டுவதில் பஞ்சாயத்து தலைவர் எதிர்கொண்ட பிரச்சனைகளில் ஒன்றாகும். எம்ஜிஎன்ஆர்ஈஜிஏ-வின் கீழ் கூலியாட்களை பணிக்கமர்த்தி இந்த ஸிஸ்டத்தை கட்டி முடிக்க கிட்டத்தட்ட ஓராண்டு ஆகியது. இந்த புராஜக்டுக்கு நிதி வசதி கிடைப்பதும் மற்றுமொரு முட்டுக்கட்டையாக இருந்தது.இதில் பஞ்சாயத்து தனசு சொந்த ஃபண்டை பயன்படுத்திக் கொண்டதோடு, மாவட்ட கமிஷனர் ஆபீஸிலிருந்து ஹெல்த் ஸானிடேஷன் புரோகிராமின் கீழ் ஐந்து லட்சத்தையும் செலவிட்டது. முக்கியமாக உபயோகிக்கப்பட்ட கச்சா பொருட்களில் செங்கல், ஆர்ஸிஸி கம்பங்கள் மற்றும் பிவிஸி பைப்புகள் போன்றவையாகும். இதற்கும் மேலாக குளங்களின் அருகாமையில் நடப்பட்டிருந்த மரக்கன்றுகளுக்கு தண்ணீர் பாச்சுவதற்காக ஸப்மெர்ஸிபிள் மோட்டார் 180 அடி ஆழத்தில் தோண்டப் பட்டன. பஞ்சாயத்து தலைவரும் என்ஜீனியர்களும் இவ்விஷயத்தை பொறுப்புடன் கையாண்டு ஸிஸ்டம் வெற்றிகரமாக இயங்குவதற்கு வழி செய்தனர்.

## கிராம வாழ்க்கையை மேம்படுத்தல்

சிறப்பான அடிப்படை வசதிகளை வழங்குதல், சுத்தம்-சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தரும் முயற்சியில் கிராம பஞ்சாயத்து வெற்றி கண்டது. கிராமத்தில் அடிப்பட வசதிகளை ஏற்படுத்தித் தருவதை பொறுத்தமட்டில் சாந்த்ஸமண்ட் பஞ்சாயத்து தலைவர் பயனளிக்கும் விளைவுகளை காண்பித்தார். கிராமத் தில் 5 இயங்கவல்ல சவுபால்கள்/கூடங்கள் இருந்தன. அவை சமுதாய கூட்டம், திருமணம் போன்ற நிகழ்வுகளை நடத்த உபயோகித்துக் கொள்ளப் பட்டன. அதோடு கிராம சபைகள் கிராமத்தின் சாலைகளை சீரமைத்து பக்கா சாலைகளை அமைக்கும் பணியில் தங்கு தடையற்ற அர்ப்பணிப்ப அளித்தன. தூய்மை கேம்பெய்னுக்கு உயிரோட்டம் கொடுத்து ஸ்வச் பாரத் அபியானை முன்னுரிமையாக வைத்து இந்த கட்டி டங்களில் ஆண்கள் பெண்களுக்காக தனித்தனி டாய்லெட்டுகள் கட்டப் பட்டன. ஸ்வச் பாரத் அபியான் திட்டத் தை வழி செய்ய விடும் நோக்கின் வாயிலாக பகுதி மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதிலும் வெற்றி கண்டது. மூன்று குளம் ஸிஸ்டமே எம்ஜிஎன்ஆர் ஈஜிஏ-வின் கீழ் கிராமத்தினருக்கு வேலை வாய்ப்பு ஆதாரமாக திகழ்ந்தது.

கிராமத்தில் கல்வியை மேம்படுத்தும் விதமாக பஞ்சாயத்து ஏராளமான முயற்சிகளை மேற்கொண்டது. கிராமத்தில் உள்ள பள்ளியில் 8-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கல்வி வசதியை அளிப்பதாக இருந்தது.12-ம் வகுப்பு வரை படிக்கும் பள்ளிக் கூடமாக அதை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அதோடு இந்நாட்களில் விளையாட் டுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியிருப்பதை முன்னிறுத்தி பள்ளி பிள்ளைகள் விளையாடவும். அவர்களுள் ஒளிந்திருக்கும் திறமை களை வெளிக் கொணரவும் 8 ஏக்கர் நில பரப்பில் விளையாட்டு மதானம் அமைக்கவும் திட்டமிடப் பட்டது. பள்ளியு பஞ்சாயத்தின் சுய வருவாயை வைத்து கட்டப் பட்டது. பள்ளியில் மாணவர்களுக்கு தண் ணீரை தூய்மைப் படுத்துவதற்காக ஆர்ஓ ஸிஸ்டம், இன்வெர்ட்டர், ஹேண்ட் பம்ப்புகள், பிளே கிரவுண்ட்ஸ் போன்ற பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப் பட்டதோடு அங்கு சோலார் பேனல் உக்திகளும் பயன்படுத்தப் பட்டண. ஸ்வச் பாரத் அபியான் திட்ட நோக்கில் சுத்தம் சுகாதாரத்தை பேணிக் காப்பதற் காகவும், கிராமத்தின் வருங்கால சந்ததியினருக்கு நோய் நொடிகள் பரவுவதை தடுப்பதற்காக ஆண்கள் பெண்களுக்கென தனித் தனியே டாய்லெட்டுகள் கட்டப் பட்டன.

நமது வாழ்வில் ஈடுபாட்டையும், முன்னேற்றத்தையும் கொண்டு வர வேண்டுமென்றால் அதற்கு பாதையமைத்து தருவது சவால்கள்தான் என்று மிகச் சரியாகவே கூறப்படுகிறது. தனக்கு சில மதிப்பையும் பயனையும் அதிலிருந்து பெறுவதற்காகவே பஞ்சாயத்து இந்த நிலத்தை பெரிது பாராட்டும் விதமாக பயன்படுத்திக் கொண்டது. 68 ஏக்கர் நிலப் பரப்பு குத்தகைக்கு விடப் பட்டு அதிலிருந்து ஆண்டுக்கு ரூ. 12 லட்சம் திரட்டப் பட்டது. 8 ஏக்கர் நிலப் பரப்பு ஸ்டேட்யம் கட்டுவதற்காக உபயோகப் படுத்தப் பட்டது. 5 ஏக்கர் ஸ்கூலுக்கும் 4 ஏக்கர் நிலம் மீன் பண்ணைக்கு குத்தகைக்கும் விடப் பட்டது. மீதமுள்ள நிலப் பரப்பு கிராம கால்நடைகள், பிராணிகளின் மேய்ச்சலுக்காக ஒதுக்கப் பட்டது.

ஆகவே வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் தனது மகத்தான மற்றும் அர்ப்பணிப்புள்ள முயற்சிகளுடன் சாந்த்ஸமண்ட் கிராம பஞ்சாயத்து மற்ற முக்கிய பஞ்சாயத்துகளுக்கு இணையற்ற பஞ்சாயத்தாக திகழ்கிறது. உறுதியான மற்றும் தீர்க்கமான நிலைப்பாட்டுடன் இந்த கிராம பஞ்சாயத்து உயரிய அளவிலான அங்கீகரிப்பில் தனக்கென ஓரிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. ♦

## ஸன்ஸத் ஆதர்ஷ் கிராம் யோஜனா

# சப்கா கிராம பஞ்சாயத்து- சமுதாயத்தின் கடின உழைப்பு மற்றும் எம்பி-யின் முயற்சி மூலமாக நீர்ப்பாசன மாடல் உருவாக்கம்

**மார்கண்டேய நதிக்கரையோரம் அமைந்துள்ள சப்கா பஞ்சாயத்து ஒவ்வொர் ஆண்டும் 1500 செமீ மழையே பெற்று வருகிறது. இருந்தாலும் கிராமத்தின் 90 சதவிகிதத்துக்கும் அதிகமான விளை நிலங்கள் நீர்ப்பாசன வசிதியில்லாமல் இருக்கின்றன.**



சப்கா கிராம பஞ்சாயத்து பவன்

மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் திரு தினேஷ் கஷ்யப் நஅளவ பேஸ்-ஐன் கீழ் சத்தீஸ்கட் மாநிலத்தின் பஸ்தார் மாவட்டத்திலுள்ள சப்கா கிராம பஞ்சாயத்தை தத்து எடுத்துக் கொண்டார். சப்கா கிராம பஞ்சாயத் தில் 1942 மக்கள் தொகையுடன் 458 குடும்பங்களைக் கொண்ட 1 கிராம மாகும். ஒவ்வோர் ஆண்டும் 1500 செமீ மழை பெற்றாலும் கூட பயிரிடக் கூடிய 90 சதவிகித விளை நிலங்கள் பாசன வசதி இன்றியே இருந்தன.

## எஸ்ஏஜிவை வாயிலாக மாற்றம்

எஸ்ஏஜிவை-யின் கீழ் பஞ்சாயத்து தத்து எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் எல்லோருக்கும் நீர்ப்பாசன வசதியை செய்து தருவதற்காக ஏராளமான தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. வில்லேஜ் டெவலப்மெண்ட் பிளானை (விடிபி) தயாரிக்கும் போது கிராமத்தில் ஒரு நீர்ப்பாசன கமிட்டி ஏற்படுத்தப் பட்டு அதில் கிராம



விவசாயிகள், வேளாண் பல்கலைக் கழக நிபுணர்கள், மகாத்மா காந்தி நேஷனல் ரூரல் எம்ப்ளாய்மெண்ட் கியாரண்டி ஆக்ட் (எம்ஜிஎன்ஆர் ஈஜிஏ) கிளஸ்ட்டர் பெஸிலிடேஷன் டீம்கள் (ஸிஎஃப்டிஎஸ்) மற்றும் பாசனத் துறை ஸப்-என்ஜீனியர்கள் அதில் இருந்தனர். அதன் பிறகு ஓர் விஸ்தீரணமான கிராம பாசன திட்டம் உருவாக்கப் பட்டது. இந்து திட்டத்தின் முதல் பாகம் கான்டூர் குழிகள், தடுப்பு குளங்கள், தேங்கி நிற்கும் குழிகள், பெர்குலேஷன் டேங்க்குகள், விவசாய குளங்கள் மற்றும் பாரம்பரிய குறுகிய அளவில் தண்ணீரை பெறுவது போன்றவற்றை உருவாக்கி அதில் மழை நீரை சேகரிக்க திட்டமிடப் பட்டது.

திட்டத்தின் இரண்டாவது பாகம் ஷக்கம்பாரி ஸ்கீம் மற்றும் பிஆர்ஜிஎப்-ல் இருந்து ஃபண்டுகளை பயன்படுத்தி ஆற்று நீர் மற்றும் அணைக்கட்டிலிருந்து டிஸல் மற்றும் எலக்ட்ரிக் பம்ப்புகளை உபயோகித்து லிஃப்ட் பாசனத்திற்காக குழுக்கள் உருவாக்கப் பட்டதோடு ஒருமித்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன. 200க்கும் அதிகமான ஹெக்டேரில், ஆண்டு முழுவதும் கிராமத்திற்கு பாசன வசிதி கிடைக்கச் செய்வதற்கும் ஃபீல்டு சேனல் கனெக்ஷன் எம்ஜிஎன் ஆர்ஈஜிஏ-வின் கீழ் தொடங்கப் பட்டு 15 மைக்ரோ பாசன யூனிட்டுகல் நிறுவப் பட்டன. இந்த முயற்சிகள் யாவும் பல்வேறு பங்குதாரர்களின் கூட்டமைப்பு மூலம் மேற்கொள்ளப் பட்டு இந்த பிராந்தியத் தில் விவசாயத்தை வலுப்படுத்துவதற் காக நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. இதில் சொட்டு நீர் பாசனத்துடன் கூடிய குழாய் கிணறு அமைப்பது சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு டீஸல் மற்றும் எலக்ட்ரிக் பம்ப்புகளை வழங்குவதும் உள்ளடங்கும். விளைச்சல் மற்றும் தனித்தனி விவசாய உபகரணங்களை வழங்கவும் 200 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப் பட்டது.

## எஸ்ஏஜிவை குறுக்கீட்டால் கிடைத்த பலன்கள்

ஆண்டு முழுவதும் பாசனத்திற்காக தண்ணீர் கிடைத்தபடியால் சப்கா கிராமத்து விவசாயிகள் எஸ்ஆர்ஐ இயற்கை விவசாயம், சிறந்த விதைகள்



உபயோகம் மற்றும் வேளாண் யுக்திகளை ஏற்றுக் கொண்டு இப்போது உணவு மற்றும் பணப்பயிர்களை விளைவிப்பதில் ஆர்வமுடன் உள்ளனர். இவையனைத்துமே பாராளு மன்ற உறப்பினர் எடுத்த உறுதியான முயற்சி, குழுவாக செயல்பட்டு எடுத்த முயற்சியால்தான் சாத்தியமாயிற்று. ♦

# கிராம பஞ்சாயத்து மேம்பாட்டு திட்டம்

## மக்கள் திட்ட கேம்பெய்ன்

## அக்டோபர் 2 முதல்

## 31 டிசம்பர் 2018 வரை

### வறுமையற்ற கிராம பஞ்சாயத்துகள்




### குறிக்கோள்கள்:

- பயனுள்ள வகையில் கிராம சபைகளை நடத்துவதற்காக டிஏவை-என்ஆர்எல்எம் கன் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 31 லட்சம் பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பங்கை வலுப்படுத்துவது
- 2018-19ல் ஏற்பட்ட முன்னேற்றத்தின் சான்று அடிப்படையிலான பரிசீலனை மற்றும் 11 ஷெட்யூலின் எல்லா 29 அமைப்புகளிலும் 2019-20க்கான உத்தேச திட்டங்கள்
- பொது மக்களுக்கான தகவல் அறிவிப்பு கேம்பெய்ன்- ஸ்கீம்கள், நிதிகள் போன்ற விவரங்களை எல்லா பஞ்சாயத்து அலுவலகங் களில் வில்லேஜ் டிஸ்பிளே போர்டிலும் மற்றும் கிராம் ஸம்பாத் ஏப்-ல் பொதுமக்களுக்கு முறைமையாக வெளிப்படுத்துதல்
- 2 அக்டோபர் முதல் 31 டிசம்பர் 2018 வரையில் வடிவமைக்கப்பட்ட கிராம சபை கூட்டங்கள் நடத்துவது. அதில் 11 ஷெட்யூலின் எல்லா 29 செக்டர்களையும் சார்ந்த முன்னிலை அலுவலர்கள்/சூப்பர்வையர்களை நேரடாக பங்கேற்க வைத்து அவர்களின் கருத்துகளை எடுத்துக் கூற வைப்பது
- நடைமுறைக்கேற்ற மற்றும் முழுமையான கிராம பஞ்சாயத்து மேம்பாட்டு திட்டங்களை வழங்கிட பிளான் பிளஸ்ஸின் வலுவாக்கம்

### XI ஷெட்யூலின் எல்லா 29 செக்ட்டார்களிலும் சேர்ப்பதற்காக ஜிபிடிபி பிளானிங்

| XI-வது ஷெட்யூலின் 29 செக்டார்கள் | இதைச் சார்ந்த அமைச்சகங்கள் | ஸ்கீம்கள்/ஃபண்டுகள் |
|---|---|---|
| நில அபிவிருத்தி | ஊரக மேம்பாடு, டிபார்ட்மன்ட் நில ஆதாரங்கள் துறை அமைச்சகம் | SHC, DILRMP |
| ஊரக குடியிருப்பு திட்டம் | ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகம் | PMAY(G) |
| குடிநீர் | குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை அமைச்சகம் | NRDWP |
| சாலைகள் | மேம்பாட்டுத்துறை அமச்சகம் | PMGSY, SAGY, MGNREGA |
| ஊரக மின்மயமாக்கம் | மின்சாரத்துை அமைச்சகம் | UJALA, IPDS, DDUGJY, Saubhagya |
| கல்வி | கல்வி மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் | ICDS, SSM, SSA, SBM, MDMS |
| தொழில் கல்வி | திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகம் | PMKVY |
| மார்க்கெட்டுகள் மற்றும் சந்தைகள் | ஜவுளித் துறை அமைச்சகம், ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சகம் | NRLM |
| சுகாதாரம் மற்றும் துப்புரவு | சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம். குடிநீர் மற்றும் துப்புறவுத் துற அமைச்சகம் | NRHM/NHM, NRDWP, Mission Indradhanush, ICDS, SBM |
| மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு | மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் | BBBP, ICDS, OSTC, UJJAWALA, Swadhar Greh, Mahila E-Haat, MSK, STEP |
| சமூக நலன் | சமூக நீதி மற்றும் சுய அதிகாரத் துறை அமைச்சகம் | IPOP, Scholarship Programmes, SRMS |
| பொது விநியோகம் | | |

| XI-வது ஷெட்யூலின் 29 செக்டார்கள் | இதைச் சார்ந்த அமைச்சகங்கள் | ஸ்கீம்கள்/ஃபண்டுகள் |
|---|---|---|
| விவசாயம் | விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் | PKVY, PMKSY, FMFBY, NMAS, NFSM, MIDH, NMAFT, NM, e-NAM |
| கால்நடை வளர்ப்பு | | |
| முறை சாரா கன்வென்ஷனல் எனர்ஜி | புதிய மற்றும் ரினீவபிள் எனர்ஜித்துறை அமைச்சகம் | |
| வறுமை ஒழிப்பு திட்டம் | ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சகம் | MDMS, MGNEGS, DAY-NRLM, NSAP |
| பொது உடைமைகள் பாதுகாப்பு | பஞ்சாயத்திராஜ் அமைச்சகம் | FFC |
| குடும்ப நலன் | சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் | PMUY |
| நலிவுற்றோர் நலன் | நிதி அமைச்சகம் | PMSRY, PMJRY, HKKP |
| மீன் வளர்ப்பு | | |
| சமூக காடுகள் | | |
| சிறு தொழில்கள் | ஜவுளித்துறை அமைச்சகம், ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகம் | PMEGP |
| காதி, கிராம, குடிசைத் தொழில் | | PMEGP |
| எரிபொருள், கால்நடை | | |
| முதியோர் மற்றும் முறை சாரா கல்வி | | |
| நூலகங்கள் | | |
| கலாச்சார நடவடிக்கைகள் | | |

## கிராம பஞ்சாயத்து மேம்பாட்டு திட்டம்




## பங்கேற்கும் அமைச்சகங்கள் மற்றும் துறைகள்

- பஞ்சாயத்திராஜ் M/o & D/o ஊரக மேம்பாடு
- D/o ஆஃப் அக்ரிகல்ச்சுரல் கோஆபரேஷன் மற்றும் விவசாயிகளின் நலன்
- D/o கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் மீன் வளர்ப்பு
- M/o சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் கிளைமேட் சேஞ்ஜ்
- M/o மைக்ரோ ஸ்மால் மற்றும் மீடியம் நிறுவனங்கள்
- M/o குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம்
- D/o பள்ளி கல்வி மற்றும் கல்வியறிவு துறை
- M/o சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் அமைச்சகம்
- M/o மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சகம்
- D/o உணவு மற்றும் பொது விநியோகத்துறை
- பழங்குடியினர் விவகார அமைச்சகம் மற்றும் சமூக நீதி மற்றும் சுய அதிகாரத் துறை
- D/o ஃபைனான்ஷியல் சர்வீஸஸ் துறை
- மின்சாரத்துறை அமைச்சகம்
- பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயுத் துறை அமைச்சகம்




Public Information Board

**பீபிள்ஸ் பிளான் கேம்பெய்ன்- நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கை ஐட்டங்கள்**

- கேம்பெய்னுக்காக நோடல் அதிகாரிகள் நியமனம் மற்றும் வெப் போர்ட்டல் ரெஜிஸ்ட்ரேஷன் (www.gpdp.nic.in)
- ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கும்/ ஊரக அமைப்புக்கும் ஃபெஸிலிடேட்டர் நியமனம்
- கிராம சபை கூட்டங்களை நடத்துவதற்காக கிராம பஞ்சாயத்து வாரியாக காலண்டர் தேதிகளை முடிவு செய்தல்
- ஒதுக்கப்பட்ட தேதிகளில் கிராம சப கூட்டங்களில் வடிவமைக்கப்பட்ட பிரஸன்டேஷன்களை அளிக்க அனுப்புவதற்காக பதினோராவது ஷெட்யூலின் 29 அம்சங்களுக்கும் தொடர்பான எல்லா துறைகளுக்கும் ஃபரன்ட்லைன் பணியாளர்கள் நியமனம்
- ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் பொதுமக்களுக்கான தகவல் பலகையை டிஸ்பிளே செய்வது மற்றும் அதன் ஜியோ டேக்டு போட்டோக்களை வெப் போர்ட்டலில் அப்லோடிங் செய்தல்
- கிராம சபை கூட்டங்கள் நடைபெறும் போது ஜியோ டேக்டு போட்டோக்களை அப்லோடிங் செய்வது
- பிளான் பிளஸ் அப்ளிகேஷனில் ஒப்புதல் பெற்ற திட்டத்தை வெளியிடுவது

### ஃபெஸிலிடேட்டர்களின் பணி:

- எம்ஏ ஃபார்மேட்டை உபயோகித்து மிஷன் அத்யோதயாவின் கீழ் (எம்ஏ) ஸர்வேக்களை மேற்கொள்வது
- ஒதுக்கப்பட்டிருக்கும் தேதிகளில் ஜிபிடிபி-க்காக சிறப்பு கிராம சபை கூட்டுவதற்கு வழி செய்தல்
- கிராம சபையின்போது பாதிப்புக்கு உள்ளாக கூடிய எஸ்ஸி/எஸ்டி பெண்கள் உள்ளிட்ட சமுதாயங்கள் ஒன்று கூட்டப் படுவதை உறுதி செய்வது
- போர்ட்டலில் கிராம சபை கூட்டங்களை நடத்துவது பற்றிய அறிக்கையை சமர்ப்பித்தல்

ஒடிஷ்ஷா

# பாரம்பரிய நாலட்ஜ் ஸீட் மதர் மாடல் வழியாக அமோக உற்பத்தி கிடைப்பதை உறுதி படுத்துதல்

**ஆதிவாசி பெண்கள் பாரம்பரியமாக விதைகளை பாதுகாத்து பராமரித்து அதை சேகரித்து வருகின்றனர். விதைகளை பாதுகாத்து வைப்பதில் அவர்கள் உள்ளார்ந்த அறிவை கொண்டிருக் கிறார்கள். இவ்வாறு விதை சேகரித்து பாதுகாப்பதில் உள்ளார்ந்த அறிவு கொண்ட ஒருசில செல்வாக்குள்ள மற்றும் ஆதாரபூர்வ விஷயங்களை அறிந்த பெண்களை ஒரிஸ்ஸா அடையாளம் கண்டது.**



## பின்னணி

மல்கான்கிரி, ஒடிஷ்ஷாவில் ஆதிவா சிகள் பெருமளவில் வசிக்கும் மாவட்ட மாகும். இந்த மாவட்டத்தில் பெரும் பாலான ஆதிவாசி விவசாயிகள் மார்க் கெட்டில் கிடைக்கும் விதை களை உபயோகித்து உள்ளூரி லேயே கிடைக் கும் பன்முக வெரைட்டி விதைகளை இழந் தனர். நெகிழ் திறன் கொண்ட உள்ளூரில் கிடைக்கும் நல்ல தரமான விதைகள் மெல்ல மெல்ல அவற்றின் முக்கியத் துவத்தை இழந்தன. அதோடு அரசாங் கத்தின் முறையற்ற நிர்வகிப்பு மற்றும் அதில் குறைவான கவனம் செலுத்திய காரணத்தால் அவை அழிந்து போயின. சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள் மார்க்கெட் விதைகளின் சார்பு நிலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்ததால், இது விவசாயத்தில் மேலும் அதிகமாக செலவிட வழி செய்து விட்டது.

ஒரிஸ்ஸா என்பது, மல்கான்கிரி மற்றும் காந்தாமால் மாவட்ட கிராமங்களில் அதிநவீன விவ சாய அணுகுமுறை அடிப் படை யில் விவசாய பழக்கங் களின் மேம்பாட்டை மேம்படுத் தும் ஓர் என்ஜிஓ ஆகும். ஆதிவாசிகள் பெரும்பாலும் வாழும் தொலை தூர பகுதிகளில் இந்த மார்க்கெட் விதைகள் நல்ல மகசூலையும், நீடித்து நிலைக்கும் பலன்களை யும் தராது என்பதை அவர்கள் மெல்ல உணர ஆரம்பித்தனர். மேம்படுத்திய வெரைட்டிகள் சில சமயங் களில் அப்பகுதி யின் மாறிக்கொண்டே வரும் பருவ நிலைக்கு ஏற்றதாக இல்லை. அதோடு பூச்சிக் கொல்விகள், உரங்கள் ஆகியவற்றுக்கும் அதிகமாக செலவு செய்ய வேண்டியி ருந்ததால் சிறு மற்றும் மத்திய வர்க்க விவசாயிகள் உணவு பாதுகாப்பின்மை வலை யில் வீழ்ந்தனர்.

பெரும்பாலான ஆதிவாசி விவசா யிகள் மார்க்கெட் விதைகளை உபயோகித்துப் பார்த்ததில் பாரம் பிரயமிக்க பன்முக வெரைட்டி பயிர்களை இழந்தனர். இந்த செய்முறை யில் உள்ளூர் நெகிழ் வுத்திறன் கொண்ட பயிர் அழிந்து போனது. சமூகத்தினரின் ஆலோ சனயை கேட்டபோது பாரம்பரிய விவசாயம் இன்னும் உயிரோ டுதான் இருக்கிறது என்று தெரிய வந்தது.

## குறுக்கீடு

ஆதிவாசி பெண்கள் பாரம் பரிய ரீதியாக விதைகளை பாதுகாத்து அதை பத்திரிப் படுத்தி வைத் திருந் தனர். விதைகளை பாதுகாத்து வைப் பதில் அவர் களுக்கு உள்ளார் ந்த அறிவு இருந்தது. பாரம்ப ரியமாக விதைகளை பாது காத்து பத்திரப் புடுத்து வைப் பதில் உள்ளார்ந்த அறிவு கொண்ட சில செல்வாக் குள்ள பெண்களை ஒரிஸ்ஸா அடை யாளம் கண்டது. இந்த பெண்கள் விதைகளின் தாய் கள் எனப்பட் டனர் மேலும் அவர்கள் விதை களை சேக ரித்து அவற்றை பாதுகாத்து வைக்கும் பாரம்பரிய அறிவை புதுப்பிப்பதில் அவர்கள் முக்கிய பணியாற்றினர்.

## விதை தாய்களை அடையாளம் காண்பது

பழங்குடியினர் வாழும் பகுதிக ளில் உள்ள பெண்கள் பாரம் பரிய விதைகளைப் பற்றிய அறிவு கொண்டவர்களாக இருந்ததோடு மட்டுமின்றி அவர்கள் உள்ளூரில் கிடை க்கும் வெவ்வேறு ரக வி ை த களையும் பாதுகாத்து வந்தனர். அவர்கள் ஒவ்வொரு கிராமத் திலிருந்தும் விதை தாய்களாக டையாளம் காணப் பட்டனர். பிறகு அவர்கள் கிராம அளவில் மக்களை ஒன்று திரட்டி சக விவசாயிகளின் அனுபவ அறிவையும் திரட்டினர்.

## ஸீட் மேப்பிங் உடன் பயிர் திட்டம்

விதைத் தாய்மார்கள், 3-4 கிராமங்கள் அடங்கிய தொகுப்பு அளவில் கிராம மட்டத்திலான வருடாந்திர ஸீட் மேப்பிங்கை ஏற்பாடு செய்து நடத்தினர். இந்த செயல்முறையில், விவசாயி களிடம் கிடைக்கும் விதைகள் பட்டியலிடப் பட்டன. விதை மற்றும் நிலத்தின் வகை டையாளம் காணப்பட்டதும் தங்கள் நிலத்தில் பயிரிடக்கூடிய சரியான

மஹிளா கிஸான் சஷாக்திகரன் பரியோஜனா (எம்கெஎஸ்பி), தீன்தயாள் அந்த்யோத்யா யோஜனா-நேஷனல் ரூரல் லிவ்லிஹூட் மிஷன் (டிஏவை-என்ஆர்எல்எம்) ன் உப பாகமாக அறிமுகப் படுத்தப் பட்டது. எம்கெஎஸ்பி பெண்களை வாழ்வாதாரத்தில் மையப் படுத்துவதில் முக்கியத்துவம் அளித்தது. எனவே நீடித்து நிலைக்க கூடிய வேளாண் உற்பத்தியை எட்டுவதற்கு வழி செய்வதற்காக அவர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக ஆதரவை வழங்குவதற்கான குறிக்கோள்கள் மேற்கொள்ளப் பட்டன.

**திரு அமர்ஜீத் சின்ஹா**
செயலர், ஊரக மேம்பாடு மற்றும்
பஞ்சாயத்தி ராஜ் அமைச்சகம்



பயிர்கள் மற்றும் விதைகளை தேர்வு செய்தனர்.

## பயோடைவர்ஸிடி மேப்பிங்

பையோடைவர்ஸிடி மேப்பிங் என்பது, சமுதாயம் தலைமை பொறுப்பு ஏற்கும் செயல் முறையாகும். அதில் வெவ்வேறு பருவ காலங்களில் கிடைக்கும் உள்ளூர் இயற்கை ஆதாரங்கள் டிஸ்பிளே செய்யப் பட்டன. விவசாயிகள் அதில் அவற்றை டிஸ்பிளே செய்ததோடு மட்டு மில்லாமல் அதனுடன் தொடர்புடைய மதிப்பையும் வலியுறுத்தினர்.

## விதை பெருக்கம்

ஸீட் மேப்பிங் மற்றும் பயோடைவர்ஸிடி மேப்பிங் கொண்ட பயிர் திட்டம் அதுபோன்ற மதிப்பு மிக்க விதைகளை உற்பத்தி செய்து திரட்டுவதற்கான தேவையை வலியுறுத்தியது. விதை பரிமாற்றம், விதை தாய்மார்களால் மேற்கொள்ளப்பட்ட தீவிர ஈடுபாடாக இருந்தாலும், அதன்பிறகு அது சக கிராமவாசிகளோடு பரிமாற்றிக் கொள் ளப்பட்டது. குடும்பங்கள் விதைப் பெருக் கத்தை மேற்கொள்ள உதவும் பொருட்டு கிராமத்திலுள்ள மகளிர் குழு பருவத்துக் கேற்ற நர்ஸரிகளை நிறுவின.

## விதைகளை பாதுகாத்து வைத்தல்

விதைகளை பத்திரப்படுத்தி வைப்பதற் கான விழிப்புணர்வு. அறிவை பகிர்ந்து கொள்வது மற்றும் குரூப் அடாப்ஷன் பழக்கங்களால் மேற்கொண்டு வலுப் படுத்தப் பட்டது. விதைகளை பத்திரப் படுத்தி வைப்பதற்கான பாரம்பரிய அணுகுமுறையின் ஓர் உதாரணமாக விதைகள் மண் மற்றும் மாட்டுச் சாணத்தால் மெழுகப் பட்ட மூங்கில் கூடைகளில் வைத்து பத்திரப் படுத்தப் பட்டன. இது புழு-பூச்சிகள் விதைகளை அண்டால் தடுத்தன அதன் பிறகு மூங்கில கூடையி மேற்புறம் வைக்கோல் மற்றும் சேறு, சாணம் பூசப்பட்டன. பகுதி அழுகக் கூடிய விதைகள் அவற்றின் ஈரத் தன்மையை தக்க வைத்துக் கொள்ளவும் புழு-பூச்சிகளிடமிருந்து அதை பாதுகாக்கவும் உள்ளூரிலேயே கிடைக்கும் மூலிகை தழைகள் மற்றும் விறகு எரித்த சாம்பல் கலவையை உபயோகித்து பத்திரப் படுத்தப் பட்டன.

## அளவிடல்

இது, உள்ளூர் விதைகளை பாதுகாத்து அதை பெருக்குவதின் மூலமாக பன்முக பயிரை அதிகரிக்கச் செய்வதற்கான மிகச் சிறந்த உபாயமாகும். ஒரு விதை தாயாக இது ஓர் சுய விருப்ப செயலாக இருந்தாலும், பிற்பாடு உள்ளூரிலேயே குறைந்த விலைக்கு நல்ல தரமான விதைகளை கிடைக்கச் செய்யும் ஓர் சிறந்த மாடலாக்கிக் கொள்ளலாம். ♦

## உணவுத் திருவிழா

**விதைத் தாய்மார்கள் சக பெண்கள் மற்றும் ஆண்களை சேர்த்து கிராம அளவிலான உணவுத் திருவிழாக்களை நடத்தினர். வசிக்கும் பகுதியில் கிடைக்கும் அந்தந்த பருவ உணவுப் பொருள் ஆதாரங்களை வைத்து கிராம பெண்கள் பல்வேறு உணவு பதார்த்தங்களை சமைத்தனர். இம் முயற்சி யானது, பழங்குடியினரிடையே பாரம்பரிய உணவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. பெண்கள் அனைவருக்கும் உணவு பரிமாறியதோடு பயிரிடப்படும் மற்றும் பயிரிடப்படாத உணவு ஆதாரங்களைப் பற்றி கலந்துரையாடலில் அவர்களை ஈடுபட வைத்தனர்.**

1. ஆதாரங்கள் மற்றும் அறிவை இலவசமாக பரிமாறிக் கொண்டது இந்த தலையீட்டை பயன்பெறாத சமுதாயங்கள் இதன் சித்தாந்தங்களை ஏற்றுக் கொள்ள வழி செய்தன. எங்கெல்லாம் வசதி வாய்ப்புகள் குறைவாக இருந்ததோ அங்கெல்லாம் சமுதாயங்கள் நெகிழ்வுத் திறனைக் கொண்டிருந்தன.

2. உள்ளூர் விதைகள், விதைகளை இலவசமாக பரிமாற்றம் செய்து கொள்வதற்கு வழி செய்தமையால் விவசாயிகள் மார்க்கெட் விதைகளை நம்பியிருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை

3. சோளம், கம்பு, தினை போன்றவற்றின் அடிப்படையிலான கலப்பட பயிர்கள் வறண்ட நிலங்களில் புதுப்பிக்கப் பட்டன. பருவ நிலை மாற்றத்தின் தாக்கத்துக்கு உள்ளூர் விதைகள் நெகிழும் திறன் கொண்டவையாக இருப்பதால், மிக கடுமையான தட்ப வெப்ப நிலையிலும் கூட அதுவே அவர்களுக்கான மினரல்களின் வளம் நிரம்பிய பிரதான உணவாகும்



4. எகாலாஜிக்கல் விவசாய கொள்கைகளின் அடிப்படையில் நீடித்து நிலைக்கும் விவசாய பழக்கங்களை பற்றி மற்ற பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு பயிற்சியளித்து கற்றுக் கொடுப்பதற்காக விதை தாய்மார்கள் இளைய சமூக ரிஸோர்ஸ் நபர்கள் அழைக்கப் பட்டனர்.

# 500 பெண்களின் ஒருமித்த முயற்சியால் ஓர் நிறுவனம் உருவாகிறது-தென்னாலா ஆக்ரோ பார்மர்ஸ் புரொட்யூஸர் கம்பெனி லிமிடெட்

**நெல் பயிர் விளைவிப்பதில் பெண்கள் சுய சார்புடையவர்களாக இருக்கிறார்கள், மற்றவர்களுக்கும் முன்னுதாரணமாக செயல் படுகிறார்கள்.**

தென்னாலா, கேரளாவின் மல்லபுரம் மாவட்டத்திலுள்ள ஓர் கிராமம் ஆகும். தென்னாலா நல்ல தரமான அரிசிக்கு பெயர் பெற்றதாகும். அது தென்னாலா ஆக்ரோ ஃபார்மர்ஸ் புரொட்யூஸர் கம்பெனி மிடெடால் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப் படுகிறது. இந்த புரொட்யூஸர் கம்பெனி செப்டம்பர் 9, 2015 முதல் இயங்க தொடங்கியது. இது மல்லபுரம் மாவட்டத்தின் தென்னாலா கிராம விவசாயிகளின் உறுப்பினர்களைக் கொண்ட ஜாயின்ட் லையபிடி குருப்ஸ் (ஜிஎல்ஜிஎஸ்) மற்றும் நைபர்ஹீட் குருப்ஸ் (என்எச்ஜிஎஸ்) க்கு சொந்தமனதாகும். இந்த புரொட்யூஸர் கம்பெனி நல்ல தரமான ஆர்கானிக் அரிசியை தென்னாலா என்ற பெயரில் உற்பத்தி செய்து பிராஸஸிங் செய்து மார்க்கெடிங் செய்வதில் ஈடுபட்டுள்ளது. புரொட்யூஸர் கம்பெனியின் மெம்பர்கள் தென்னாலா ஆக்ரோ புரொட்ஸர்ஸ் கம்பெனி மிடெட் இகோ ஸிஸ்டத்தை வழங்குவதாக உறுதியாக நம்புகிறார்கள். இதில் உற்பத்தியாளர்கள், விவசாயிகள், மார்க்கெட்டுகள் மற்றும் புரஃபஷனல்கள் ஒன்றிணைந்து வெல செய்து சமுதாய நலன் கருதி பயனுள்ள மற்றும் நியாயமான பிஸ்னஸ்ஸை நடத்தி வருகின்றனர்.



## எண்டர்பிரைஸ் தொடக்கம் மற்றும் வளர்ச்சி

ஆரம்பத்தில் கரீமா ஃபார்மர்ஸ் குருப், குடும்பஸ்ரீ, த ஸ்டேட் ரூரல் லைவ்லிஹூட் மிஷன் ஆஃப் கேரளா ஒரு ஜாய்ன்ட் லைபிலிடி குருப்பாக (ஜெஎல்ஜி) புரோமோட் செய்யப் பட்டது. இதன் நோக்கம், நெல் விற்பனை செய்வதற்கு பதிலாக நெல் உற்பத்தி. பிராஸஸிங், அரிசி மற்றும் அரிசி தயாரிப்பு விற்பனைக்கு வழி செய்வதாகும் அப்போதெல்லாம் விவசாயிகள் நெல் விளைவித்து மொத்த வியாபாரி களுக்கு விற்று வந்தார்கள். அது தென்னாலா அரிசி என்ற பெயரில் விற்பனை செய்யப்பட்டு வந்தது. அதற்கு ஏகப்பட்ட கிராக்கி இருந்தது. காரணம் பிராண்ட் செய்யப் படாமையால் பிரீமியம் விலை வைத்து விற்க முடியாமல் போய் விட்டது. விவசாயிகளுக்கு வேறு வழி இல்லாததால் அவர்கள் கஷ்டப்பட்டு பயிரிட்ட மகசூலை நடுத் தரகர்களுக்கும் ஸப்ளையர்களுக்கும் குறைவான விலைக்கு விற்க வேண்டிய நிர்பந்தத்திற்கு தள்ளப் பட்டனர்.

ஹரித்தா மல்லபுரம் புராஜக்டின் கீழ் தென்னாலா பஞ்சாயத்துக்கு உற்பத்தி தொடர்பான சில மெஷினரிகள் மாநில அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப் பட்டன. அவை பிறகு ஒகஎ குருப்புக்கு தரப் பட்டன. மல்லபுரம் மாவட்ட மிஷன் தனித்தனி பண்ணைகளில் நெல் பயிரிடுவதற்காக இந்த மெஷினரிகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு பரிந்துரை செய்தது.நெல் விதைகள் கிரிஷி பவனால் வழங்கப் பட்டது. 10 இஈந மெம்பர்கள் ஒரு குழுவாக ஏற்படுத்தப்பட்டு 14 ஏக்கர் நிலம் பஞ்சாயத்தால் குத்தகைக்கு எடுக்கப் பட்டது.

இந்த புராஜக்டி மிகப் பெரும் உற்சாகத்துடன் தொடங்கப்பட்ட போதிலும், அட்டைகளின் திடீர் தாக்குதலால் ஏராளமான மெம்பர்கள் இந்த விவசாய வேலையிலிருந்து விலகிக் கொண்டார்கள். இறுதியில் 4 மெம்பர்களும் மன உறுதியுடன் முன்செல்ல முடிவெடுத்தனர். இந்த குரூப் நெல் பயிரிடப் படாத 14 ஏக்கர் நிலப்பரப்பில் முண்டக் கண் பேடி விதைகளை உபயோகித்து பயிரிட்டனர். பொதுவாகஇந்த வகை நெல் பாலக்கல்லில் மட்டுமே பயிரிடப் பட்டு வந்தது. இது பிறகு வெற்றிகரமானது. பகுதி அறுவடையை மெம்பர்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு மீதி இருப்பு வாடகைக்கு எடுத்த ஒரு ரூமில் ஸ்டோர் செய்து வைக்கப் பட்டது. இவ்வாறு ஸ்டோர் செய்து வக்கப் பட்ட நெல் ஸப்ளை கம்பெனிக்கு விற்கப் பட்டது. இதற்கான பேமெண்ட் ஓராண்டுக்குப் பிறகு கிடைத்தபோதிலும், இந்த குரூப் தங்களின் எண்டர்பிரைஸ் பிஸ்னஸ்ஸில் பிரவேசிக்க தொடங்கியது.

தென்னாலா ஸிடிஎஸ்-ன் தலைவியான செல்வி யாஸ்மின் அரீம்பரா, இந்த முயற்சியில் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்ற மன உறுதியுடன் இந்த குரூப்பை வழி நடத்தினார். இவரது தீர்க்கமான முடிவே மற்ற பெண்கள் இதில் சேர்ந்து நெல் புரட்சிக்கு வித்திட ஊக்குவித்தது. இந்த மாடல், மற்ற ஒகளகளை நெல் பயிர் விளைச்சலில் ஆர்வமுடன் பங்கு பெற வைத்தது. அதனைத் தொடர்ந்து மிகவும் குறுகிய காலத்திற்குள் ஒன்றாக சேர்ந்து 236 ஏக்கர் நிலத்தில் பயிரிட ஆரம்பத்தினர். இந்த நிலத்தில் விளைந்த நெல், தென்னாலா குடும்பஸ்ரீ அரிசி என்ற பிராண்ட பெயரைப் பெற்றது.

இந்த பெண் விவசாயிகள் ஒன்றுகூடி ஒருமித்த பஞ்சாயத்தில் தங்களுக்கே சொந்தமான ஒரு கம்பெனியை தொடங்குவதற்கு முடிவெடுத்தனர். மிகப் பெரு நடவடிக்கையாக இயற்கை ரீதியில் நெல் விளைவித்து அத அரிசியாகவும், பல்வேறு புராடக்டுகளாகவும் அரைத்து நல்ல விலைக்கு விற்றனர்.

மாவட்ட மிஷன் மற்றும் பேங்க்குகள் இந்த புரொட்யூஸர் கம்பெனியை வரவேற்று மெம்பர்களுக்கு லோன் வழங்க முன் வந்தனர். பிற்பாடு ஒரு புரொட்யூஸர் கம்பெனி, தென்னாலா ஆக்ரோ புரொட்யூஸர் கம்பெனி தொடங்கப் பட்டு ஒகளகளை இணைத்தது. தென்னாலா ஆக்ரோ புரொட்யூஸர் கம்பெனி லிமிடெத் புரொட்யூஸர் கம்பெனியாக இன்கார்ப்போரேட் செய்யப் பட்டது.

## எண்டர்பிரைஸ் மற்றும் பிஸ்னஸ் மாடல்

தென்னாலா ஆக்ரோ ஃபார்மர்ஸ் புரொட்யூஸர் கம்பெனி லிமிடெட், 500 விவசாய உற்பத்தியாளர்களைக் கொண்ட மெம்பர் பயனாளிகளைக் கொண்ட ஓர் ஸிங்கிள் யூனிட் எண்டர்பிரைஸ் ஆகும். தென்னாலா ஆக்ரோ பார்மர்ஸ் புரொட்யூஸர்ஸ் கம்பெனி லிமிடெடின் முக்கிய நடவடிக்கைகளில் நெல் கொள்முதல், ஹோம் ஷாப்புகள் மூலம் நெல்லை அரிசியாக பிராஸஸிங் செய்வது மற்றும் குடும்பஸ்ரீ மற்றும் மற்ற ஏஜன்ஸிகளால் சந்தைகளை ஏற்பாடு செய்வது ஆகியவையும் உள்ளடங்கும்.

## நெல் உற்பத்தி மற்றும் நெல் கொள்முதல்

மெம்பர்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து, ஒருவருக்கொருவரின் வயலில் லேபர் ஷேரிங் அடிப்படயில் வேலை செய்து அதிலும் முக்கியமாக நெல் நடவுக்கு வயலை உழுவது தொடங்கி நெல் நாற்றுகளை நடுதல் போன்றவற்றில் ஈடுபட்டனர். ஏனென்றால் இவற்றிலெல்லாம் லேபர் தீவிரமாக பணியாற்ற வேண்டியிருந்தது மற்றும் கூலிக்காக ரொக்கத் தொகை கொடுக்க வேண்டியதை குறைத்து விட்டது.வாடகைக்கு எடுத்த வாகனங்களில் நெல் மூட்டைகலை ஏற்றிச் செல்வதில் நிறைய பணம் செலவானது மற்றும் மின்சார ஸப்ளை பற்றாக் குறையை போக்க டீஸலால் இயங்கும் பம்ப்ஸெட்டுகளை உபயோகித்ததால் அது மேலும் செலவினங்களை கூட்டியது.

தென்னாலா புரொட்யூஸர் கம்பெனி மெம்பர்கள் மாரகடப்பம், வள்ளாலகுளம் பாடம், அப்ளா பாடம், பாலக்கல் பாடம் மற்றும் எறைஞ்சிபாடத்தில் ஐந்து நிலங்களில் நெற்பயிரை பயிர் செய்தனர். இப்போது அவர்களிடம் உமா, ஐஸ்வர்யா, ஸீயோன், என்ஜவரா, ஜோதி, பொன்னி என ஆறு ரக நெல் இருக்கிறது. இந்த தென்னாலா அரிசி இயற்கை உரம் மற்றும் வெர்மிகம் போஸ்ட் போன்ற இயற்கை பொருட்களை உபயோகித்து பயிரிடப் படுகிறது மேலும் இதில் இரசாயன உரங்கள் முற்றிலுமாக உபயோகிக்கப் படுவதில்லை. அவர்களுக்கு தங்கள் உற்பத்தி ரகங்களுக்கு ஆர்கானிக் ஸர்டிஃபிகேட்டும் கிடைத்துள்ளது.

இந்த புரொட்ஸர் கம்பெனி ஜாய்ன்ட் லயபிலிடி குரூப்புகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து, அதை சேகரித்து அதை உமி நீக்கி கிரேடிங் மற்றும் பாலிஷிங் செய்து அரைப்பதற்காக ரைஸ் மில்களுக்கு அனுப்பி வைக்கிறது. புரொட்யூஸர் கம்பெனி அதற்குப் பிறகு இப்படி அரைத்த அரிசியை 2 கிலோ, 5 கிலோ மற்றும் 10 கிலோ பேக்குகளில் தென்னாலா அரிசி



என்ற பிராண்டு பெயரில் பேக்கிங் செய்கிறது. இவர்கள் ரைஸ் ஃப்ளேக்ஸ், ரைஸ் பிரான், பாசம் அரிசி, நொய் அரிசி போன்ற மதிப்பு கூட்டப் பட்ட இதர புராடக்டுகளின் தயாரிப்பிலும் இறங்கியுள்ளனர். தற்போது இந்த அரிசி கிலோ ரூ.50 விலைக்கு விற்கப் படுகிறது. புராடக்ட் விலைகள் புரொட்யூஸர் கம்பெனியின் போர்டு ஆஃப் டைரக்டர்களால் வரையறுக்கப் படுகிறது.

## ஃபைனான்ஸிங்

இந்த புரொட்யூஸர் கம்பெனி 500 மெம்பர்களின் ரூ.5 லட்சம் பங்கு மூலதனத்துடன் ஃபனான்ஸ் சய்யப் படுகிறது.தனி நபர்கள் தங்கள் பங்கு விகிதமாக ரூ.1000 தருகையில் ரூ.10 லட்சம் நாபார்டு மூலமாகவும், ரூ.10 லட்சம் குடும்பஸ்ரீயாலும் வழங்கப் படுகிறது

## மார்க்கெடிங், விற்பனை மற்றும் லாபம்

தென்னாலா புரொட்யூஸர் கம்பெனி தங்கள் அரிசி புராடக்டுகளை உள்ளூர் சில்லற கடைகள், ரீடெய்ல் மளிகைக் கடைகள் உள்ளூர் தனி வியாபாரிகல் மற்றும் பெங்களூர் அக்ரி சந்தை போன்றவை வாயிலாக விற்பனை செய்கிறார்கள்.குடும்பஸ்ரீயும் கேரள மாநிலத்தில் தாங்கள் நடத்தும் பல்வேறு திட்டங்களுக்காக இவர்களிடிருந்து அரிசியை வாங்குகிறது. பல்வேறு நேச்சுரல் ஹீலிங் சென்டர்கள், மற்றும் ஆயூர்வேத கேந்திரங்கள் இந்த புரொயூஸர் கம்பெனியிடமிருந்து அரிசியை வாங்குகின்றன. திரூர் நேச்சுரோபதி சென்டர் தென்னாலா அரிசியை ரெகுலராக வாங்குகிறது. ஒருசில ஆர்கானிக் ஸ்டோர்களும் கூட தென்னாலா அரிசியை வாங்குகின்றன. இந்த கம்பனி அரிசி மற்றும் இதர அதி தயாரிப்புகளை மார்க்கெடிங் செய்து விற்பதற்காக மாநிலமெங்கும் பல ஏஜன்ஸிகளுடன் ஏற்கனவே ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. பல வெளி நாடுகளிலும் இந்த ரக

அரிசிக்கு நல்ல டிமாண்ட் உள்ளது.

## பிரச்சனைகள் மற்றும் சவால்கள்

த தென்னாலா ஆக்ரோ ஃபார்மர்ஸ் புரொட்யூஸர் கம்பெனி லிமிடெட்பல பிரச்சனைகளையும், சவால்களையும் எதிர் கொண்டு வருகிறது. சவால்கள் என்றால் அதிக இயக்க செலவுகள் மற்றும் மிகுதியான ஓவர்ஹெட்ஸ் அதில் ஒழுங்கான மார்க்கெடிங் திட்டம் குறைபாடு. டெக்னாலஜியை பெறுவதில் குறைபாடு, ஸ்டாண்டர்டைஸ்டு பேக்கேஜிங் குறைபாடு மோசமான அடிப்படை வசதிகள், அதிலும் குறிப்பாக நெல்லை ஸ்டோர் செய்து வைப்பது, வாடகை குடோன்களுக்கான அதிக வாடகை, வேர்ஹவுஸிங் அல்லது நெல் அல்லது பேக்கிங் செய்த அரிசியை ஸ்டோர் செய்து வைப்பது. தொலை தூர குடோன்கள், நெல் அரைப்பதற்கான கட்டணம்மேனேஜரியல் திறன் பற்றாக்குறை உள்ளிட்டவாகும். முன்பெல்லாம் அவர்கள் ரைஸ் மில்லுக்கு உமி மற்றும் தவிட்டை மில்லுக்கு இலவசமாகவே கொடுத்தனர்.புரொட்யூஸர் கம்பெனி தங்கள் வருவாயை பெருக்கிக் கொள்வதற்காக இப்போது நெல் உமி, தவிட்டை விற்பதென தீர்மானித்தார்கள்.

## நிராவாகம்

தென்னாலா ஆக்ரோ ஃபார்மர்ஸ் புரொட்யூஸர் கம்பெனி லிமிடெடில் 126 ஒகளகள் உள்ளன. 10-15 ஒகளகள் சேருவதின் மூலம்ஒரு தொகுப்பு உருவாக்கப் பட்டு ஒவ்வொர தொகுப்புக்கும் ஒரு செக்ரடரி மற்றும் ஒரு பிரஸிடெண்ட் நியமிக்கப் பட்டனர். ஒவ்வொரு தொகுப்புக்கும் ஒரு டைரக்டரும் இருந்தார். புரொட்ஸர் கம்பெனிக்கு 10 டைரக்டர்கள் இருந்தனர். இந்த டரக்டரின் பதவிக் காலம் 3 ஆண்டு ஆகும் புரொட்யஸர் கம்பெனியின் ஜெனரல் பாடி மலமாக டைரக்டர் தேர்ந்தடுக்கப் படுகிறார். த தென்னாலா புரொட்யூஸர் கம்பெனி கமிட்டிகள் மூலமாக இயங்குகிறது மற்றும் அவை புரொட்யூஸர் கம்பனியின் நெல் கொள் முதல், அரிசி மார்க்கெடிங் மற்றும் ஒட்டு மொத்த நிர்வாகம் ஆகியவற்றை பார்த்துக் கொள்கின்றன.




## பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு

பெண்களுக்கான பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு ஆகியவை மஹிளா கிஸான் ஸஷக்திகரண் பரியோஜனா (எம்கெ-எஸ்பி)-யின் கீழ் குடும்பஸ்ரீயால் மேற்கொள்ளப் படுகிறது. இனி வருங் காலத்தில் புரொட்யூஸர் கம்பெனியின் மெம்பர்கள் மற்றும் செயல் குழுவிற்கு ரெகுலர் டிரெய்னிங் மற்றும் திறன் மேம்பாடு புரோகிராம்கள் மற்றும் எக்ஸ்போஷர் விஸிட்டுகள் அவசியம் தேவை என்று கண்டறியப் பட்டிருக்கிறது. இதற்கும் மேலாக, புரொட்யூஸர் கம்பெனியின் செயல் குழு உறுப்பினர்களுக்கு ஃபைனான்ஷியல் அக்கவுன்டிங், ஹ்யூமன் ரிஸோர்ஸ் மேனேஜ்மென்ட், எம்ஐஎஸ் மற்றும் ஐடி மேனேஜரியல் திறன்களிலும் பயிற்சியளிக்கப் படும்.

## எதிர்காலத் திட்டங்கள்

இந்த கம்பெனி, தென்னாலா கிராமத்தில் நெல் விதை பேங்க்கை ஏற்படுத்த திட்டமிட்டமிருப்பதோடு, விதை பேங்க்கிற்காக மேலும் சில லோக்கல் வெல் ரக விதைகளையும் பிரிட் திட்டமிட்டுள்ளது. இந்த நெல் விதைகள் விவசாயிகள் நெல்லின் தரத்தை சீராக பராமரிக்க உதவும். அதோடு, கம்பெனி, நவ்வாரா அரிசி மற்றும் வாழப்பழத்தை சேர்த்து குழந்தை உணவையும் அறிமுகப் படுத்த திட்டமிட்டிருக்கிறது, கம்பெனி மதிப்பு கூட்டப்பட்ட புதிய பிரேக்ஃபாஸ்ட் ஸிரியலை முக்க உட்பொருட்களை ஆர்கானிக் அவல் அரிசி மற்றும் டிரை ஃப்ரூட்ஸ் கலந்து தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளது

## தாக்கம்

த தென்னாலா புரொட்யஸர் கம்பெனி, 500 மெம்பர் புரொட்யூஸர்களுக்கு வாழ்வாதாரத்தையும், ரெகுலர் வருவாயையும் அளித்து அதன் மூலம் அவர்கள் சிறந்த வாழ்க்கையை நோக்கி முன்னேற வழி செய்தது. ஸ்டோரேஜ், பிராஸஸிங், பேக்கேஜிங் மற்றும் பயிற்சி மற்றும் திறன் வளர்ப்புக்காக தங்களுக்கென்று சொந்தமாக பில்டிங்கை கட்டவும் முடிவு செய்துள்ளது. அவர்களின் முழு திறமையையும் நிஜமாக்க கேப்பிடல் மற்றும் ஒர்க்கிங் கேப்பிடல் முதலீட்டுக்கு ஏற்பாடு செய்வது அவசியமாகும். ♦

### ஸ்வச் பாரத் அபியான்

**மகாத்மா காந்தி எப்போதுமே கிராமங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு கிரா சுயராஜ்யத்தைப் பற்றியும் பேசினார். கிராமங்களில் மாற்றம் இந்தியாவின் மாற்றத்தை நிச்சயப் படுத்தும்-பிரதமர் மோடி**

பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா கிராமின்

தீன்தயாள் அந்த்யோத்யா யோஜனா ராஷ்ட்ரிய கிராமின் ஆஜீவிகா மிஷன்

கிரா மேம்பாட்டு திட்டம்

பாரதத்தின் பஞ்சாயத்தில் மாற்றம் செய்யும் முதல்வர்-ஆந்திர பிரதேசம்

ஒரு சுய உதவிக் குழு தலைவியின் வெற்றி கதை-ஆந்திர பிரதேசம்

ஸத்பாவ்னாவின் வழி-மகாராஷ்டிரா

அபர்ஸிங் பஞ்சாயத்து, ஒடிஷ்ஷா

ஒரு பி.டெக் ன்ஜீனியரின் வெற்றிக் கதை-ராஜஸ்தான்



ஸன்ஸத் ஆதர்ஷ் கிராம் யோஜனா

# சிறப்பான வாழ்க்கைக்கு கிராமத்தை பிங்க் ஜொராண்டாவாக மாற்றம்

**சத்தீஸ்கரின் மாண்புமிகு ராஜ்யசபா எம்பி திரு நந்த் குமார் ஸாயி இந்த கிராமத்தை நஅஎவ-யின் கீழ் , டிசம்பர் 2014 ல் தத்து எடுத்துக் கொண்டு தங்கள் கிராமத்தை பிங்க் ஜொராண்டாவாக மாற்றி அதன் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் வழி காட்டினார்.**

ஜோராந்தாஜாரியா கிராம பஞ்சாயத்து சத்தீஸ்கரில் பெரும்பான்மாக பழங்குடியினர் வாழும் இரண்டு கிராமங்களை ஒன்றாக கொண்டதாகும். இந்த கிராம பஞ்சாயத்து வட்டார தலைமையகம் பர்ஸாபஹாரிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிலும், மாவட்ட தலைமையகம் ஜாஷ்பூரிலிருந்து 107 கி.மீ. தொலைவிலும் இருக்கிறது. ஜோராந்தாஜாரியா கிராம பஞ்சாயத்தில் 1451 ஜனத்தொகையுடன் 285 குடும்பங்கள் கொண்ட இரு கிராமங்களின் தொகுப்பாகும். திரு. நந்த குமார் ஸாயி டிசம்பர் 2014-ல் எஸ்ஏஜிவை-யின் கீழ் இந்த கிராமத்தை தத்து எடுத்து அதன் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் வழி செய்தார்

எஸ்ஏஜிவை கிராமத்துக்கு ஒருமுறை டாக்டர் விஸிட் செய்த பிறகு பிங்க் என்பது ஆரோக்கியகரமான கிராமத்தின் அடையாளம் என்பதை மக்களுக்கு தெரிவித்த உடனேயே மு கிராமுமே பிங்க்கை தங்கள் கலராக ஏற்றுக் கொண்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் இது ஒரு மக்கள் இயக்கமாக மாறியது. ஜோராந்தாஜாரியா சத்தீஸ்கர் மாநிலத்தின் ஜாம்ஷெட்பூரில் இருக்கிறது. இது டஉநஅ. 1966 நடைமுறையில் இருக்கும் இந்திய அரசியல் சட்டம். பிரிவு ய-ன் கீழ் வருகிறது.

## எஸ்ஏஜிவை மூலமாக மாற்றம்

மாண்புமிகு எம்பி மற்றும் மாவட்ட நிர்வாகம் முன்னேற்ற நடவடிக்கைகளை கண்காணிக்க அடிக்கடி வந்தனர். கிராம வளர்ச்சி திட்டத்திலிருந்து முடிக்கப் பட்ட பணிகள் அனைத்துமே பிரதானமானவையாக இருந்தன. அவை கிராமவாசிகளின் அன்றாட வாழ்க்கையில் குறிப்பிடும்படியன முன்னேற்றத்தைக் கொண்டு வந்தன. எம்பி, மாவட்ட நிர்வாகம் மற்றும் உள்ளூர் மக்களின் ஒருமித்த முயற்சியால் கிராம பஞ்சாயத்து நல் சாதகமான மாற்றத்தையும், மக்களின் போக்கையும் மாற்றத்தையும் பயனுள்ள வகையில் கொண்டு வந்தது. இதற்கு முந்தைய சுதந்திர தினத்தன்று அடுத்த ஆண்டுக்குள் 15 இதர கிராமங்களை குடிப்பழக்கம் இல்லாத ஊர்களாகவும் திறந்த வெளியில் மலம் கழிக்கும் அகற்றிய கிராமங்களாகவும் ஆக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இப்போது இந்த கிராம மக்கள் தங்கள் அக்கம் பக்கத்து கிராம பஞ்சாயத்துகள் மதுப்பழக்கம் அற்றதாகவும், ஓடிஎப் பழக்கம் அற்றதாகவும் ஆக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கிராம பஞ்சாயத்து கிராம அளவில் ஏற்படும் சச்சரவுகளை தீர்வு காண்பதற்கு இன்டர்னல் மெக்கானிஸத்தையும் கண்டுபிடித்தனம்

அவர்களின் வீடுகள், டைய்லெட்டுகள் பிங்க் நிறத்தில் பெயின்ட் அடித்து தங்கள் கிராமத்தை பிங்க் ஜரோண்டாவாக மாற்ற பங்களிக்கும் விதமாக பிங்க் நிற புடவைகளையும் அணிந்தனர். தங்கள் பஞ்சாயத்தை திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமற்ற மற்றும் குடிப்பழக்கம் இல்லாமல் சம்பூர்ண ஸக்ஷார், ஸம்பூர்ண சுபோஷிட் ஆகவும் மாற்றி ஏராளமான சாதனைகளை படைத்தனர். இந்த கிராம பஞ்சாயத்து பக்கத்து கிராமங்களுக்கு மாதிரியாகவும் திகழ்ந்தது மற்றும் அவர்களின் சிறந்த பழக்க வழக்கங்களை அந்த கிராம பஞ்சாயத்துகளும் பின்பற்றின.

## தாக்கம்

ஒரு காலத்தில் மிகவும் பின்தங்கிய மற்றும் வளர்ச்சியடையாத கிராமமாக இருந்த ஜோராந்தாஜாரியா எஸ்ஏஜிவை ஜிபி -யால் தத்து எடுத்துக் கொண்ட பிறகு இப்போது பிங்க் ஜொராண்டாவாக மாறி விட்டது. மக்கள் தங்களின் எல்லா பில்டிங்குகளையும் பிங்க் கலரில் பெயின்ட் அடித்து அது தங்கள் கலாச்சாரம் ஒற்றுமை, மகிழ்ச்சி, வளம் மற்றும் முன்னேற்றத்தின் அடையாளமாக திகழ்கிறது. சமுதாயம் தலைமையை சார்ந்த வளர்ச்சியைப் பொறுத்தவரை, பிங்க் ஜொராண்டா அக்கம் பக்கத்து கிராங்கள் பின்பற்றக் கூடிய ஒரு முழுமையான உதாரணமாக இப்போது திகழ்கிறது. ♦

# மக்களுக்கு அதிகாரம் வழங்கல் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தில் மொபைல் செயலிகள்

தகவல் தொழில்நுட்பம் செயல் நோக்கு முறையில் பயன்படுத்தப்படுவதால், சம்பந்தப்பட்ட துறைகளும், தொடர்புடையவர்களும் தற்போதுள்ள திட்டங்களை மேம்படுத்தி, ஒவ்வொரு திட்டம் தொடர்பான குறிப்பான தகவல்களை பொதுமக்கள் அனைவருக்கும் வழங்குவதற்கான புதிய வழிகளை அறிமுகப்படுத்த முடியும். பொறுப்பு ஏற்பு, வெளிப்படையான தன்மை மற்றும் நேர்மையை ஊக்குவிப்பதற்காக ஊரக வளர்ச்சி அமைச்சகம் தகவல்களை வழங்கிட குடிமக்களை மையமாகக் கொண்ட மொபைல் செயலிகளை உருவாக்கியுள்ளது. இவற்றின் மூலம் கிராம மக்கள் தகவல்களைப் பெற்று, எல்லா நேரங்களிலும் ஒவ்வொரு திட்டத்தின் செயல்பாடு பற்றிய முன்னேற்றத்தைக் கண்காணித்து தணிக்கை செய்ய முடியும்.

**வெளிப்படையாகச் செயல்பட்டு, வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்காக இந்திய அரசு மேற்கொள்ளும் பணிகள் தொடர்பாக ஊரக வளர்ச்சி அமைச்சகம் மொபைல் செயலியைத் தொடங்கியுள்ளது. டிஜிட்டல் டெக்னாலஜியைப் பயன்படுத்தி இதில் தகவல்கள் வழங்கப்படுகின்றன. கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு அதிகாரம் வழங்கவும், சேவை செய்யவும் உருவாக்கப்பட்டுள்ள குடிமக்களை மையமாகக் கொண்ட மொபைல் செயலியைப் பயன்படுத்தி இப்போது ஊரக வளர்ச்சிக்கான கிட்டத்தட்ட எல்லா திட்டங்கள் பற்றிய தகவல்களையும் மக்கள் பெற்று, அவற்றின் அடிப்படையில் அவர்கள் பஞ்சாயத்துக்கள் கூறுவதை எதிர்த்து தட்டிக் கேட்க முடியும்.**




இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முக்கிய முயற்சிகள் பின்வருமாறு:

## "ஜன்மநரேகா" மகாத்மாகாந்தி நரேகா திட்டத்திற்கான குடிமக்கள் நோக்குடைய மொபைல் செயலி

ஜியோஎம்ஜி நரேகா செயல்பாட்டை மேலும் வளர்ப்பதாக ஜன்மநரேகா உள்ளது. இது கீழ்மட்டத்தில் தகவல் பரப்பவும், சேகரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இது குடிமக்களை சிஸ்டத்துடன் இணைக்கிறது. இந்த ஆன்ட்ராய்டு செயலியின் பீட்டா வடிவம் இப்போது அமைச்சகத்தின் எம்ஜிநரேகா வலைதளத்தில் கிடைக்கிறது. இது இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (இஸ்ரோ) புவன் மேப் இன்ட்டர்ஃபேஸ் மூலம் ஜியோ தொடர்புடைய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் சொத்துக்களை அவற்றின் விவரங்களுடன் கூடவே இரண்டு புகைப்பட்டங்களையும் ஒரு ஆண்ட்ராய்டு மொபைல் போனில் கண்டறிய உதவுகிறது, இந்தத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய தங்களது கருத்துக்களை மக்கள் தெரிவிக்க இது உதவுகிறது.




## "ஆவாஸ்ஏப்" மொபைல் செயலி - பிஎம்ஏவை-ஜி திட்டத்திற்காக

ஊரக வீட்டுவசதி மொபைல் செயலி ஒரு ஆண்ட்ராய்டு அடிப்படையிலான செயலியாகும். இதை எந்த ஒரு பிஎம்ஏவை-ஜி பயனாளியும் நேரடியாகவும் அல்லது தமது பிரதிநிதி மூலமும் பயன்படுத்தி அடுத்த தவணை நிதியுதவி பெறுவதற்காக வீடு கட்டுவதன் முன்னேற்றத்தைத் தெரிவிக்கலாம்.

**இந்தச் செயலியை பிஎம்ஏவை:** ஜி திட்டத்தின் கீழ் அல்லது ஆவாஸ் மென்பொருள் (ஊரக வீட்டுவசதி

மின் ஆளுகைத் தீர்வின் கீழ் கண்காணிக்கப்படும் வேறு ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை ஆய்வு செய்வதற்காக சிறப்பாகப் பணியமர்த்தப்பட்ட பிஎம்ஏவை-ஜி வீட்டு ஆய்வாளர்களும் பயன்படுத்தலாம். இந்தச் செயலி கூகிள் பிளே மற்றும் ஏப் ஸ்டோரில் கிடைக்கிறது.

## "மேரி சடக்" மொபைல் செயலி பிஎம்ஜிஎஸ்வை திட்டத்திற்காக




"மேரி சடக்" என்பது பிஎம்ஜிஎஸ்வை சாலைகள் திட்டத்தின் கீழ் போடப்படும் சாலைகளின் வேலைத் தரம், வேலையின் வேகம் போன்றவை குறித்துத் தங்களது கருத்துக்களை மாநில அரசுகள்/தேசிய ஊரகச் சாலை வளர்ச்சி முகமை (என்ஆர்ஆர்டிஏ) –இல் உள்ள மைய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப் பயன்




படும் ஒரு மொபைல் செயலியாகும். இதைப் பயன்படுத்துவோர் வேலையிடத்தில் புகைப்படம் எடுத்து அதை கருத்துடன் சமர்ப்பிக்கலாம்.

கருத்துக்களைச் சமர்ப்பித்த பிறகு இந்தச் செயலி மூலமாக தமது புகார் தீர்க்கப்படுவதைக் கண்காணிக்க முடியும். பிஎம்ஜிஎஸ்வை திட்டத்




தைச் செயல்படுத்தும் மையத் துறையின் அந்தந்த மாநில தர ஒருங்கிணைப்பாளர்கள் புகார் தெரிவித்தவருக்கு இடைக்காலத் தீர்வைத் தெரிவிப்பார். இந்தச் செயலி கூகிள் பிளே-யில் கிடைக்கிறது.

## "குஷால் பஞ்சீ" என்பது டிடியுஜிகெவை திட்டத்திற்கான ஒரு மொபைல் செயலியாகும்.

குஷால் பஞ்சீ என்பது ஆண்ட்ராய்டு அடிப்படையிலான ஒரு மொபைல் செயலி. இதை கிராமங்களில் வசிக்கும் 15 முதல் 45 வயது வரையான இளைஞர்கள் பயன்படுத்தலாம். அவர்கள் தங்களுக்கு விருப்பமான திறன்களை ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஈஈமஜவை மற்றும் ஆர்எஸ்இடிஐ திட்டங்களின் மூலமாக வளர்த்துக் கொள்ள இதைப் பயன்படுத்தி பதிவு செய்யலாம்.♦



### கிராம் சம்வாத் மொபைல் செயலி

சமுதாயத்தின் கடைக்கோடி மனிதருக்கும் அரசுக்கும் இடையே தகவல்களும் கட்டளைகளும் முறையாகச் சென்றடைய வேண்டும் என்னும் நமது பிரதமரின் கனவை நனவாக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கியமான நடவடிக்கைதான் இந்த "கிராம் சம்வாத்" மொபைல் செயலி. குடிமக்களை மையமாகக் கொண்ட இந்தச் செயலி, கிராமங்களில் உள்ள மக்கள் ஊரக வளர்ச்சி தொடர்பான திட்டங்கள் பற்றிய எல்லாத் தகவல்களையும் பெற்று, அவற்றின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புக்களின் கூற்றை எதிர்த்து கேள்வி கேட்க அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. கிராமப் பஞ்சாயத்து அளவில் மேற்கொள்ளப்படும் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளும் சாளரமாகவும் இது திகழ்கிறது.

Can be downloaded from

GET IT ON Google Play

Download on the App Store

## தீன் தயாள் உபாத்யாய கிராமிய திறன் வளர்ப்பு (டிடியூ-ஜிகெவை)

# வெற்றிகரமான பெண்கள் பற்றிய ஊக்கமூட்டும் செய்திகள்

**டிடியு-ஜிகெவை திட்டத்தின் கீழ் பயிற்றுவிப்பாளராக மாறி ஏழைச் சிறுமிகளுக்கும், தேவையாக இருக்கிற இளைஞர்களுக்கும் உதவிட வேண்டும் என்ற கனவை நனவாக்கியவர்-திருமதி சோனு மந்தாரே**

நாக்பூர் மாவட்டத்தின் கோலார் கிராமத்தில் வசிக்கும் திருமதி சோனு மந்தாரே ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒவ்வொரு மாதமும் பள்ளிக் கட்டணம் கட்டமுடியாமலும், மற்ற செலவுகளைச் சமாளிக்க முடியாமலும் இவரது தந்தை திணறியதால் 12-ஆம் வகுப்புக்குப் பிறகு இவர் படிப்பை நிறுத்தி விட்டார். இவரது குடும்பத்தி ஐந்து உறுப்பினர்கள். தந்தை மட்டுமே சம்பாதிக்கிறவர். அவர் ஒரு மீன் பண்ணையில் வேலை பார்த்து, மாதம் ஒன்றுக்கு ரூ.3,500/- மட்டுமே சம்பாதித்தார்.



டிடியு-ஜிகெவை திட்டத்தின் கீழ் மெஸர்ஸ் தாத்ரி ஃபவுண்டேஷன் நடத்தும் பயிற்சி மையத்தில் பயிற்சி எடுத்த பின்னர், ஹைதராபாதில் உள்ள மெஸர்ஸ் மேகஸ் கஸ்டமர் டயலாக் சொல்யூஷன்ஸ் என்னும் நிறுவனத்தில் வேலை செய்ய சோனு அனுப்பப்பட்டார். துவக்கத்தில், இவருடைய அடிப்படைச் சம்பளம் ரூ.7800/- ஆக இருந்தது. எனினும், மிகுந்த ஈடுபாட்டோடு வேலை செய்ததாலும், நல்ல தகவல் தொடர்பு திறனை இவர் பெற்றிருந்ததாலும், குறுகிய காலத்தில் இவரது சம்பளம் உயர்த்தப்பட்டது. தற்போது மாத விற்பனை ஊக்கத் தொகை நீங்கலாக இவர் ரூ.10,000/- சம்பளம் பெறுகிறார். ஊக்கத் தொகையாக மாதந்தோறும் ரூ.15,000/- முதல் 22,000/- வரை இவருக்குக் கிடைக்கிறது. இப்போது இவர் தமது குடும்பத்தின் அன்றாடத் தேவைகளுக்காகப் பண உதவி செய்வதோடு, தமது கல்விக்காகவும் பணம் சேமிக்கிறார். பெற்றோரின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிட ஆதரவாக இருக்கிறார். டிடியு-ஜிகெவை திட்டத்தின் கீழ் ஒரு பயிற்றுவிப்பாளராகி, கடின உழைப்பு எப்படிப் பலன் தரும் என்பதை ஏழைக் குழந்தைகளுக்கும், தேவையாக உள்ள இளைஞர்களுக்கும் எடுத்துக் கூறி தமது வெற்றிக் கதைகளைப் பகிர வேண்டும் என்பதுதான் இவரது கனவு.♦

# ரேவதி மாதந்தோறும் ரூ.20,000 சம்பாதிக்கிறார் தமது பெற்றோர் நல்ல வாழ்க்கை வாழ்ந்திட உதவியாக இருக்கிறார்.

மத்தியப் பிரதேசத்தில் சாகர் மாவட்டத்தின் ஜெயித்பூர் கிராமத்தில் வாழும் ரேவதி, மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடன் உடன்பிறந்தவர்கள் 9 பேர். 9 பேருமே "சகோதரிகள்". தந்தையோ போதுமான அளவுக்கு சம்பாதிக்கவில்லை. எனவே, 12 ஆம் வகுப்புக்குப் பிறகு இவரால் படிப்பை முடிக்க முடியவில்லை. தமது குடும்பத்தை ஆதரிப்பதற்காக, வேலை தேட ஆரம்பித்தார். ஆனால் சரியான திறமையும், போதிய பயிற்சியும் இல்லாமல் வேலை கிடைக்கவில்லை. பெற்றோருக்கும் உதவ முடியவில்லை.

இவரது தந்தை ஒரு விவசாயி. அவருடைய ஆண்டு வருமானம் ரூ.35,000/-க்கும் கீழேதான். அது குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குக் கூட போதுமானது அல்ல.




டிடியு-ஜிகெவை திட்டத்தின் கீழ் விருந்தோம்பல் (உணவு மற்றும் பானங்கள்) பிரிவில் பெற்ற தரமான பயிற்சியினால் ரேவதிக்கு விருப்பமான வேலை கிடைத்தது. அகமதாபாதின் தாய்லா பகுதியில் யஸாக்கி என்னும் ஒரு ஜப்பானியக் கம்பெனியில் ரூ.7000/- மாதச் சம்பளத்துடன் இவரது வேலை தொடங்கியது. அதே நிறுவனத்தில் இவருக்கு பதவி உயர்வு கிடைத்து, மாதச் சம்பளம் ரூ.7,000/- இல் இருந்து ரூ.10,000/-ஆக உயர்ந்தது. இந்த வேலையுடன் கூடவே, தம்மைப் போல பெரிய நகரங்களில் வேலை பெற விரும்பும் உள்ளூர் கிராமப் பெண்களுக்கு இவர் வழிகாட்டி ஆலோசனைகள் வழங்கினார். பெற்றோரையும், உடன் பிறந்தவர்களையும் கவனித்துக் கொள்வதற்காக இந்தூருக்குத் திரும்பி வந்த இவர், இப்போது சொந்தமாக பிஸினஸ் செய்கிறார். இந்தூரில் உள்ள டயனமிக் ஃபேஷன் இண்டஸ்ட்ரியில் சுயேச்சையான வினியோகஸ்தராக இருந்து, ஆன்லைன் மார்க்கெட்டிங்கில் நேரடி விற்பனை மூலமாக ஆடைகளை விற்கிறார். தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ.20,000 சம்பாதித்து, தமது பெற்றோருக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்திருக்கிறார்.♦





செல்வி உமா பாரதி,
மத்திய கேபினட்
அமைச்சர், குடிநீர்
& துப்புரவுத் துறை

“நாட்டிலேயே மிகத் தூய்மையானதாக உங்கள் கிராமத்தை ஆக்கிட கூட்டாக முயற்சி செய்து, தூய்மை மதிப்பீடு-கிராமியம் 2018 என்னும் ஆய்வில் ஈடுபடுங்கள்”

# வெற்றிக் கதைகள்

## புணே கிராம சமூகங்கள் தங்களது வீட்டுக் கழிப்பறைகளை வாரி யாத்ரீகர்களுக்காகத் திறந்து விட்டனர்



மகாராஷ்டிர மாநிலம் புணேயில், புகழ்பெற்ற வாரி யாத்திரை நடைபெறும் வழியில் உள்ள வீடுகளில் வசிக்கும் மக்கள், 15 நாள் யாத்திரையாக பண்டர்பூருக்குச் செல்லும் யாத்ரீகர்கள் பயன்படுத்திக் கொள்ள தங்களது கழிப்பறைகளைத் திறந்து விட்டனர். மகாராஷ்டிராவில் 333 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்த பழம்பெருமை மிக்க யாத்திரை இந்த ஆண்டில் ஜூலை 6 முதல் ஜூலை 22 வரை நடைபெற்றது. மாநிலத்திற்கு உள்ளிருந்தும், வெளியில் இருந்தும் 10 லட்சத்திற்கும் அதிகமான யாத்ரீகர்கள் இதில் பங்கேற்றனர்.

பண்டர்பூரில் உள்ள வித்தோபா ஆலயத்தில் முடிவடைந்த இந்த யாத்திரையில் மாமுனிகள் தியானேஸ்வர் மற்றும் துக்காராமின் பாதச் சுவடுகள் பல்லக்கில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பட்டன.

### விளைவு

**கிராம மக்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, இந்த ஆண்டில் யாத்ரீகர்களின் யாத்திரை சிரமமின்றி நடைபெறும். புணே மாவட்டப் பஞ்சாயத்தின் சிஇஓ திரு. சூரஜ் மந்தாரே, கிராம மக்களுக்கு புதுமையான ஒரு வேண்டுகோள் விடுத்தார். யாத்திரை செல்லும் வழியில் உள்ள எல்லா வீடுகளிலும் சொந்தமாகக் கட்டப்பட்ட தனிப்பட்ட கழிப்பறைகளை இந்த யாத்ரீகர்கள் பயன்படுத்த அனுமதிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.**

இந்த 250 கிமீ தூர நடைப் பயணத்தில் வழியில் உள்ள சில கிராமங்களில் மட்டும் 15 இடங்களில் யாத்ரீகர்கள் தங்கிச் செல்கின்றனர். அப்போது அந்தக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் யாத்ரீகர்களுக்கு உணவும், இதர ஓய்வு வசதிகளும் அளிப்பதுண்டு. கடந்த இரண்டு ஆண்டுகளாக தூய்மை இந்தியா கிராமத் திட்டத்தின் கீழ் (எஸ்பிஎம்-ஜி) மாவட்டம் முழுவதும் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான கழிப்பறைகள் கட்டப்பட்டன. ஒரு வழித்தடத்தில் 500 சமூகக் கழிப்பறைகளும், இன்னொரு வழித்தடத்தில் 700 கழிப்பறைகளும் கட்டப்பட்ட போதிலும், அவை நீண்ட தூரம் நடந்து வரும் யாத்ரீகர்களுக்குப் போதுமானவையாக இல்லை. ஒவ்வொரு ஆண்டும் இதனால் ஏராளமான சிக்கல்கள் ஏற்பட்டன.

எனினும், இந்த ஆண்டில் நிலைமை மாறியது. புணே மாவட்டப் பஞ்சாயத்தின் சிஇஓ திரு. சூரஜ் மந்தாரே, கிராம மக்களுக்கு புதுமையான ஒரு வேண்டுகோள் விடுத்தார். யாத்திரை செல்லும் வழியில் உள்ள எல்லா வீடுகளிலும் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் சொந்தமாகக் கட்டப்பட்ட தனிப்பட்ட கழிப்பறைகளை இந்த யாத்ரீகர்கள் பயன்படுத்த அனுமதிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார். களைத்துப் போன யாத்ரீகர்கள் பயன்பாட்டுக்கு கழிப்பறை தயாராக இருக்கிறது என்பதைக் காட்ட ஒவ்வொரு கழிப்பறை மீதும் ஒரு வெள்ளைக் கொடி பறக்க விடப்பட்டது.

வட்டார வளர்ச்சி அதிகாரிகள், கிராம சேவக்குகள், மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மூலமாக விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோள், செய்தி ஏடுகளிலும் வெளியிடப்பட்டது. போஸ்ட்டர்களாகவும் ஒட்டப்பட்டது.

வியப்பூட்டும் வகையில், கிராமப் பஞ்சாயத்துக்களும் இதற்கான தீர்மானங்களை நிறைவேற்றின.

சிவப்பு மற்றும் மஞ்சள் கொடிகளை ஏந்தி ஒரே வண்ணமயமாக யாத்திரை வந்தது. எனவே, கழிப்பறைகளைக் காட்டும் வெள்ளைக் கொடிகள் வித்தியாசமாகத் தெரிந்தன.

யாத்ரீகர்களுக்குத் தங்களது வீடுகளை மக்கள் திறந்து விடவே, சமூகக் கழிப்பறைகளின் எண்ணிக்கையை விட அதிகமான கழிப்பறைகள் கிடைத்து விட்டன. மேலும், பல்லக்கு யாத்திரை சென்ற வழியெங்கும் நீர்வழங்கல் மற்றும் உடல்நலப் பராமரிப்பு வசதிகளை புணே மாவட்டப் பஞ்சாயத்து செய்திருந்தது. தவிரவும், மோட்டார் சைக்கிள்கள் மூலம் உடனுக்குடன் சென்று மருத்துவ உதவி செய்யும் நடைமுறையையும் மாவட்ட நிர்வாகம் அறிமுகப்படுத்தியது. இரவும் பகலும் செயல்படும் கட்டுப்பாட்டு அறையும் திறக்கப்பட்டது ♦

# தூய்மை உறுதிமொழி எடுத்த ஸோன்பத்ரா; ஒரு மாதத்தில் 50,000 கழிப்பறைகள் கட்டப்படும்



மழைக்காலம் வந்துவிட்டால் கழிப்பறைகள் கட்டும் வேலையும், தூய்மை இந்தியா கிராமிய இயக்கத்தின் மற்ற பணிகளும் வேகம் குறைந்துவிடும் என்பதால், உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஸோன்பத்ரா மாவட்டம் ஒரே மாதத்தில் 50,000 கழிப்பறைகளைக் கட்டும் வேலையைத் தொடங்கியது.

**"மழை இப்போது, வீட்டு கௌரவம் எப்போதும்"** என்று பெயரிடப்பட்ட இந்த இயக்கம் 2018 ஜூன் 5 ஆம் தேதி தொடங்கி 2018 ஜூலை 5 ஆம் தேதி முடிவடைந்தது. இந்த இயக்கத்தினால் கிடைத்த வேகத்தினால், 2018 ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்குள் திறந்தவெளி மலக் கழிப்பு இல்லாத ஒரு நிலை முன்கூட்டியே எட்டப்பட்டது. ஆனால் இலக்குத் தேதி 2018 அக்டோபர் 2 என்றுதான் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

உ.பி-யின் இரண்டாவது மிகப்பெரிய மாவட்டமான இதில் கணிசமான அளவுக்கு பழங்குடிகளும், ஏழைஎளிய பிரிவு மக்களும் வசிப்பதால் இங்கு பழக்க வழக்கங்களை மாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகள் பலனளித்து, மாபெரும் மக்கள் இயக்கமாக மாறி, ஒரேயடியாக திறந்தவெளி மலக்கழிப்பு ஒழிக்கப்பட்டது.

கடந்த மூன்றாண்டுகளில், 1.5 லட்சத்திற்கும் கூடுதலான கழிப்பறைகள் கட்டப்பட்டன. இதனால் துப்புரவுப் பயன் 33 சதவிகிதத்தில் இருந்து 70 சதவிகிதமாக உயர்ந்தது. ஜூன் 5 ஆம் தேதி மொத்தமுள்ள 1372 வருவாய்க் கிராமங்களில் 342 கிராமங்கள் மட்டுமே திறந்த வெளி மலக்கழிப்பு இல்லாத கிராமங்களாக இருந்தன.

இந்த இயக்கத்திற்கு ஆயத்தமாக, மகளிர் சுய உதவிக் குழுக்களையும், பள்ளி மாணவர்களையும், அங்கன்வாடி ஊழியர்களையும், ஏஎன்எம்-களையும் மாவட்ட நிர்வாகம் ஈடுபடுத்தி துப்புரவு, உடல்நலன் மற்றும் கல்வி பற்றிய விழிப்புணர்வைப் பரப்பியது.

கோடைக் காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையால் ஸோன்பத்ரா மாவட்டத்தில் கழிப்பறை கட்டும் வேலைகள் மெதுவாக நடந்ததால், இந்த இயக்கம் மிகவும் முக்கியமானதாக இருந்தது. எனினும், மழைக்காலம் வந்ததும் நீர் தேங்கும் அபாயம் ஏற்பட்டு, குழிகளைத் தோண்டுவது கடினமான வேலையாக இருந்தது. மேலும், மலம் கழிக்கச் செல்லும்போது பாம்புக் கடிகளும், விபத்துக்களும் சர்வசாதாரணமாக நிகழ்ந்தன.

இயக்கத்திற்கான உத்தி: பலத்த மழை கொட்டத் தொடங்குவதற்கு முன்பாக ஒரு லட்சம் குழிகளைத் தோண்டி, அவற்றை மூடவேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு அரசு



ஊழியர்கள் மற்றும் ஊக்கம்பெற்ற பொதுமக்களின் பிரதிநிதிகள் உழைப்பு தானம் செய்ய வேண்டியிருந்தது. இயக்கத்திற்கு முன்பாக, வேலை தொடங்குவதற்கு முன்பு, பயனாளிகளுக்கு ஊக்கம் தரும்பொருட்டு துப்புரவுக் கடிதங்கள் தரப்பட்டன. மேலும், தூய்மை உறுதிமொழி மற்றும் தூய்மை பருவமழைக் கூட்டங்களும் மக்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் நடத்தப்பட்டன. மகளிர் சுய உதவிக் குழுக்கள், அங்கன்வாடி ஊழியர்கள், ஏஎன்எம்-கள் மற்றும் பல்வேறு மதக் குழுக்களின் தீவிரப் பங்கேற்பும் நாடப்பட்டது. அதற்காக பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. மிகச்சிறந்த ஊழியர்கள் கௌரவிக்கப் பட்டனர். மாவட்ட மற்றும் கிராம நிலை அதிகாரிகள் அடிக்கடி கண்காணித்து வந்தனர்.

**நடவடிக்கைகள்:**

முக நூல் மற்றும் டிவிட்டர் மூலமாக பல்வேறு சமூக ஊடகப் பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பான துப்புரவு பழக்கங்கள் பற்றி விளக்கும் சுவர் ஓவியங்கள், போஸ்ட்டர்கள், பதாகைகள் ஆகியவை பொது இடங்களில் நிறுவப்பட்டன. துப்புரவு பற்றிய விழிப்புணர்வை பரப்பிட எல்இடி வேன்களைப் பயன்படுத்தி ரத யாத்திரைகளும் மேற்கொள்ளப்பட்டன. வீதி நாடகங்கள் மூலமாக கருத்துரைகள் பயனுள்ள முறையில் பிரச்சாரம் செய்யப்பட்டன. மேலும், பள்ளிக் குழந்தைகளிடையே சுகாதாரம், கழிப்பறை கட்டுதல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை விளக்கிட தூய்மைச் சகோதரி என்னும் காமிக் தொடர் தயாரிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டன. வானொலி, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் பயன்படுத்தப் பட்டன. துப்புரவு, கல்வி மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்தை விளக்கிட பருவமழைக் கூட்டங்களில் தூய்மை உறுதிமொழி எடுக்கும்படி தூண்டப் பட்டது. தத்தெடுக்கும் பத்திரங்களை வெளியிட்டு அதிகபட்ச எண்ணிக்கையில் கழிப்பறைகளைக் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

உலக யோகா தினம் மற்றும் உலகச் சுற்றுச் சூழல் தினத்துடன் இந்த பிரச்சாரம் இணைக்கப்பட்டது. மக்களிடையே இப்படியொரு உற்சாகம் கிளம்பியது அரசு அதிகாரிகளுக்கு ஊக்கம் தருவதாக இருந்தது. மக்கள் பெரிய அளவில் பங்கேற்கும்போது அரசு நடத்தும் இயக்கங்கள் நீடித்து நிலைத்திருக்கின்றன. இவ்வாறு உருவான உத்வேகத்தை முன்னெடுத்துச் செல்ல மாவட்ட நிர்வாகம் மழைக்காலம் முழுவதும் முனைப்பாக ஈடுபட்டது. இந்த நிகழ்வை மற்ற விருப்பமுள்ள மாவட்டங்களிலும், கழிப்பறை இயக்கத்தில் பின்தங்கியுள்ள மாவட்டங்களிலும் பின்பற்றலாம்.♦

# சிக்கிமில் திறந்த வெளி மலக்கழிப்பு இல்லாத நிலை தரமாகப் பராமரிக்கப்படுகிறது



“வடகிழக்கு மாநிலமான சிக்கிம் நாட்டில் திறந்தவெளி மலக்கழிப்பு இல்லாத முதல் மாநிலம் என்று 2016 மே 27 ஆம் தேதி அறிவிக்கப்பட்டது. இந்த நிலையைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, ஒவ்வொரு குடும்பத்திலும், குடும்பத்தினர் பயன்படுத்துவதற்காக துப்புரவுக் கழிப்பிடம் இருக்க வேண்டியது கட்டாயம் என்று அந்த மாநிலம் அவ்வப்போது அறிவிக்கைகளை வெளியிட்டு, பிளாஸ்டிக் பயன்பாட்டைக் கண்டிப்புடன் தடை செய்து, குப்பைகள் உருவாக்கப்படுவதைக் கண்டித்து வருகிறது.

“துப்புரவு என்பது மாநில அரசு சம்பந்தப்பட்ட விஷயம். அது திறந்த வெளி மலக்கழிப்பு இல்லாத நிலையைப் பராமரிப்பது நமது கடமை. இதனால் உள்ளாட்சி அமைப்புக்களுக்கும் கடமை இருக்கிறது. எனவே, எல்லா பஞ்சாயத்துக்களின் உறுப்பினர்களும், மாவட்ட, வட்டார மற்றும் கிராமப் பஞ்சாயத்துப் பணியாளர்களும் இந்தத் திறந்த வெளி மலக்கழிப்பு இல்லாத நிலையை தக்க வைப்பதற்குக் கூட்டாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப் பட்டனர். ஏதேனும் சரிவு ஏற்படுமானால், பஞ்சாயத்துக்களிடம் இருக்கும் நிதியைப் பயன்படுத்தி அதைச் சீர்செய்ய வேண்டும்” என்று கேங்டாக்கில் சிக்கிம் மாநில அரசின் ஊரக வளர்ச்சித் துறை 2016 ஜூன் 1 ஆம் தேதி வெளியிட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2005 ஆம் ஆண்டின் சிக்கிம் பஞ்சாயத்து (திருத்த) சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் செய்து அந்தச் சுற்றறிக்கையுடன் ஓர் அறிவிக்கையும் இணைக்கப்பட்டது. இது ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கழிப்பறை இருப்பதைக் கட்டாயமாக்குகிறது.

குப்பைகளை நிர்வகித்து துப்புரவான சூழலை ஏற்படுத்திட பல்வேறு நடவடிக்கைகளையும் மாநில அரசு துவக்கியது. டிஸ்போஸபிள் ஊசிகள் மற்றும் இதர டிஸ்போஸபிள் பொருட்கள் கிராமங்களிலும், கடைவீதிகளிலும் சேகரிக்கப்படும் நகராட்சிக் கழிவுகளில் நிறைய இருப்பதைக் கண்டு, இத்தகைய பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு ஆபத்தானவை என்றும், அவை குப்பைக் கிடங்குகளில் பெரும்பாலான இடத்தை ஆக்கிரமித்துக் கொள்கின்றன என்று ஓர் அறிவிக்கை வெளியிடப்பட்டது. மேலும், ஸ்டைரோஃபோம் தட்டுகளில் மிகவும் சூடான

உணவுகளை உட்கொள்வது ஆரோக்கிய மானது அல்ல என்றும் தெரிவிக் கப்பட்டது.

மற்றொரு சுற்றறிக்கையை சிக்கிம் மாநில அரசு 2016 மே 19 ஆம் தேதி வெளியிட்டது. துறைசார் கூட்டங் களிலும், விழாக்களிலும் பாட்டில் குடிநீர் பயன்படுத்தப்படுவது தொடர்பானது. இந்த பாட்டில்களால் ஏராளமான அளவுக்கு குப்பைகள் சேர்ந்து விடுவதோடு, குப்பைக் கிடங்குகளிலும் இவற்றின் சுமை அதிகரிக்கிறது எனக் கூறப்பட்டது.

"பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்கள் வடிவில் குப்பைகள் உருவாவதைக் குறைப்பதற்காக, எந்த ஒரு அரசுக் கூட்டங்களிலும், விழாக்காலங்களிலும் பாட்டில் நீரை பயன்படுத்தக் கூடாது என்று" அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## விளைவு

**அரசின் மானியம் அல்லது பயன் பெற விரும்பும் எந்த ஒரு நபரும் தனது வீட்டில் செயல்படும் நிலையில் ஒரு கழிப்பறை இருக்கிறது என்பதை நிரூபிக்க ஊரக வளர்ச்சி அதிகாரியிடம் பெற்ற சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது.**

இதற்கு மாற்றாக, வடிகட்டிய நீரை அல்லது பெரிய அளவில் ரீயூஸபிள் வாட்டர் டிஸ்பென்ஸர்களின் தண்ணீரை அல்லது ரீயூஸபிள் வாட்டர் பாட்டில் களை அரசு விழாக்களில் பயன்படுத் தலாம் என்றும் யோசனை தெரிவிக் கப்பட்டது. 2015 பிப்ரவரியில் வெளியிடப் பட்ட மற்றுமொரு சுற்றறி க்கை, எல்லாக் குடும்பங்களுக்கும் அரசு செலவில் கட்டப்பட்ட அல்லது சொந்தமாகக் கட்டப்பட்ட கழிப்பறை வசதி இருக்க உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியது. அரசிடம் இருந்து எந்த மாதிரியான மானியங்கள்/பயன்கள் பெற வேண்டுமானால் துப்புரவுக் கழிப்பறை ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டியது கட்டாயம் என்று கூறப்பட்டது. இதனால், அரசின் மானியம் பெற விரும்பும் எந்த ஒரு நபரும் தனது வீட்டில் ஒரு கழிப்பறை இருக்கிறது என்பதை நிரூபிக்க ஊரக வளர்ச்சி அதிகாரியிடம் பெற்ற சான்றிதழைச் சமர் ப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. ♦

# கேரளா முதலாவது சாணவாயு கூடத்தை கோபர்-தன் திட்டத்தின் கீழ் தொடங்கியது.



தென்மாநிலமான கேரளா நாட்டின் முதலாவது பயோ கேஸ் ஆலையை கோபர் - தன் திட்டத்தின் கீழ் தொடங்கி முதல் அடி எடுத்து வைத்தது. கண்ணூர் மாவட்டத்தின் பாப்பினிசேரி கிராமப் பஞ்சாய்த்தில் இந்த துருத்தி கழிவு சுத்திகரிப்பு ஆலை நிறுவப்பட்டு, அது பொது இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட பயோ கழிவுகளை சுத்திகரித்தது.

கோபர்-தன் (கேல்வனைசிங் ஆர்கா னிக் பயோ அக்ரோ ரிஸோர்ஸஸ் தன்) திட்டம் மூலம் கழிவுகள் எரிசக்தி யாகவும், மக்கிய உரமாகவும் மாற்றப் பட்டு, மக்களுக்குப் பயனளிப்பதோடு, கிராமங்களில் தூய்மை யைப் பராமரிக்க உதவுகிறது.

கண்ணூரில் அமைந்துள்ள புதிய ஆலை நாள் ஒன்றுக்கு 1000 கிலோ எடையுள்ள கழிவுகளைச் சுத்திகரி க்கும் திறன் பெற்றது. இந்த ஆலையில் பாபா அணுவாராய்ச்சி மையம் உருவாக்கிய நிஸார்குருங்கா பயோ கேஸ் தொழில் நுட்பம் பயன்படுத் தப்படுகிறது.

இந்த ஆலையில் இருந்து சுமார் 25 கன மீட்டர் பயோகேஸ் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த

எரிவாயு அருகில் உள்ள கோழிக் கழிவு ஆலையை இயக்குவதற்கான எரிபொருளாகப் பயன்படுத்தப்படும்.

பயோ கேஸ் எனப்படும் சாண வாயு சுத்தமான எரிபொருளாகும். இது கால்நடைகளின் சாணம், கோழிக் கழிவுகள், பயிர் மற்றும் சமையலறைக் கழிவுகள் போன்ற குப்பைகளில் இருந்து கிடைக்கிறது.

இந்த கோபர்-தன் திட்டம் பொதுவாகக் கிராம மக்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு பயனளித்து, உடல் நலனை மேம்படுத்துவதோடு, கிராமங்களை தூய்மையாக வைக்கிறது. இந்தத் திட்டத்தினால் மக்கும் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, அவை வளம்மிக்க ஒரு பொருளாக மாற்றப்படுவதோடு, விவசாயிகளுக்கும், குடும்பங்களுக்கும் பண லாபமும் தருகிறது.

சாணவாயு ஓர் எதிர்கால எரிபொருளாகும். இந்த மண்ணை ஆற்றுப்படுத்தும் சக்தி பெற்றது என்று கூறப்படுகிறது. எல்லா வீடுகள் மற்றும் சந்தைகளில் இருந்து மக்கும் கழிவுகள் திரட்டப்பட்டு, சுத்திகரிப்பு ஆலைக்குக் கொண்டு வரப்படுகின்றன. இதனால் கிராமத்தின் தூய்மை காக்கப்படுகிறது. மேலும், சாண வாயு, சாண எரிபொருள் மற்றும் சாணக் குப்பை என்று கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு வருமானமும் அதிகரிக்கிறது. இதனால் விவசாய விளைதிறன் கணிசமாக அதிகரித்து, மக்களின் திறன் வளர்ந்து, பல வேலை வாய்ப்புக்களும் உருவாக்கப்படுகிறது. ♦

# தூய்மை இந்தியா விழிப்புணர்வை உருவாக்கும் அழைப்பு மணி




## விளைவு

**தட்சிண் கன்னடா 2016 செப்டம்பர் 20 ஆம் தேதி திறந்தவெளி மலக்கழிப்பு இல்லாத மாவட்டம் என்னும் தகுநிலையைப் பெற்றது. இதைத் தெரிவிக்கும் வகையில் அலுவலகங்களிலும், வீடுகளிலும் அழைப்பு மணி நிறுவப்பட்டது, அது திட்டத்தில் இருந்து விலகிச் செல்லாமலும், தொடர்ந்து பழக்க வழக்கங்களை மாற்றவும் உறுதி செய்கிறது.**

தட்சிண கன்னட மாவட்டப் பஞ்சாயத்தின் சிஇஓ டாக்டர் எம்.ஆர்.ரவி இயற்றிய ஒரு கன்னடப் பாடலின் அடிப்படையில் தூய்மையை வலியுறுத்தும் பல விளம்பரப் பாடல்கள் உருவாக்கப்பட்டு, அவற்றை ஸஹ்யாத்ரி பொறியியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் மாணவர்கள் கதவுகளில் பொருத்தப்படும் அழைப்பு மணியுடன் இணைத்தனர்.

அந்த விளம்பரப் பாடல்கள் திறந்தவெளி மலக்கழிப்பை விட்டொழிக்குமாறும், பிளாஸ்டிக் பயன்பாட்டை விட்டொழிக்கும்படியும், எல்லா மூலங்களிலும் குப்பைகளைத் தரம்பிரிக்குமாறும், சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்கும்படியும் வலியுறுத்தின. இந்த 30 விநாடி விளம்பரப் பாடல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

தூய்மை இந்தியா காலிங் பெல் முதலில் மாவட்டப் பஞ்சாயத்து அலுவலகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. சிஇஓ அல்லது மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர் தங்களது அறையில் ஸ்விட்ச்சை அழுத்தியதுமே வருகையாளர்கள் உள்ளே நுழையலாம் எனத் தெரிவிக்கும் வகையில் அந்தப் பாடல் ஒலிக்கிறது.

மேலும், கல்லிகே கிராமத்தில் பல வீடுகளில் இந்தத் தூய்மை காலிங் பெல்கள் பொருத்தப்பட்டன. "இந்த காலிங் பெல் எப்போதும் தூய்மை பற்றி நினைவூட்டிக் கொண்டே இருக்கும்." என்று டாக்டர் ரவி நம்பிக்கை தெரிவித்தார்.

தூய்மை இந்தியா (கிராமிய) இயக்கத்தின் மூன்றாவது ஆண்டு விழா 2017 அக்டோபர் 2 ஆம் தேதி கொண்டாடப்பட்டபோது, மத்திய அரசின் ஸ்வச்சத்தா தர்ப்பண் விருதைப் பெற்ற நாட்டிலுள்ள 46 மாவட்டங்களில் கர்நாடகாவில் உள்ள தட்சிண் கன்னடா மற்றும் உடுப்பி ஆகிய இரு மாவட்டங்களும் அடங்கும்.

தட்சிண் கன்னடா மாவட்டம் 2016 செப்டம்பர் 20 ஆம் தேதி திறந்த வெளி மலக்கழிப்பு இல்லாத மாவட்டம் என்ற தகுநிலையைப் பெற்றது. இந்தச் செய்தி எல்லா அலுவலகங்களிலும், வீடுகளிலும் காலிங் பெல்கள் மூலமாகத் தெரிவிக்கப்பட்டன. இது மக்களின் பழக்கங்களை மாற்றி, திட்டத்தில் தோல்வி ஏற்படாமல் இருக்க உறுதி செய்யும்.

"நமது இளம் தலைமுறையினரிடையே சரியான நெறிகளை வளர்த்து, தூய்மை என்பது நமது வாழ்க்கையுடனும், பண்பாட்டுடனும் இணைந்த ஒரு பகுதியாக ஆக வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம்," என்று டாக்டர் ரவி கூறினார்.

துடிப்பாகச் செயல்படும் அந்த சிஇஓ பல முயற்சிகளில் ஈடுபட்டார். அந்த மாவட்டத்தில் சுமார் 3.2 லட்சம் மாணவர்கள் படிக்கிற 2000-க்கும் அதிகமான பள்ளிகளில் ஒவ்வொரு சனிக்கிழமையும் "துப்புரவு நாளாக" கடைப்பிடிக்க ஏற்பாடு செய்தார். துப்புரவு சனிக்கிழமையின் தொடக்கமாக மாணவர் கூட்டத்தில் துப்புரவு பற்றிய கதை ஒன்று வாசிக்கப்படும். அதைத் தொடர்ந்து பள்ளிக்கு உள்ளும், வெளியிலும் உழைப்புதான நடவடிக்கைகளில் ஆசிரியர்களும், மாணவர்களும் ஈடுபடுகின்றனர். இதற்கு இதுநாள் வரை நல்லாதரவு கிடைத்து வருகிறது.

அங்கன்வாடிகளுக்கு வரும் 30,000 அன்னையர்களை ஈடுபடுத்தும் திட்டங்களும் இப்போது செயல்படுத்தப்படுகின்றன. தற்போதுள்ள 2104 அங்கன்வாடிகளில் 1600 அங்கன்வாடிகள்

கிராமப்புறங்களில் உள்ளன. சுத்தம் மற்றும் துப்புரவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு நிகழ்ச்சி ஒவ்வொரு சனிக்கிழமையும் அங்கன்வாடிகளில் நடத்தப்படுகிறது.

மற்றொரு முயற்சியாக, தட்சின் கன்னடா மாவட்டத்தில் மூன்று தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டியுள்ள சுமார் 36 கிராமப் பஞ்சாயத்துக்கள் கண்டறியப்பட்டு, அவற்றைக் கடந்து செல்லும் மக்களுக்கு சாலை ஓரங்களில் குப்பைகளைப் போடாமல் இருக்கும் பழக்கத்தை உண்டாக்கிட அலுவல் படை ஒன்றை மாவட்ட நிர்வாகம் நியமித்துள்ளது. இந்தப் படை குப்பை போடுவோரைக் கண்காணித்து அபராதம் விதிக்கிறது.

கேளுங்கள் தூய்மைப் பாடல்: https://drive.google.com/file/d/1quA1TE_y09wuo3YK45u-Kj2z1ERAZXxN/view?usp=sharing ♦

# துப்புரவு பற்றிய செய்தியைப் பரப்பிட கலந்துரையாடும் நாட்டுப்புறக் கலைகள்

மக்களின் பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கு கழிப்பறைகளைப் பயன்படுத்துவதால் உண்டாகும் நன்மைகள் பற்றி எடுத்துரைக்க வேண்டியது முக்கியமாகும். திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒரு பழக்கமாகக் காலம்காலமாகக் கொண்டிருக்கும் மக்களின் மனப் போக்கை மாற்றுவது மிகமிக முக்கியமாகும். தெலுங்கானா மாநிலத்தின் வனபார்த்தி மாவட்ட ஆட்சியர் செல்வி ஸ்வேதா மொகந்தி ஐ ஏ எஸ் பாரம்பரிய நாட்டுப்புறக் கலையைப் பயன்படுத்தி மாவட்ட மக்களுக்கு துப்புரவு பற்றிய செய்திகளை எடுத்துரைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.



**பல்லே சுடுலு - கலந்துரையாடும் நாட்டுப்புறக் கலை:** தெலுங்கானா வட்டாரத்தின் மிகவும் பிரபலமான நாட்டுபுறக் கலை வடிவங்களில் ஒன்று பல்லே சுடுலு. வர்ணனை வடிவிலான இதில் ஒவ்வொரு கதாபாத்திரமும் தனது செயல்களை பாட்டுக்களாகவும் ,உரையாடல்களாகவும் வட்டார மொழியில் சொல்லி தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கின்றன. இதனால் ரசிகர்கள் கிராமத்தின் ஏதோ உண்மையான ஒரு நிலைமையில் இருப்பது போல உணர்கின்றனர்.

இந்த விஷயத்தில் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிலைமைக்குப் பொருந்தக்கூடிய கதையை உருவாக்கிட மாவட்ட நிர்வாகம் பயிற்சி அளித்தது. பாதுகாப்பான துப்புரவுப் பழக்கங்களுக்கு கழிப்பறைகளைக் கட்டிப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்குமாறு அவர்களுக்கு விளக்கப்பட்டது. ஒரு புதிய கிராமப் பஞ்சாயத்தில் ஒரு நாளைக்கு ஒரு நிகழ்ச்சியை நடத்திட மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்தது.

கழிப்பறைகள் வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் முன்வைத்து, கிராமங்களை "தூய்மைக் கிராமங்களாக" மாற்றிட பல்லே சுடுலு கலை ஒரு பயனுள்ள கருவியாகப் பயன்படுகிறது. இப்போது இந்தக் கலைவடிவத்துடன், கிராமக் கண்காணிப்புக் கமிட்டிகளும் சேர்ந்து 2018 ஜூன் 2 ஆம் தேதி தெலுங்கானா மாநில நிறுவக தினத்தன்று 50 கிராமப் பஞ்சாயத்துக்களை திறந்தவெளி மலக்கழிப்பு இல்லாதவையாக தாங்களாகவே அறிவிக்க வழிவகுத்துள்ளன.

## விளைவு

**எல்லாக் கிராமப் பஞ்சாயத்துக்களிலும் சில கிராம அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள், தீவிரமாக செயல்படும் சமூகத் தொண்டர்கள் ஆகியோரைக் கொண்டு கண்காணிப்புக் கமிட்டிகளை மாவட்ட நிர்வாகம் நியமித்துள்ளது. இந்தக் கமிட்டிகளின் உறுப்பினர்கள் தினந்தோறும் திறந்த வெளியில் மலம் கழிப்பவர்களைக் கண்டு அவர்களுக்கு அறிவுரை வழங்குகின்றனர்**

கண்காணிப்புக் கமிட்டிகள்: எல்லாக் கிராமங்களிலும் சில கிராம அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள், தீவிரமாக செயல்படும் சமூகத் தொண்டர்கள் ஆகியோரைக் கொண்டு கண்காணிப்புக் கமிட்டிகளை மாவட்ட நிர்வாகம் நியமித்துள்ளது. இந்தக் கமிட்டிகளின் உறுப்பினர்கள் தினந்தோறும் திறந்த வெளியில் மலம் கழிப்பவர்களைக் கண்டு அவர்களுக்கு அறிவுரை வழங்குகின்றனர். இதனால், கிராம சமுதாயம் ஆக்கப்பூர்வமானதாக மாறி, கிராமத்தின் நன்மைக் காக கமிட்டி நடவடிக்கைகளில் தாங்களாகவே முன்வந்து ஈடுபடுகின்றனர். துப்புரவான வாழ்க்கையில் சமூகத்தை ஈடுபடுத்துவதுதான் இதன் குறிக்கோள். இன்னும் ஓரிரு மாதங்களில் மேலும் 23,000 கழிப்பறைகளைக் கட்டி, 100% தூய்மையை அடைய மாவட்ட நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. ♦

# உங்களுக்குத் தெரியுமா

**மலத்தை அப்புறப்படுத்த வெவ்வேறு வகை தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு:**

## இணைந்து பதப்படுத்தல்

வெவ்வேறு ஆழமும், தக்க வைக்கும் நேரமும் கொண்ட பல தொட்டிகளைக் கொண்டதாக கழிவைக் கெட்டியாக்கும் தொட்டிகள் அமைகின்றன. இந்தத் தொட்டிகளில் கழிவுநீரும் மலமும் சேரும்போது திரவமும், கெட்டியான மலமும் பிரிக்கப்படுகின்றன.

## ஆழமான குழிகளின் வரிசை:

இதில் ஆழமான குழிகள் வரிசையாகத் படுத்தப்படுகின்றன. வடிகால் டேங்க், செங்குத்தான மற்றும் கிடக்கை வாக்கி லான ஃபில்ட்டர்கள், கட்டப்பட்ட ஈரமண் கூடம், பாலிஷிங் டேங்க், கசடுகளை உலர்த்தும் கூடம், பயோகேஸ் ஆலை, இணைந்து மக்கச் செய்யும் பிரிவு என்று பல்வேறு பக்குவப்படுத்தும் பிரிவுகள் உள்ளன. கசடுகளின் உள்ளடக்கத்தைப் பொறுத்து எஃப்எஸ்டிபி-க்கும் எஸ்டிபி-க்கும் இடையே வேறுபாடு உள்ளது. செப்டிக் டேங்க்/குழிகளில் இருந்து கிடைக்கும் கழிவுகளில் கசடு அதிக மாகவும், சாக்கடையில் இருந்து வரும் கழிவுகளில் கசடு மிகக் குறைவாக 0.01%-க்கும் குறைவாக இருக்கும்.

## குழி தோண்டுதல்:

மலத்தை அப்புறப்படுத்த குழிகளைப் பயன்படுத்துவது இந்தியாவிலும், வேறுபல நாடுகளிலும் பின்பற்றப்பட்ட பழங்கால வழிமுறையாகும். இந்தக் குழிகள் ஆழமானவையாக அல்லது ஆழமற்று இருக்கலாம். பெரும்பாலும் ஆழம்மற்ற குழிகளே மரங்களை நடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.



## மலக்கழிவுடன் வேறு கழிவைச் சேர்த்து உரமாக்குதல்

காற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தி கரிமப் பொருளை மக்கச் செய்வதற்காக நுண்ணுயிரிகளைப் பயன்படுத்துதல். இந்த முறையில் கிடைக்கும் பொருளை மண்ணைப் பதப்படுத்திட பயன்படுத்தலாம். மலக்கழிவுடன் தாவர திடக்கழிவுகளைச் சேர்த்து காற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தி மக்கச் செய்வது இந்த முறையாகும்.

## கழிவைக் கெட்டிப் படுத்தும் தொட்டிகளில்

தோண்டப்பட்டு, அவற்றில் மலக்கழிவு நிரப்பப்பட்டு, அவற்றின் மீது மண் போடப்பட்டு, அதன் மீது மரம் நடப்படுகிறது. இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திட போதுமான அளவு நிலம் தேவை.

## மலக்கழிவு டிரீட்மென்ட் ஆலையை நிறுவுதல் (திஷிஜிறி)

எஃப்எஸ்டிபி என்பது பல்வேறு டெக்னிக்கல் டிரீட்மென்ட் பிரிவுகளின் சேர்க்கை யாகும். இந்தப் பிரிவுகள் வரிசை வரிசையாக அல்லது இணை இணையாக வைக்கப்பட்டு, திடக் கழிவுகளும், திரவக் கழிவுகளும் செப்டிக் டேங்க்கில் பக்குவப்

## கோபர்-தன்-கழிவில் இருந்து எரிசக்தியையும், பணத்தையும் பெறுவதற்கு

கோபர் (கேல்வனைஸிங் ஆர்கானிக் பயோ-அக்ரோ ரிஸோர்ஸஸ்-தன் திட்டத்தின் நோக்கம் கிராமங்களில் தூய்மையை ஏற்படுத்தி, கால்நடைகளின் சாணம் மற்றும் பயிர்க்குப்பைகளில் இருந்து எரிசக்தியையும், பணத்தையும் பெறுவது ஆகும். இது கிராமங்களுக்குப் புதிய வாழ்வாதாரங்களைத் தருவதோடு, விவசாயிகளுக்கும், மற்றக் கிராம மக்களுக்கும் பணம் சம்பாதிக்கவும் வழி காட்டுகிறது.

கோபர்-தன் திட்டம்-கிராமங்களைச் சுத்தமாக வைத்து, கிராமக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கம் கொண்டது ♦





# கங்கை நதியைச் சுத்தப்படுத்த கிராம மக்கள் தொடங்கிய தூய்மைக் கலச யாத்திரை

## கங்கை நதியின் சுத்தம் பற்றிய விழிப்புணர்வு உருவாக்கப்பட்டது



பல சமூக மக்களை இடைவிடாது ஈடுபடுத்தி அவர்களை எல்லா நிலைகளிலும் செயல்படச் செய்வதால் குறுகிய கால மற்றும் நீண்டகாலப் பயன்கள் கிடைக்கின்றன என்பது திரும்பத் திரும்ப நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு காரியத்திற்காக எல்லாப் பிரிவு மக்களும் இணைந்து இயங்கும்போது வெற்றி நிச்சயம் என்பதைத் தகவல்கள் காட்டுகின்றன. குறிப்பாக இளைஞர்கள் தூய்மைக் கால்பந்து போட்டிகள். தூய்மை கலச யாத்திரை. கங்கை ஆரத்தி. தூய்மைப் பஜனை, கங்கைத் தூய்மை இயக்கம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், 2018 மே 30 முதல் ஜூன் 5 வரை உலகச் சுற்றுச்சூழல் வாரத்தை மாவட்ட நிர்வாகம் கொண்டாடிய போது முன் எப்போதும் இருந்திராத அளவுக்கு சமூக மக்கள் பங்கேற்றனர். அந்த நடவடிக்கைகளின் சில காட்சிகள் இதோ.

### உலகச் சுற்றுச்சூழல் வாரம்

பல்வேறு தூய்மை நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடுத்துவதற்காக இந்த வாரம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கங்கை நதிக் கரையிலும். மற்ற இடங்களிலும் சிதறிக் கிடக்கும் பிளாஸ்டிக்குகளைப் பொறுக்குவதில் இருந்து மரக்கன்றுகளை நடுவது வரை ஒவ்வொரு நாளும் ஒரு நிகழ்ச்சி தூய்மை பஜனையுடன் தொடங்கி, கங்கை ஆரத்தியுடன் முடிவடைந்தன.

**தூய்மைக் கலச யாத்திரை:** தூய்மைக் கலச யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டு, வண்ண வண்ண உடைகளணிந்த பெண்கள் கங்கை நீருள்ள கலசங்களைத் தங்களது தலையில் சுமந்தபடி. ஊர்வலமாகச் சென்றனர். இந்த யாத்திரையின்போது, அவர்கள் கழிப்பறைகளைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகளைப் பற்றி விழிப்புணர்வை பரப்புகிறார்கள். முடிவாக கங்கை நதியில் ஆரத்தி எடுக்கப்பட்டு. கங்கையை சுத்தமாக வைத்திருப்பது பற்றி மக்களின் கவனத்துக்கு வைக்கப்பட்டது.




### விளைவு

**பல்வேறு சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடுத்தும் நோக்குடன் ஒரு வாரம் முழுவதும் தூய்மை தொடர்பான நிகழ்வுகள் நடத்தப்பட்டன. சமுதாயத்தின் எல்லாப் பிரிவு மக்களும் இணைந்து செயல்படும்போது அது வெற்றிக்கு உத்தரவாதம் என்பதைத் தகவல்கள் காட்டுகின்றன.**

**தூய்மைக் கால்பந்து போட்டி:** ஸாஹிப் கஞ்ச் மாவட்டத்தின் எல்லா வட்டங்களிலும் இளைஞர்களை தூய்மை இந்தியா நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக தூய்மைக் கால்பந்து போட்டிகள் நடத்தப்பட்டன. பத்னா வட்டம்தான் முதன்முதலில் இந்தப் போட்டியை நடத்தியது. அதன்பிறகு இளைஞர்கள் தூய்மைத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டு, அவரவர் பகுதிகளில் சுத்தமாக இருக்க வேண்டியதன் அவசியம் பற்றிய செய்திகளைப் பரப்பினர், இந்த இளைஞர்கள் தரமான கழிப்பறைகளைக் கட்டும் வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

தூய்மை பஜனை; தூய்மை பஜனைகளில் வட்டார வழக்கு மொழிகளில் நாட்டுப்புறப் பாடல்கள் பாடப்பட்டன. சில பாடல்கள் திருத்தப்பட்டு, பக்திப் பாடல்களாகவும், கங்கை நதியுடன் தொடர்புடைய பாடல்களாகவும் மாற்றப்பட்டு சுத்தமாக இருக்க பின்பற்ற வேண்டிய பழக்க வழக்கங்கள் பற்றி மக்கள் மனதில் பதியும்படி பாடப்பட்டன.♦



# காஞ்சிபுரத்தில் செயல்படாமல் இருந்த 8326 கழிப்பறைகள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டன

தமிழ்நாட்டின் பட்டு நெசவு மாவட்டமான காஞ்சிபுரம் 2018 பிப்ரவரி 27 ஆம் தேதி திறந்தவெளி மலக்கழிப்பு இல்லாத மாவட்டமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்போது அந்த அந்தஸ்தைத் தக்க வைத்துக் கொண்டு, மேற்கொண்டும் பிளஸ் நிலையை அடைய முன்னேறிக் கொண்டிருக்கிறது. கடந்த சில மாதங்களில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருந்த 8326 செயல் படாத கழிப்பறைகளும் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டன.

2012 இல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் மாவட்டத்தின் எல்லா வட்டங்களிலும் செயல்படாத நிலையில் 8326 கழிப்பறைகள் செயல்படாத நிலைஇயில் இருப்பதாக பின்வரும் முறையில் கண்டறியப்பட்டன;

2017 அக்டோபரில் மறு ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது செயல் படாத நிலையில் இருந்த சுமார் 5000 கழிப்பறைகளை பயனாளிகள் தாங்களே சரிசெய்து பயனுக்குக் கொண்டு வந்து விட்டது தெரிய வந்தது. குறிப்பாக குன்றத்தூர், பரங்கிமலை, திருப்போரூர் போன்ற பகுதிகளில் கிட்டத்தட்ட எல்லாக் கழிப்பறை களையுமே பயனாளிகள் ரிப்பேர் செய்து அல்லது திரும்பக் கட்டி பயன்படுத்துகின்றனர். இந்த எண்ணிக் கையைச் சரிபார்ப் பதற்காக, மாவட்ட அதிகாரிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக 5000 கழிப்பறைகளில் 10 சதவிகிதத்தை ஆய்வு செய்து, அவை செயல்படுவதைக் கண்டறிந்தனர். அதன்பின்னர் 5000 கழிப்பறைகளுக்கு ஐஙஜஐ நுழைவு போடப்பட்டு அவ்வை செயல்படுபவை எனப் பட்டியலிடப்பட்டன.

மீதியுள்ள 3326 கழிப்பறைகளைப் பொறுத்த மட்டில், அவை முற்றிலும் சேதமடைந்தவையாகக் கண்டறியப் பட்டன. அந்தக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது, அவற்றுக்காக உள்ளூர் சுய உதவிக் குழுக்கள் தனியார் நிறுவனங்களைப் பயன் படுத்தி புதிய கழிப்பறைகளைக் கட்டிக் கொடுத்தன.இத்தகையக் கட்டுமானப் பணிகளை சுய உதவிக் குழுக்களின் தலைவர்களும், ஒட்டுமொத்த உதவியாளர்களும் கண்காணித்தனர். ♦

| வட்டத்தின் பெயர் | செயல்படாத கழிப்பறைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. காஞ்சிபுரம் | 541 |
| 2. அச்சிறுபாக்கம் | 603 |
| 3. சித்தாமூர் | 552 |
| 4. காட்டாங்கொளத்தூர் | 344 |
| 5. குன்றத்தூர் | 1437 |
| 6. லத்தூர் | 374 |
| 7. மதுராந்தகம் | 482 |
| 8. திருப்பெரும்புதூர் | 186 |
| 9. பரங்கிமலை | 435 |
| 10. திருப்போரூர் | 463 |
| 11. திருக்கழுக்குன்றம் | 308 |
| 12. உத்திரமேரூர் | 2360 |
| 13. வாலாஜாபேட்டை | 241 |
| **மொத்தம்** | 8326 |

# வெற்றிக் கதைகள்

## காயத்ரி பிரதம மந்திரி காட்டிய வழியில் தலைமைக் கொத்தராகப் பயிற்சி பெற்றார்



காயத்ரி ஜார்க்கண்ட் மாநிலத்தின் பின்தங்கிய குந்தி மாவட்டத்தின் குட்ஸோரா என்ற இடத்தைச் சேர்ந்தவர். அந்த ஊர் ஆள் கடத்தலுக்கும், கஞ்சா சாகுபடிக்கும் பெயர்போன இடம். ஆனால் இந்தப் பெண் சாதாரண சித்தாளாக இருக்கவில்லை. கட்டுமானப் பணிகளில் எல்லா இடங்களிலும் ஆண் கொத்தனார்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலையில், காயத்ரி கட்டுமான நுட்பங்களைக் கற்றுத் தேர்ந்து, 'ராணி' கொத்தராக மாறி ஆண்களுக்கு சரியான போட்டியாகத் திகழ்ந்தார்.பிரதமர் நரேந்திர மோடி காணொளிக் காட்சி மூலமாக இந்தப் பெண்மணியுடன் எட்டு நிமிடங்கள் உரையாடி, பாராட்டினார். இதனால் ஊக்கம் பெற்ற காயத்ரி, இப்போது தமது பகுதியில் தம்மைப் போன்ற பல பெண்களுக்கு கட்டிடம் கட்டுவதில் பயிற்சி தருகிறார். மேலும் தூய்மைப் பணிகளிலும் உதவிக் கரம் நீட்டி, கழிப்பறைகளைக் கட்டித் தந்திருக்கிறார். பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பல வீடுகளைக் கட்டிய காயத்ரி இப்போது தனக்குத் தானே சொந்தமாக ஒரு வீடு கட்டிக் கொள்கிறார். பிரதமரின் பாராட்டுக்களால் ஊக்கமடைந்த காயத்ரி, 30 பெண்கள் அடங்கிய ஒரு குழுவுக்கு கொல்லு வேலைப் பயிற்சி அளிக்கிறார். இதனால் அவர்கள் மற்றவர்களுக்கு வீடுகட்டித் தரும் அளவுக்கு வலுப்பெற்று விடுவார்கள். பிரதமரிடமே பாராட்டுப் பெற்று விட்டதால், இப்போது அண்டை மாவட்டங்களில் இருந்தும் இவளை வேலைக்கு அழைக்கின்றனர். கும்லா மற்றும் ஸிம்டேகா மாவட்டங்களின் நிர்வாகங்கள் தங்களது மாவட்டங்களிலும் பெண்களுக்கு கொத்தனா பயிற்சி தருமாறு அழைத்துள்ளன. மாநில அரசும் இப்போது பெண்களுக்கு கொத்தனார் பயிற்சி அளிக்கத் தொடங்கி விட்டது. 2016-ஆம் ஆண்டில் பெண் கொத்தனராகப் பயிற்சி பெற்ற பிறகு கடந்த மூன்றாண்டுகளில் ஏற்கனவே 15 வீடுகளை பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் கட்டித் தந்திருப்பதாக காயத்ரி கூறினார். "மக்கள் என் வேலையை விரும்புகின்றனர். எனது வீடு ஒரு சிறு குடிசையாக இருந்தது., எனது கணவர் மற்றும் குழந்தைகளின் உதவியுடன் என் வீட்டின் தரை தளத்தைக் கட்டி முடித்துவிட்டேன்." ♦

## பசந்தியா வேலை தேடும் ஆசையை விட்டொழித்து, இப்போது தூய்மைத் தூதுவராக மாறிவிட்டார்

சத்தீஸ்கர் மாவட்டத்தின் பிலாஸ்பூர் அருகே உள்ள ஸக்காரி நகர் பஞ்சாயத்தில் வசிக்கும் சந்தியா பகா, வணிகவியல் பட்டதாரி. இவர் நகரத்துக்குச் சென்று ஒரு வேலை பெற்றிருக்க முடியும். அதற்கு எதுவும் தடையாக இருக்க வில்லை. நல்ல தனியார் கம்பெனி வேலைகள் நிறையக் கிடைத்தன. ஆனால் இவளை பிரதமர் நரேந்திர மோடியின் தூய்மை பற்றிய சிந்தனைகள் வெகுவாகக் கவர்ந்தன. தூய்மைத் தூதுவராக மாறிட முடிவு செய்தார். இப்போது ஒரு சுய உதவிக் குழுவில் சேர்ந்து தமது கிராமத்தில் தூய்மைப் பணிகளை மேற்கொள்கிறார். 24 வயது சந்தியா மிகுந்த ஈடுபாட்டுடன் துப்புரவுப் பணியாளராக வேலை செய்கிறார். சுய உதவிக் குழு இவளுடைய வேலைக்கு ரூ.5000/- மட்டுமே சம்பளமாகக் கொடுக்கிறது, ஆனாலும் தனது வேலையால் மிகவும் திருப்தி அடைந்திருக்கிறார். ஒவ்வொரு வீட்டில் இருந்தும் குப்பைகளைச் சேகரித்து வருகிறார். கிராமத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமென உறுதி பூண்டிருக்கிறார். குப்பைகளை ஒரு ரிக்ஷாவில் வைத்து



ரிக்ஷாவில் குப்பைகளை எடுத்துச் செல்லும் சந்தியா

எடுத்துச் செல்கிறார். முதல் தடவை இவள் ஒரு ரிக்ஷாவை ஓட்டிய போது கீழே விழுந்து காயம் ஏற்பட்டது, மக்கள் சிரித்தனர். ஆனால் பிரதமர் மோடியினால் ஊக்கமடைந்த சந்தியா, அவர்களை அலட்சியப் படுத்திவிட்டாள். எப்போதுமே வித்தியா சமாக ஏதாவது செய்ய வேண்டுமென விரும்பும் சந்தியா, தமது தந்தைக்கு குடும்பப் பொறுப்புக்களில் கை கொடுக்கிறார். நகரத்தில் தனியார் நிறுவனத்தில் வேலை கிடைத்த போதும், கிராமத்திலேயே இருந்து ஏதாவது அர்த்தமுள்ள வேலை செய்வது எனத் தீர்மானித்து விட்டார். சுய உதவிக் குழுவின் மணிகாஞ்சன் மையத்தைச் சேர்ந்த சந்தோஷி அக்காவைத் தொடர்பு கொண்டார். அவர் நல்ல வழி காட்டினார். முதல் தடவையாக ஒரு ரிக்ஷா இவளுக்கு வழங்கப்பட்டபோது மனதில் சிறிது தயக்கம் இருந்தது, ஆனால் மெல்லமெல்ல மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கவே மன உறுதி வலுவடைந்தது. பெரிய வேலை, சின்ன வேலை என்று எதுவுமில்லை. நினைப்பில்தான் வித்தியாசம் என்று நினைத்தாள், இவள் முடிவை முதலில் தந்தை ஏற்கவில்லை. மக்களும் சமூகமும் என்ன நினைக்குமோ எனப் பயந்தார். ஆனால் இவளுடைய கடின உழைப்பையும், ஈடுபாட்டையும் பார்த்த பிறகு அவரும் உறுதியாக ஆதரவு அளித்தார். துப்புரவு என்பது புனிதமான வேலை; வாழ்நாள் முழுவதும் தூய்மைக் காவலராகப் பணி புரிவேன் என்று கூறுகிறார். மாலையில் இவள் பெண்களின் கூட்டத்தை கிராம மன்றத்தில் கூட்டி துப்புரவு பற்றிய விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்கிறாள். ♦

# இந்தூர் ஊரக மாவட்டத்தின் துப்புரவுத் தூதுவர்கள்: சதுர்சிங்-மேடம் பட்டுனி

இந்தூர் ஊரக மாவட்டத்தின் கிராமப்புற மக்கள் 2016 ஜனவரி முதல் திறந்தவெளி மலக்கழிப்பில் இருந்து விடுபட்டு விட்டனர். அதன் பிறகு அவர்கள் தங்களது நிலையில் இருந்து விலகாமல் இருப்பதோடு, திட மற்றும் திரவக் கழிவுகளை அப்புறப்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் சிமென்ட் கான்க்ரீட் சாலைகளும், சாக்கடைகளும் போடப்பட்டுள்ளன. 30 கிராமங்களில் மோட்டார் வாகனங்கள் மூலமாக குப்பைகள் அள்ளப்படுகின்றன. அவை அந்தந்த கிராமங்களிலேயே பிரிக்கப் படுகின்றன. சில கிராமங்களில் உள்ளூரில் கிடைக்கும் வாகனங்களை வைத்தே குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன.

கடந்த இரண்டாண்டுகளில் நகர்ப் பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வின்படி, இந்தூர் மாவட்டம் நெ.1 நிலையில் இருந்தது. இந்த ஆண்டில் ஊரகப் பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வின்படி, பேரூர்கள் மற்றும் நகரங்களில் இருப்பது போலவே கிராமங்களிலும் துப்புரவுப் பணி நடைபெறுவதன் அடிப்படையில் மாவட்டங்களுக்கு ரேங்க் தரப்படும்.

இந்தூர் மாவட்டப் பஞ்சாயத்து புதுமையான முறையில் செயல்பட்டதால், வீடு தோறும் ஒரு சின்னத்தைப் பயன்படுத்தி துப்புரவுச் செய்தி பரப்பும் நாட்டின் முதல் மாவட்டமாக இந்தூர் ஆனது. இந்தூர் கலாச் சாரத்தைக் கருத்தில் கொண்டு, சதுர் சிங் மற்றும் மேடம் பட்டுனி என்னும் கதாபாத்திரங்கள் துப்புரவுச் செய்தி யைப் பரப்பும் தூதுச் சின்னங்களாக ஆக்கப்பட்டன. சதுர் சிங் மற்றும் மேடம் பட்டுனி மால்வா உடையணிந்து கையில் துடைப்பத்தையும், ஒரு வாளியையும் துப்புரவின் அடையாளமாக ஏந்தி நிற்கின்றனர்.

பசதுர்சிங் மற்றும் மேடம் பட்டுனி அடையாளச் சின்னம் இந்தூர் மாவட்டப் பஞ்சாயத்து அலுவலகத்தில் 21-08.2018 அன்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர் திருமதி கவிதா பட்டிதார், மாவட்ட ஆட்சியர் திரு நிஷாந்த் வர்வாடே, சிஇஓ திருமதி நேஹா மீணா மற்றும் மாவட்டப் பஞ்சாயத்து உறுப்பினர்களின் முன்னிலையில் வெளியிடப்பட்டது.




திறந்தவெளி மலக்கழிப்பு இல்லாத மாவட்டமாக மாற்றியதைப் போல வே துப்புரவின் அடுத்த கட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தும் நோக்குடன் சிறப்பு இயக்கம் ஒன்றைத் தொடங்குவதற்காக சின்னத்தின் கதாபாத்திரங்கள் உருவாக்கப்பட்டன. அந்தச் சின்னத் தை உருவாக்கும்போது அதன் பாத்திரங்கள் மால்வா வட்டாரத்தைப் பிரதிபலிப்பவையாகவும், உள்ளூர் மக்களுக்கு ஏற்புடையனவாகவும் இருக்க வேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. இந்தக் கதை மாந்தர்கள் தங்களைச் சேர்ந்தவர்கள் என்று மக்கள் உணர்ந்து அவர்கள் ஏற்கும் வகையில் செய்தியைப் பரப்ப வேண்டும் என்பதற்காக மாவட்ட அதிகாரிகளும், லலித்தியா ஃபவுண்டேஷனும் சேர்ந்து மால்வா கலாச்சாரத்தில் இருந்து தோன்றிய சதுர்சிங் மற்றும் மேடம் பட்டுனி மூலமாக துப்புரவுச் செய்தியைக் கொண்டு செல்வதோடு, இந்தக் கதை மாந்தர்களை வீதி நாடகங் கலிலும் பயன்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவார்கள்.

பசதுர்சிங் மற்றும் மேடம் பட்டுனி சின்னம் கிராம சுகாதாரத்தை மேம்பட்ட வகையில் செயல்படுத்தும் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும். இந்தக் கதைமாந்தர் அடிப்படையில் உயிர்த்துடிப்புள்ள சின்னங்கள் உருவாக்கப்பட்டன. துப்புரவுச் செய்தியின் பல்வேறு அம்சங்களை விளக்கும் காமிக் புத்தகங்களும் எழுதப்பட்டு அச்சிடப்படுகின்றன.

**1. உயிர்த்துடிப்பான சின்னம்:** இந்தக் கதை மாந்தர்களின் உடைகளை அணிந்த நடிகர்கள் மக்களிடையே சென்று கேளிக்கை விளையாட்டுக்கள் மூலமாக துப்புரவுப் பழக்கங்களைக் கிராம மக்களிடையே ஏற்படுத்துகின்றனர்.

**2. காமிக் புத்தகங்கள்:** ஒரு காமிக் புத்தகம் தயாரிக்கப்பட்டு வினியோகிக்கப்படுகிறது. அதில் குழந்தைகளின் வளரும் பருவத்தில் இருந்தே ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை உருவாக்கும் வகையில் துப்புரவு பற்றிய எல்லா அம்சங்களும் நகைச்சுவையாகச் சொல்லப்பட்டுள்ளன.

**3. சுவர்களில் எழுதுதல்:** சுவர்களில் இந்தக் கதை பாத்திரங்கள் வரையப்பட்டு வீடுதோறும் செய்தி கொண்டு செல்லப்படுகிறது.

**பசமூக ஊடகங்கள்:** சதுர்சிங்-மேடம் பட்டுனி என்ற தலைப்பில் துப்புரவுச் செய்திகளைப் பரப்பும் ஒரு செயலி சமூக ஊடகங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்மூலமாக மக்கள் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வெளியிடலாம். ♦

# அண்மைக்கால நடவடிக்கைகளின் சுருக்கம்

## தூய்மை இருவார விழா






2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தூய்மை இருவார விழா தூய்மை இந்தியா இயக்கத்தின் ஒரு சிறப்பான திட்டமாகும். எல்லா மத்திய அமைச்சகங்களையும், துறைகளையும் தூய்மை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி, அவற்றின் மூலமாக தூய்மை என்பது எல்லோரும் ஈடுபட வேண்டிய விஷயம் என்பதை காட்டுவதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்த கண்ணோட்டத்தின் அடிப்படையில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. எல்லா மத்திய அமைச்சகங்களும், துறைகளும் ஆண்டு முழுவதும் துப்புரவு நடவடிக்கைகளை இருவார அடிப்படையில் மேற்கொள்ள இதில் கணிசமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

### தூய்மைச் சின்னங்கள் உள்ள இடங்கள் (எஸ்ஐபி)

குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் இந்தியா முழுவதிலும் உள்ள 100 மரபுச் செல்வத் தலங்களைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் கவனம் செலுத்திட தொடர்புடையவர்களை ஈடுபடுத்தி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நகரவளர்ச்சி சுற்றுலா மற்றும் கலாச்சார அமைச்சகங்களுடன் கூட்டுச் சேர்ந்து செயல்படுத்தப்படும் இந்த நிகழ்ச்சிகளின் குறிக்கோள், இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் எடுப்பாகத் தெரியும் வகையில் சுத்தத்தைப் பேணுவதாகும். ஸ்ரீ ராகவேந்திரா ஸ்வாமி மட மந்திராலயம் (ஆந்திரப் பிரதேஷ்), ஹஸார்துவாரி அரண்மனை (மேற்கு வங்கம்), ஸ்ரீ பிரம்ம சரோவர் ஆலயம் (ஹரியாணா), விதுர் குட்டி ஆலயம் (உத்தரப் பிரதேஷ்), மானா கிராமம் (உத்தாரகண்ட்), பங்கோங் ட்சோ (ஜம்மு-காஷ்மீர்), ஸ்ரீ நாக் வாசுகி ஆலயம் (உத்தரப்பிரதேஷ்), நூபி கெய்த்தெல் (மணிப்பூர்), ஸ்ரீதர்ம சாஸ்தா ஆலயம் (கேரளா), கண்வாஷ்ரம் (உத்தராகண்ட்) ஆகிய இடங்களில் துப்புரவுப் பணிகளை அபாரமான அளவுக்கு நகரசபைகள் மேற்கொண்டுள்ளன.




**தூய்மை இந்தியா இயக்கம் கிராமிய ஒரு கண்ணோட்டம்**

- 2018 ஆகஸ்ட் 2 நிலவரப்படி தூய்மைப் பணிகள்: 89.07%
- 2014 அக்டோபர் 2 முதல் கட்டப்பட்ட குடும்பக் கழிப்பறைகளின் எண்ணிக்கை: 7,97,14,455
- திறந்தவெளி மலக்கழிப்பு இல்லாத கிராமங்கள்: 4,09,442
- நமாமி கங்கே திட்டத்தில் திறந்தவெளி மலக்கழிப்பு இல்லாத கிராமங்கள்: 4,465
- திறந்தவெளி மலக்கழிப்பு இல்லாத மாவட்டங்கள் : 421
- திறந்தவெளி மலக்கழிப்பு இல்லாத மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள்: 19

### தூய்மை மதிப்பீடு கிராமியம் 2018

குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் தூய்மை மதிப்பீடு கிராமியம் 2018 என்னும் நடவடிக்கையைத் தொடங்கி, அதன் மூலமாக எல்லா மாவட்டங்களிலும் 2018ஆகஸ்ட் 1 முதல் 31 வரை துப்புரவுப் பணிகள் பற்றிய சுயேச்சையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இதில் அளவு மற்றும் தரம் என்ற அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது, மிக நன்றாகச் செயல்பட்ட மாநிலங்களுக்கும் மாவட்டங்களுக்கும் 2018 அக்டோபர் 2 ஆம் தேதி விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த மதிப்பீட்டு நடவடிக்கையில் இந்தியா முழுவதிலும் உள்ள 698 மாவட்டங்களில் 6980 கிராமங் களில் ஆய்வுகள் மேற்கொள் ளப்பட்டன.




### தூய்மைப் போராட்டம்

ஸ்வச் ஸங்க்ரஹா (www.swachhsangraha.gov.in) என்னும் வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் உபயோகிப்பாளர்களுக்கு தூய்மை தொடர்பான தகவல்கள் உடனுக்குடன் திறம்பட வழங்கப்படுகின்றன. மிகவும் எளிமையான இந்த வலைதளத்தில் நல்ல பழக்க வழக்கங்கள், உள்ளூர் தீர்வுகள், புத்தாக்கங்கள் போன்றவை மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துக்களில் நேரடியாக பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இந்த வலைதளம் அறிவையும், அனுபவத்தையும் பரப்பி தூய்மை இந்தியா இயக்கம் செயல்படுத்தப்படுவதை விரைவுபடுத்துகிறது. ♦

सत्यमेव जयते

இந்திய அரசு
பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

பின்வரும் பிரிவுகளில் 2019 ஆம் ஆண்டில் (மதிப்பீட்டு ஆண்டு 2017-18) வழங்கப்பட இருக்கும்

# தேசிய விருதுகளுக்கான

ஆன்லைன் விண்ணப்பங்களை பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் வரவேற்கிறது

## தீன்தயாள் உபாத்யாய பஞ்சாயத்து ஸஷக்திக்கரன் புரஸ்கார் [DDUPSP]

பொது மற்றும் கருத்து அடிப்படையிலான பிரிவுகளில் எல்லா மூன்று அடுக்கு பஞ்சாயத்துக்களுக்கும் (கிராம, ஒன்றிய மற்றும் மாவட்ட)

## நானாஜி தேஷ்முக் ராஷ்டிரிய கௌரவ் கிராம சபா புரஸ்கார் [NDRGGSP]

மிகச்சிறப்பாக கிராம சபைக் கூட்டம் நடத்திய கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு

## கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சித் திட்ட விருது

பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் வகுத்த மாதிரி வழிகாட்டு விதிகளுக்கு இசைய மாநில / யூ.பி வெளியிட்டுள்ள குறிப்பான வழிகாட்டு விதிகளுக்கு ஏற்ப கிராம வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்கும்படி கிராமப் பஞ்சாயத்துக்களை ஊக்கப்படுத்துவதற்காக

எல்லாப் பிரிவு விருதுகளுக்காகவும் ஆன்லைன் விண்ணப்பப் படிவங்களுக்கு இணையத்தில் 2018 செப்டம்பர் 28 முதல் நுழைவுகள் ஆரம்பித்துள்ளன. இணைய **http;//www.panchayataward.gov.in.** மேலும் விவரங்கள் இந்த இணையத்தில் கிடைக்கும். விருது வழிகாட்டு விதிகள் மற்றும் ஆன்லைன் நாமினேஷன்களை நிரப்புவது தொடர்பான வழிகாட்டி விதிகளுக்கு அமைச்சகத்தின் இணைப்பு **http;//www.panchayat.gov.in/** மற்றும் **http;//panchayataward.gov.in/** பார்க்கவும். பஞ்சாயத்துக்கள் மாநில/யூ.பி பஞ்சாயத்து ஆட்சித் துறையின் மைய அதிகாரிகளுடன் அல்லது அவற்றின் தேசிய தகவல் மைய ஒருங்கிணைப்பாளருடன் தொடர்பு கொண்டு ஆன்லைன் நாமினேஷன் படிவங்களை நிரப்புவதற்கு உதவி பெறலாம்.
இந்த விருதுகளுக்கு மேற்கொண்டு விளம்பரம் தருமாறு மாநில /யூபி அரசுகள் கோரப்படுகின்றன.

பஞ்சாயத்துத் துறை அமைச்சகம்

(புனீத் சர்மா)
அண்டர் செக்கரட்டரி, இந்திய அரசு



நரேந்திர சிங் தோமர்,
அமைச்சர், ஊரக வளர்ச்சி,
பஞ்சாயத்து ராஜ் & சுரங்கங்கள்



## 2 அக்டோபர் முதல் 31 டிசம்பர் 2018வரை

# கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டம் [GPDP] 'அனைவருக்குமான திட்டம், அனைவருக்குமான வளர்ச்சி' ஜன யோஜனா அபியான்

## எல்லாக் கிராமப் பஞ்சாயத்துக்களும்/கிராம சபைகளும் தங்களது கிராமத்தின் வளர்ச்சிக்காக இந்த இயக்கத்தில் சேருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன

### இயக்கத்திற்கான நடவடிக்கை காலண்டர்

| வ.எண் | நடவடிக்கைகள் | கால அட்டவணை |
|---|---|---|
| 1. | உதவியாளர் பயிற்சி முறை வெளியிடுதல் | 30 ஆகஸ்ட் 2018 |
| 2. | மைய அதிகாரிகளை (மாநில, மாவட்ட & ஒன்றிய நிலைகளில்) நியமித்தல் மற்றும் எல்லா மைய அதிகாரிகளும் வலைதளத்தில் பதிவு செய்தல் | 10, செப்டம்பர் 2018 |
| 3. | கிராமசபைக் கூட்ட அட்டவணைகளை பதிவேற்றுதல் | 10, செப்டம்பர் 2018 |
| 4. | ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துக்கும் உதவியாளர்களை நியமித்தல் | 10, செப்டம்பர் 2018 |
| 5. | உதவியாளர்களுக்கு பயிற்சி நிறைவு | 15, செப்டம்பர் 2018 |
| 6. | கிராம சபைக் கூட்டங்களுக்காக முன்னணி ஊழியர்களை நியமித்தல் | 15, செப்டம்பர் 2018 |
| 7. | ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் பொதுத் தகவல் பலகை வைத்து அது இருக்கும் இடத்தின் படங்களை வலைதளத்தில் ஏற்றுதல் | 15, செப்டம்பர் 2018 |
| 8. | கிராமசபைக் கூட்டங்களின் படங்களை அவை நடக்கும் இடங்களுடன் பதிவேற்றுதல் | கிராமசபைக் கூட்டம் நடந்த உடனே |
| 9. | பிளான் பிளஸ் செயலியில் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தை வெளியிடுதல் | 31 டிசம்பர் 2018 |

ஜன யோஜனா அபியான்/ஜிபிடிபி வலைதளம்: gpdp.nic.in
ஹெல்ப்டெஸ்க்: 011-23074309, 011-23386556, 011-23383816, 011-23386140
எங்களுடன் இணையுங்கள்: https://twitter.com/people_plan
https://www.facebook.com/PeoplesPlanCampaign

Tamil

பஞ்சாயத்துத் துறை அமைச்சகம்

**பஞ்சாயத்துத் துறை அமைச்சகம்**
www.facebook.com/MinistryofPanchayatiRaj
@mopr_goi

**ஊரக மேம்பாடு, அமைச்சகம்**
www.facebook.com/IndiaRuralDev

**குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம்**
www.facebook.com/MODWS
@swachhbharat

एक कदम स्वच्छता की ओर


பஞ்சாயத்திராஜ் அமைச்சகத்தால் அச்சிடப்பட்டு பிரசுரிக்கப்படுகிறது
**தலைமை ஆசிரியர்:** அமர்ஜீத் சின்ஹா, செயலர், பஞ்சாயத்திராஜ் மற்றும் ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சகம்
**அச்சிட்டோர்:** M/s தாம்ஸன் பிரஸ், ஆ-315, ஃபேஸ்-1, ஒக்லா-1, ஒக்லா இண்டஸ்ட்ரியல் ஏரியா, புது டில்லி-110020
**வெளியிடுவோர்:** பஞ்சாயத்திராஜ் அமைச்சகம், இந்திய அரசாங்கம், சர்தார் பட்டேல் பவன், புது டில்லி-110001


"The translation of 'Gramoday Sankalp' has been carried out by M/s Jagran Prakashan Ltd. Any inadvertent error or omissions, if any, found in the translation is the responsibility of the agency."